www.padippakam.com

1 - 15 அக்டோபர் '93 ரூ. 3.00

# புதிய ஜனநாயகம்

## ஜெயா ரௌடி அரசியலுக்கு எதிர்க்கட்சி பதிலென்ன?



படிப்பகம்

www.padippakam.com

# போலிக் கம்யூனிஸ்டுகளின் சக்களத்தி சண்டை

## ஒருவரையொருவர் அம்பலப்படுத்திக் கொள்கிறார்கள்

அரசு பதவி, பணம், அதிகாரத்திற்காக சண்டை போடுவது ஆளும் வர்க்க கட்சிகளுக்குத்தான் என்பது இல்லை; போலி கம்யூனிஸ்டுகளும் இதில் சாதனை படைத்து வருகின்றனர். உத்தமபாளையம் வட்டம், கம்பம் பகுதியில் நடந்த சம்பவங்களும் 'இடது', வலது போலிக் கம்யூனிஸ்டுகளின் நடவடிக்கைகளும் இதற்கு சிறந்த அண்மைகால உதாரணம்.

கம்பம் நகரின் சி.பி.ஐ. செயலாளர் பி.எஸ்.ராஜனும் சி.பி.எம்.-ன் முக்கியத் தலைவரும் சி.ஐ.டி.யு. செயலாளருமான என்.எஸ். நைனாரும்தான் சக்களத்தி சண்டையின் பிதாமகன்கள். ராஜன் முதலில் சி.பி.எம்.-ல் இருந்தவரே. அதிலிருந்து வெளியேறி. சி.பி.ஐ.-ல் சேர்ந்த பின்னரே இவர்களின் சண்டை தொடங்கி சந்திக்கு வந்து நாறுகிறது. பொதுக்கூட்டம், தர்ணா, ஆர்ப்பாட்டம், ஊர்வலம், நிதிவசூல் என கட்சிக்கு ஆள்பிடிப்பதில் 'நீயா நானா' கதைதான்! சி.பி.எம்.-லிருந்து வெளியேறி சி.பி.ஐ.-ல் சேர்ந்தவர்களின் பெயர்களுடன் திடீர் அறிவிப்பு தட்டிகள் தொடங்கினால் 'இல்லை, இல்லை நாங்களே பெரிய கட்சி'' என்று சி.பி.எம். பதிலடி கொடுக்கும் பொதுக்கூட்டம் நடைபெறும்.

அண்மையில் கம்பம் - தாத்தப்பன் குளத்தில் நடந்த சி.பி.எம். கூட்டத்தில் ''அவர் (ராஜன்) செட்டியார் சாதி சங்கத்தில் இருக்கிறார். சாதிக்குச் சொந்தமான சுடுகாட்டு நிலத்தை மோசடியாக விற்று மாட்டிக் கொண்டார். நாங்கள்தான் பிறகு காப்பாற்றி விட்டோம்'' என்று பேசினார்கள். உடனே ஆத்திரமாகி பதில் கூட்டம் போட்ட சி.பி.ஐ. கட்சியினர் ''நைனார் விபச்சாரியை வப்பாட்டியாக வைத்திருக்கிறார். நைனாரின் மகள் திருமணத்திற்கு 78000 ரூபாய் வசூலித்துக் கொடுத்தவர் எங்கள் பி.எஸ்.ராஜன்தான்! கம்பம் நகர ஜமாத் தலைவர் அஜீஸ் என்பவரிடம் 7000 ரூபாய், தி.மு.க. பிரமுகர் இராமகிருட்டிணனிடம் 3000 ரூபாய் மற்றும் இலவசமாக அவரது திருமண மண்டபம், காங்கிரசு பிரமுகரும் போடி ஐயர் மகனுமான சிவா என்பவரிடம் 10000 ரூபாய் என வாங்கி கொடுக்கப்பட்டது. ஆதாரம் வேண்டுபவர்கள் மேற்கண்ட நபர்களிடம் நேரில் சென்று கேட்டுக் கொள்ளுங்கள்'' என்று பட்டியலிட்டார்கள்.

சில வருடங்களுக்கு முன்பு கம்பத்தின் பிரபல சி.பி.எம். பிரமுகரும் தீக்கதிர் பத்திரிக்கை தொடர்பாளருமான அப்துல்வகாப் என்பவர், தனக்குச் சொந்தமான காலியிடத்தை உள்ளூர் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தானமாக எழுதிக் கொடுத்தார். ஆனால் அந்த இடத்தில் தற்போது சொகுசான வீடுகட்டி குடியிருந்து வருகிறார்



என்.எஸ்.நைனார். வகாப் எழுதிக் கொடுத்த உண்மையானப் பத்திரத்தை மூடி மறைத்துவிட்டு, நைனார் விலைக்கு வாங்கியதைப் போன்ற ஒரு ஃபோர்ஜரி பத்திரம் தயாரித்துவிட்டார்கள். அதை நெல்தவிட்டு மூட்டைக்குள் 15 நாள் சொருகி வைத்து (நெல் உமியின் சூட்டினால் பழுப்பேறும்) பழைய பத்திரம் போல உருமாற்றிவிட்டார்கள். இந்த மோசடிக்கு உடந்தையாக இருந்தவர் (சி.பி.எம்-ல் இருந்தபோது) பி.எஸ். ராஜன்தான், இன்று இதை சந்திக்கு கொண்டுவந்தார்.

இவர்களது நாய்ச் சண்டையே வேடிக்கையான ஒன்றுதான். இப்படி எதிரும் புதிருமாக அம்பலப்படுத்திக் கொள்கிற அதே சமயம் இடதுசாரி கூட்டணி இயக்கங்கள் என்று வந்தால் சேர்ந்து முழக்கமிடுவார்கள். ''சி.பி.எம். காரர்களே இத்துடன் நிறுத்திக் கொள்ளுங்கள். மேலும் தொடர்ந்தால் இருவருக்குமே அசிங்கம். விரைவில் நடக்கவிருக்கும் இடதுசாரி கூட்டணி போராட்டத்தில் நாம் பங்கேற்க வேண்டியுள்ளது'' என்று மேடையிலேயே எச்சரிக்கை விட்டுக்கொள்வதும் நடந்தது. இச் சண்டையால் மேலும் பல ரகசியங்கள் வெளிவந்துவிடக்கூடாது என்பதற்காக இரு கட்சிகளின் மாவட்ட கமிட்டி அளவில் சமாதானத்திற்கான பேச்சுவார்த்தை ஏற்பாடுகளும் நடந்து வருகிறது.

ராஜனும் நைனாரும் பிற ஓட்டுக்கட்சி தலைவர்களுக்கு எவ்விதத்திலும் சளைத்தவர்கள் இல்லை என்பதையே அவர்களின் அன்றாட அரசியல் நடவடிக்கைகள் காட்டுகின்றன. நிலம், வீடு முதலான சொத்து தகராறுகளுக்கு பஞ்சாயத்து பேசுவது; ரேசன் கார்டு, லோன் வாங்கிக் கொடுப்பது, இவற்றுக்காக கணிசமான தொகையை சம்பந்தப்பட்டவர்களிடம் வாங்கிக் கொள்வது; சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து வாங்கி அதிகாரி - போலீசுக்கு லஞ்சம் கொடுத்து காரியத்தை முடிப்பது; கஞ்சா, சாராயம் விற்றாலும்கூட ''விடுங்கள் சார்; நம்ம ஆளுதான்'' என்று அவர்களை போலீசிடமிருந்து மீட்டுவருவது; இதுபோன்றவர்கள் போலீசு நிலையத்திற்கு கட்டும் மாமூலைக் கூட குறைத்து தருவதற்கு போலீசோடு பேரம் பேசுவது முதலானவையே இவர்களின் வாடிக்கையான நடவடிக்கை. இவர்களிடம் பஞ்சாயத்திற்கும் பேரத்திற்கும் உதவி என வருபவர்களை தமது அமைப்பின் உறுப்பினர்கள் என சந்தா வசூலிப்பது, அதுவும் ஒருவருக்கே 5, 10 எண்ணிக்கையளவில் ரசீது போட்டுக் கொடுத்து உறுப்பினர்களின் போலி கணக்கு காட்டுவது, உடனே கிளை தொடங்கிவிடுவது இதுதான் இப்போலிகளின் சாராம்சமான அரசியல் நடவடிக்கை.

இதிலும் கட்சி இயக்கங்களுக்காக இவர்கள் நிதிவசூல் செய்யும் 'கலையே' தனி! விவசாயிகளின் கூலி உயர்வுக்கு ஊர்வலம் போவார்கள். ஆனால் உள்ளூர் பண்ணையார் காமாட்சி கவுண்டர் ஆயிரக்கணக்கில் நிதியளித்திருப்பார்! தென்னை மர மேறும் தொழிலாளருக்காக ஆர்ப்பாட்டம் நடத்துவார்கள். ஆனால் ஏராளமான தோப்புக்குச் சொந்தக்காரர்களான ராமகிருட்டிணனும் (தி.மு.க.), ஆர்.டி.கோபாலும் (அ.தி.மு.க.) 5000 ரூபாய் நிதியளித்திருப்பார்கள்! காங்கிரசின் ஊழலை எதிர்த்து பகலெல்லாம் முழங்குவார்கள். ஆனால் காங். பிரமுகரான போடி ஐயரின் மகன் சிவாவிடம் நிதிபெற்றிருப்பார்கள்! ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கில் நிதியை இப்படித்தான் 'திறமையாக' திரட்டுகிறார்கள்.

பாராளுமன்ற பன்றிகளாகி, நரகலை உடம்பெல்லாம் தடவிக்கொண்டு நிற்கும் போலிக் கம்யூனிஸ்டுகளைக் காண சகிக்கவில்லை. இந்த அசிங்கங்களின் தலைமையின் கீழ் உள்ள அணிகளில் புரட்சிகர சிவப்பு சிந்தனையுள்ளவர்கள் நிச்சயம் இருக்க முடியாது.

— தகவல்:
விவசாயிகள் விடுதலை முன்னணி
உத்தமபாளையம் வட்டம்

### அறிவிப்பு

அன்பார்ந்த வாசகர்களே!

நிதிநெருக்கடியின் காரணமாகவே புதிய ஜனநாயகம் இதழ் மாதம் ஒன்று என்ற அளவில் வந்து கொண்டிருக்கிறது. முகவர்கள் உடனுக்குடன் பணம் நிலுவையின்றி அனுப்பியும் சந்தாவை அதிகரித்தும்; வாசகர்கள் நண்பர்களிடம் இதழை அறிமுகப்படுத்தி சந்தா, நன்கொடை வசூலித்து தந்தும் ஒத்துழைக்க கோருகிறோம். இனி இதழை முறையாக வெளிக்கொணர முயலுகிறோம். மற்றபடி இவ்விதழில் ''ஆர்.எஸ்.எஸ்.-ன் பார்ப்பன - பாசிச பாரம்பரியம்'' என்ற கட்டுரைத் தொடர் இடமின்மை காரணமாக வெளியிட முடியவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

படிப்பகம்

அன்புடன்

www.padippakam.com

புதிய
ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய
அரசியல் ஏடு

எட்டாம் ஆண்டு

21-22

16-31 செப். - 1-15 அக். '93

உள்நாடு:
தனி இதழ்: ரூ 3.00
ஆண்டு சந்தா: ரூ 72.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 16

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
இரா. சண்முகராஜ்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
4, சாமியார் தோட்டம்,
ஆலந்தூர் சாலை,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.

# ராணிப்பேட்டை - பழநி இடைத்தேர்தல்கள் அரசியல் ரௌடித்தனத்துக்கு வெற்றி

''நடந்து முடிந்த பழநி, இராணிப்பேட்டை இடைத்தேர்தல்களில் ஆளும் பார்ப்பன-பாசிச ஜெயா கும்பல் வெற்றி பெற்றுள்ளபோதிலும், அதன் அரசியல் செல்வாக்கின் சரிவு தொடங்கிவிட்டதையே காண முடிகிறது. ஒரு பொதுத் தேர்தல்களில் ஈடுபடுவதைப்போல தனது ஆணையில் உள்ள பலம் முழுவதையும் ஏவியும் தலை தப்பினால் போதும் என்கிற அளவுக்கே வெற்றி ஈட்ட முடிந்தது. ராணிப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் மட்டும் 11 அமைச்சர்கள், 45 எம்.எல்.ஏ.கள், 7 வாரியத் தலைவர்கள், ஏராளமான அரசு அதிகாரிகள் ஒரு மாதத்திற்கு மேல் முகாமடித்து வாக்காளர்களைத் திணறடித்துள்ளார்கள். மற்றவர்கள் பழநி தொகுதியில் குவிக்கப்பட்டார்கள். பாசிச, பொறுக்கி அரசியலின் நாயகி ஜெயாவே 20 நாட்கள் பிரச்சாரச் சுற்றுப்பயணம் நடத்தினார். குடிநீர்க் குழாய்கள், சாலைகள், சாக்கடைகள் முதல் புதிய தொழில்கள் வரை பல நூறு கோடி ரூபாய் திட்டங்கள். இவை தவிர வாக்காளர்களுக்கு மோதிரம், மூக்குத்தி, வேட்டி-சேலை, ஒட்டுக்கு 100-150 ரூபாய் என்று விலை கொடுத்தும், அடியாட்களை அமர்த்தியும் ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு பத்துக்கோடி ரூபாய் வீதம் ஆளும்கட்சி செலவழித்துள்ளது. அப்படி இருந்தும் குறைந்த அளவு வாக்குகள் வித்தியாசத்திலேயே அது வெற்றி பெற முடிந்தது.

ஆட்சிக்கவிழ்ப்பு அல்லது கலைப்பு முயற்சிகளைத் தற்காலிகமாவது தடுப்பதற்கு எப்படியாவது இத்தேர்தலில் வெற்றி பெற வேண்டிய அவசியம் பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலுக்கு இருந்தது. ஆகவே எல்லாவகையான அதிகார முறைகேடுகள், தேர்தல் தில்லுமுல்லுகள், அராஜக வன்முறைகளிலும் ஈடுபடுவதில் ஒரு புதிய சிகரத்தையே அக்கும்பல் தொட்டது. வேறு தொகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான குண்டர்களும், வாகனங்களும் இறக்குமதி செய்யப்பட்டு வன்முறை வெறியாட்டங்களிலும், கள்ள ஓட்டுக்கள் போடுவதிலும் ஈடுபட்டு கையுங்களவுமாக பிடிபட்டார்கள். ஜெயா பாதுகாப்பு என்கிற பெயரில் எதிர்க்கட்சித் தலைவர்கள் பிரச்சாரம் செய்ய முடியாமல் தடுக்கப்பட்டனர். எதிர்க்கட்சித் தொண்டர்கள், பிரச்சாரகர்கள் மட்டுமின்றி வேட்பாளர்களே போலீசாலும் ஆளும் கட்சி குண்டர்களாலும் தாக்கி மருத்துவமனையில் முடக்கப்பட்டனர். எதிர்க்கட்சிகளின் வாகனங்கள், பிரச்சார சாதனங்கள் அடித்து நொறுக்கிக் கொளுத்தப்பட்டன. வாக்குப்பதிவுகள் தொடங்கும் முன்னரும், முடிந்த பின்னர் 'சீல்' உடைக்கப்பட்டும் கள்ள ஓட்டுக்கள் போட்டனர். இத்தனையும் ஜெயா கும்பலுடன் பகைமை பாராட்டும் தேர்தல் தலைமைக் கமிசனர் சேஷனின் எச்சரிக்கை, உருட்டல் மிரட்டல், கண்காணிப்பையும் மீறி தேர்தல் விதிமுறைகளை எல்லாம் கேலிக்கூத்தாக்கும் வகையில் நடந்துள்ளன.

இரு 'திராவிட'க் கட்சிகளில் ஏதாவது ஒன்றுடன் தேர்தல் கூட்டு வைத்து அரசியல் ஆதாயம் தேடும் காங்கிரசு இந்த முறை ஜெயாவுடனான கூட்டை முறித்துக் கொண்டு தி.மு.க.வுடன் நடத்திய பேரம் திகையாமல் போனது. அதனால் இந்த இடைத்தேர்தல்களில் படுதோல்வி கண்டு அதன் உண்மை பலம் தெரிந்துவிட்டது. இதனால் அக்கட்சிக்குள் தற்காலிகமாக ஓய்ந்துபோய் இருந்த குடுமிப்பிடிச் சண்டை மீண்டும் ஆரம்பித்துவிட்டது. இது பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலுக்கு இன்னுமொரு வெற்றி. தமிழ் நாட்டின் எல்லா பெரிய கட்சிகளுமே கவர்ச்சிவாத, தனிநபர் வழிபாடு அடிப்படையில் செல்வாக்கும் பெற்றிருப்பதால், மாற்று அரசியல், மாற்றுத்தலைமை ஆகியவற்றை உருவாக்க முடியாமல் போலிக் கம்யூனிஸ்டுகள் செயலிழந்து தனிமைப்பட்டு போயுள்ளதையும் இத்தேர்தல்களின்போது காண முடிந்தது.

கடந்த பொதுத் தேர்தல்களில் அடைந்த தோல்வி தந்த பேரிடியில் இருந்து மீண்டு, இழந்த ஆதரவைத் திருப்பப் பெற்றுள்ளது தி.மு.க. என்றாலும் வை.கோ - ஸ்டாலின் கோஷ்டிகளிடையே நடக்கும் வாரிசுச் சண்டையைச் சரிப்படுத்தாமலும், காங்கிரசுடன் கூட்டு வைக்காமலும் ஆட்சியைப் பிடிக்க முடியுமா என்கிற நிச்சயமற்ற நிலையில் தள்ளப்பட்டுள்ளது. ஸ்டாலினைத் தனது அரசியல் வாரிசாக்குவது என்கிற முடிவில் கருணாநிதி வலிந்து நின்றால், அது தி.மு.க.வைப் பிளந்து செல்வாக்கிழக்கவும், ஜெயா கும்பல் ஆதாயம் அடையவும் வழி வகுக்கும். ''இனி காங்கிரசுடன் ஒருபோதும் கூட்டே கிடையாது' என்று மீண்டும் மீண்டும் வாக்களித்துவிட்டு, அதை மீறினால் தமிழக மக்கள் அத்துரோகத்தை மன்னிக்கமாட்டார்கள்.

இவற்றைவிட முக்கியமானது, சரத்பவாரைப் போன்ற பணபலம், தேவிலாலைப் போன்ற ரௌடித்தனம், பஜன்லாலைப் போன்ற தில்லுமுல்லு தந்திரம் அத்வாணி - நரசிம்மராவைப் போன்ற பார்ப்பன - பாசிச வெறிபிடித்த ஜெயாவை தேர்தல் அரசியலால் மட்டும் எதிர்கொள்ள முடியுமா என்ற கேள்வி கருணாநிதி, ராமதாஸ் போன்றவர் முன்புள்ளது. கடந்த முறை ஆட்சி கலைக்கப்பட்டபோதும், ராஜீவ் கொலையை ஒட்டி காங்கிரசு - அ.தி.மு.க. வன்முறை வெறியாட்டங்களின் போதும் 'இனிமேலும் தேர்தல் முறைகளை நம்ப முடியுமோ?' என்கிற கேள்வி எழுவதாகக் கூறினார், கருணாநிதி. ஆனால் பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலின் வரம்பற்ற அடாவடி, அராஜக, முறைகேடுகளையும், பொறுக்கி - ரௌடி அரசியலையும் கண்டபின்னரும் தேர்தல் அரசியலுக்கு அப்பால் மக்கள் போராட்டங்கள் நடத்துவதற்கு அவர் கொஞ்சமும் துணியவில்லை; ராமதாசின் செயல்பாடுகளும் இந்த வரம்புக்குள் சுருங்கிவிட்டது. ஆகவே, காங்கிரசின் உடந்தையுடன் இந்துமதவெறி பாசிச அபாயமும், இன ஒடுக்குமுறையும் தாக்குதல் தொடுத்துள்ள இந்த வேளையில் இந்த வரம்புகளை மீற தமிழக மக்கள் தயாராக வேண்டும். ●

படிப்பகம்

www.padippakam.com




# விநாயகர் வடிவில் ஆர்.எஸ்.எஸ்.-ன் நரபலி!

**மதக்கலவரங்களை நடத்தாமலோ அல்லது அதற்கான தயாரிப்பாக மதவெறி விதையை தூவாமலோ விநாயகர் ஊர்வலம் நடந்து முடிந்தது இல்லை.**

அரசியல் ரீதியாக இந்துராஜ்ஜியத்தை நிறுவவும், கலாச்சார ரீதியாக பார்ப்பனீயத்தை நிலை நிறுத்தவும் திட்டமிட்டு ஆர்.எஸ்.எஸ். கும்பல் பயன்படுத்துகிற ஒரு ஊடகம்தான், விநாயகர் சதுர்த்தி விழா. பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக இந்துக்களை திரட்டுவதற்காக இவ்விழாவை நாடு முழுவதும் பரப்புமாறு போதித்தவர், திலகர். இன்றோ முஸ்லிம் - கிறித்துவ சிறுபான்மை மக்களுக்கு எதிராக இந்துவெறியைத் தூண்டி அரசியல் ஆதாயம் அடைவதற்காக இவ்விழாவையும் அதன் ஊர்வலத்தையும் நாடு முழுவதும் பரப்பி வருகிறது ஆர்.எஸ்.எஸ். கும்பல்.

வடக்கில் பம்பாய், பூனே, அகமதாபாத் முதலான சில முக்கிய நகரங்களில் கொண்டாடிக் கொண்டிருந்த இவ்விழா, சில ஆண்டுகளாக பெங்களூர், சென்னை முதலான தென்னிந்திய பகுதிகளிலும் காலூன்றிவிட்டது. தமிழகத்தில் முக்கிய நகரங்களிலிருந்து சந்தை நகரங்கள் வரை இவ்விழாவை விரிவாக்கி வளர்கிறது, இந்து முன்னணி கும்பல். தமிழ்நாடு முழுவதும் 5000 விநாயகர் சிலைகள் தெருமுனைகளில் நிறுவப்பட்டுள்ளன. பம்பாய் நகருக்கு இணையாக சென்னையில் மட்டும் 2500 விநாயகர் சிலைகள் (பம்பாய் 2800 சிலைகள்) வைத்தனர். ஒரு வாரத்திற்கு அச்சிலைகளுக்கு பூசை நடத்தி, பஜனை - பக்திப் பாடல்கள், சமயச் சொற்பொழிவுகள் (என்ற பெயரில் இந்துவெறியூட்டும் அரசியல் பிரச்சாரம் செய்து) நிகழ்த்தி, பின் முக்கியத்தெரு வழியே (குறிப்பாக முஸ்லீம்கள் வாழும் பகுதி - மசூதிகள் உள்ள பகுதி வழியே) ஊர்வலமாக எடுத்துச் சென்று கடலில் கரைப்பது இக்கும்பலின் திட்டம். மிகச் சில ஆண்டுகளாத இவ்விழா தவறாமல், தடங்கலின்றி நடைபெறுகிறது. ஆனால் மதக்கலவரங்களை நடத்தாமலோ அல்லது அதற்கான தயாரிப்பாக மதவெறி விதையை தூவாமலோ நடந்து முடிந்தது இல்லை. (இந்த ஆண்டு நடந்த விநாயகர் ஊர்வலத்தில் பெங்களூர், பம்பாய், சூரத், கர்நாடகா-சிமோகா ஆகிய பகுதிகளிலும் கலவரம் நடத்தியுள்ளது, ஆர்.எஸ்.எஸ். கும்பல்- சிமோகாவில் 2 பேர் காயம்பட்டனர். சூரத்தில் நான்கு பேர் கத்திக்குத்திலும் துப்பாக்கிச் சூட்டிலும் இறந்துள்ளனர்.

இந்த ஆண்டு ஆர்.எஸ்.எஸ். அலுவலக குண்டு வெடித்ததால் இதற்குப் பின்னே நடக்கவிருந்த மிலாதுநபி ஊர்வலம் மற்றும் விநாயகர் சதுர்த்தி ஊர்வலத்தில் என்ன நடக்குமோ என்ற அச்சம் சென்னை நகர மக்கள் மத்தியில் இருந்தது. இதைவிட கூடுதலாக அப்படி ஏதாவது மதக்கலவரம் நிகழ்ந்து உயிர்ப்பலியானால் தனது ஆட்சிக்கு ஆபத்து வந்துவிடுமோ என்ற பீதி ஜெயலலிதாவிடம் இருந்தது. இதன் காரணமாக ஊர்வலம் நடத்துவதை இருதரப்பினரும் கைவிடுமாறு வேண்டுகோள் விடுத்தார், ஜெயா. முஸ்லீம் தலைவர்கள் தங்களது மிலாதுநபி ஊர்வலத்தை நடத்துவதில்லையென அறிவித்தனர். ஆனால் இந்து முன்னணியின் இராம. கோபாலனோ திட்டமிட்டபடி செப்டம்பர் 26-ந்தேதி விநாயகர் ஊர்வலம் நடந்தே தீரும் என்று அறிவித்தார். இதைத் தொடர்ந்து இவ்விசயம் மிகுந்த சர்ச்சைக்குள்ளாகி முற்போக்காளர்கள், சிறுபான்மை சமூகத்தினர், மதவெறியை எதிர்க்கும் சமூகநல அமைப்பினர் மட்டுமல்லாமல் எதிர்க்கட்சியில் காங்கிரசுகாரர்கள் உட்பட எல்லோரும் சேர்ந்து விநாயகர் ஊர்வலத்திற்கு அரசு அனுமதி மறுக்க வேண்டும் என்று குரல் எழுப்பினர். பதிலுக்கு இராம. கோபாலன், ''வழக்கமாக செல்லும் அதே பாதையில் என்ன தடங்கல் வந்தாலும் அதை மீறி என்ன விலை கொடுத்தாலும் ஊர்வலத்தை நடத்தியே தீருவோம்'' என்று கொக்கரித்தார்.

ஜெயா கும்பல் பார்ப்பன - பங்காளி விசுவாசத்தோடு இந்து முன்னணி தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நாடகம் எல்லாம் நடத்தி இறுதியாக அனுமதியும் கொடுத்தது. ஊர்வலத்தை ஒரே பாதையில் அல்லாமல் மூன்று பாதைகளில் பிரித்து விடுவதாக அறிவித்தது. ஆனால், வழக்கமாக பிரச்சினைக்குரிய திருவல்லிக்கேணி பகுதியிலும் அதைச் சுற்றிய பகுதியிலும்தான் ஊர்வலங்கள் அனுமதிக்கப்பட்டன. போலீசின் வேண்டுகோளுக்கிணங்க முஸ்லீம்கள் மாலை தொழுகை நேரத்தை மாற்றிக் கொண்டனர். தமக்குள்ள பாதுகாப்பற்ற நிலையைக் கருதி முஸ்லீம்கள் இப்படி பணிந்து போக வேண்டி வந்தது. இந்த ஆண்டு விநாயகர் ஊர்வலம் கட்டுகோப்பாக அமைதியாக நடந்து முடிந்ததாக பார்ப்பன பத்திரிக்கைகள் செய்தி வெளியிட்டன. இது புயலுக்கு முன்னே உள்ள அமைதி என்பதோடு நடந்த உண்மையும் மூடி மறைக்கப்பட்டது. பெரிய கலவரமோ உயிர்பலியோ நிகழவில்லையே தவிர அவை நிகழ்வதற்கான அம்சங்கள் - சம்பவங்கள் அனைத்தும் இருந்தன. முஸ்லீம்கள் ஒதுங்கிக் கொண்டு 'கட்டுக்கோப்பாக' இருந்தனர் என்பதால்தான் எதுவும் நிகழவில்லை.

> பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக இந்துக்களை திரட்டுவதற்காக விநாயகர் விழாவை நாடு முழுவதும் பரப்புமாறு போதித்தவர் திலகர்; இன்று ''இந்துராஷ்டிரத்திற்காக'' இவ்விழாவைப் பயன்படுத்துகிறது ஆர்.எஸ்.எஸ்.



விநாயகர் ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களில் பார்ப்பனர், சேட்டு, மார்வாடி பிரிவினரைத் தவிர ஏனையோரில் சேரி - மீனவக் குப்பம் - சாலையோர வாசிகளான தாழ்த்தப்பட்டோரே அதிகம். அனைவரும் உதிரி கூலித் தொழிலாளிகள், ரிக்ஷா - மாட்டு வண்டிக்காரர்கள் மற்றும் விட்டேற்றியான இளைஞர்கள். இவர்களை திருப்திப் படுத்துவதற்காகவும் அணி திரட்டுவதற்காகவும் ஊர்வலத்தை ஒரு மீனவப் பெண்மணியோ, தலித் பெண்மணியோ தொடங்கி வைக்கும்படி ஏற்பாடு செய்தனர். திருச்சி - சிறீரங்கம் கோயில் கருவறைக்குள் நுழைவதாகக் கூறிய சூத்திரர்களையும் தாழ்த்தப்பட்டவர்களையும் ''தேங்காயால் மண்டையை உடைப்போம்'' என்ற இதே இந்து முன்னணியினர்தான், இவ்விழாவில் தாழ்த்தப்பட்டோரை கெளரவித்து நாடகமாடுகின்றனர். ஏனெனில், ஊர்வலத்தின் கடின மற்றும் எடுபிடி வேலைக்கும், மதக்கலவரத்தில் மோதலுக்கு கையாளாகவும் இத்தகையோரின் உதவி தேவை.

ஊர்வலத்தில் வழக்கம்போலவே இந்து வெறியூட்டும் முழக்கங்களை காட்டுக் கூச்சலிட்டு வெறியாட்டம் போட்டனர். ''ராமர் கோயிலை கட்டிக் கொடு'', ''மதுராவையும் காசியையும் இங்கும் நாங்கள் உருவாக்குவோம்'' என்ற முழக்கமும் ''நான் இந்து என்கிற எமனடா, மிருகவெறி - ரத்த வெறி கொண்ட எமனடா'' என்ற பாடலும் பரவலாக கேட்க முடிந்தது. திருவல்லிக்கேணி ஐஸ்ஹவுஸ் மசூதி முன்பு காலிகள் பலர் வெடி வைத்தும் போலீசு கண்டு கொள்ளாமல் விட்டதும் (வெடியை ஊர்வலத்தின் இடையில் வெடிக்க போலீசு அனுமதி மறுத்

படிப்பகம்

www.padippakam.com

திருந்தது) பார்க்க முடிந்தது. மாலை 4-30 மணிக்குள் ஊர்வலத்தை முடித்து 5 மணிக்கு முஸ்லீம்கள் தொழுகைக்கு வர வழி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று இருந்தும் ஊர்வலத்தினர் திட்டமிட்டே அடிஅடியாக நகர்ந்தனர். இதற்கெல்லாம் கமிஷனர் ராஜகோபாலன் தலைமையிலான போலீசு கும்பல் தலையசைத்துக் கொண்டு பொறுப்பற்று மெத்தனமாக செயல்பட்டது.

ஐஸ்ஹவுஸ் மசூதியை கடப்பதில் நிகழ்ந்த தாமதத்தினால் 5 மணிக்கு முஸ்லீம்கள் தொழுகைக்கு வரமுடியாமல் தவித்தனர். போலீசிடம் முறையிட்டு எதிர்ப்பு தெரிவித்தனர். பிறகு போலீசு, விரைவாக அவ்விடத்தை விட்டு ஊர்வலத்தை நகர்த்த முயன்றதால் ஆத்திரமாகிய ஊர்வலக்காலிகள் கற்கள், செருப்புகளை மசூதியை நோக்கி வீசினர். மசூதியின் டியூப்லைட்டுகள் உடைந்து சிதறின. மசூதியின் சுவர்மீது ஊர்வலத்தில் வந்த வானரங்கள் ஏறி ஆட்டம் போட்டனர். ஊர்வலம் அந்த இடத்தை விட்டு நகரும்வரை என்ன நடக்குமோ என்ற பரபரப்பும் அச்சமும் வெகுநேரம் நிலவியது. மசூதியைச் சுற்றி மட்டுமல்ல திருவல்லிக்கேணி பகுதியிலுள்ள முஸ்லீம் தெருக்களின் வெளியே தெரிந்த முகங்களிலும் ஒருவித அச்சமும் சோகமும் கப்பியிருந்ததை பார்க்க முடிந்தது. மயான அமைதியில் இருந்த அப்பகுதியை இந்துவெறிக் கூச்சல் காட்டுத்தனமாக கிழித்து கலவரப்படுத்தியது.

பல்லாவரத்தில் சாலையை அடைத்து வைக்கப்பட்ட விநாயகர் சிலையை போலீசு அப்புறப்படுத்தியது. ஆனால் இந்து முன்னணி கும்பல், அந்த விநாயகரை அலங்காரமின்றி காட்சிப் பொருளாக, அச்சிலையில் சாணியை ஆங்காங்கே பூசி அலங்கோலப்படுத்தி ஊர்வலத்தில் எடுத்து வந்தனர். இந்துமத எதிர்ப்பாளர்கள் சிலராலேயே போலீசு தூண்டப்பட்டு இப்படி விநாயகரை நாசப்படுத்தியதாக முழக்கம் எழுதிவைத்தும் ஒலிபெருக்கியில் பேசியும் இந்துவெறியைக் கக்கினர். ஊர்வலத்தில் இந்துவெறியூட்டப்பட்ட பிரசுரத்தை பரவலாக விநியோகித்தனர். சீரணி அரங்கத்தில் நடந்த கூட்டத்திலும் எல்லோரும் இந்துவெறியூட்டிப் பேசினார்கள். குறிப்பாக இராம.கோபாலன் தமிழகம் தமது கைக்குள் இருக்கிற நினைப்பில் கூட்டத்தில் எழுந்து நடந்தவர்கள், தூரத்தில் ஒலிபெருக்கியில் சினிமாப்பாடல்களை போட்டவர்கள் மீதெல்லாம் போலீசைவிட்டு நடவடிக்கை எடுக்கக்கூறி வெறித்தனமாக கட்டளை பிறப்பித்தார். மக்கள் கலை இலக்கியக் கழகம், விடுதலைக் குயில்கள், மார்க்சிய - பெரியாரிய பொதுவுடமைக் கட்சி, தமிழ் தேசிய தன்னுரிமை கழகம் முதலான பல அமைப்புகளைச் சுட்டிக் காட்டி பயங்கரவாத - தீவிரவாத - பிரிவினைவாத அமைப்புகளாக சித்தரித்து தாக்கிப் பேசி தனது ஆத்திரத்தைக் கொட்டினார்.

தமிழகத்தில் பல்வேறு இடங்களில் இந்து முன்னணியின் விநாயகர் ஊர்வலம் இதுபோலவே நடந்து முடிந்தது. மதுரை, திருச்சி, ஸ்ரீவில்லிபுத்தூர், கீழக்கரை பகுதிகளில் மசூதி - பள்ளிவாசல் அருகிலுள்ள பாதை வழியாக ஊர்வலம் கடந்து செல்லும்போது இந்து வெறியர்களின் கூச்சல் மற்றும் நடவடிக்கையால் பதட்டமான சூழ்நிலையே நிலவியது. சென்னை - கே.கே.நகர், நாகை - முத்துப்பேட்டை பகுதிகளில் வெட்டுக்குத்து மோதலாக - கலவரமாக நடந்தது.



சாணியால் அலங்கோலப்படுத்தி எடுத்து வந்த சிலை; இந்துவெறியைத் தூண்ட புது உக்தி

சென்னை - கே.கே.நகரில் இந்து முன்னணியைத் தொடங்கிய வி.எஸ்.ஸ்ரீதர் என்பவன் தலைமையிலான கும்பல், பழைய முன் விரோதத்தில் (ஆர்.எஸ்.எஸ். அலுவலக குண்டுவெடிப்பு தொடர்பாக முஸ்லீம்களை தாக்கி பகுதியில் சுவரெழுத்து எழுதியதை தி.மு.க.வினர் தடுத்துள்ளனர்) திட்டமிட்டே தி.மு.க. மன்ற நிலத்தில் விநாயகர் சிலையை வைத்தது. தி.மு.க. வட்டச் செயலாளர் தனசேகரன், இளைஞர் அணி தலைவர் எஸ். ராஜேந்திரன் ஆகியோர் முன்னின்று இதை தடுக்கவே, இப்பிரச்சினை பிறகு போலீசால் பஞ்சாயத்து செய்து வைக்கப்பட்டது. இருந்தும் செப்டம்பர் 21-ந் தேதி இரவு வேலை முடிந்து தனியே வீடு திரும்பிக் கொண்டிருந்த ராஜேந்திரனை, சமய சொற்பொழிவு என்ற பெயரில் குழுமியிருந்த கும்பல் தடுத்து வம்புக்கிழுத்து தாக்கியது. விநாயகர் சிலைக்குப் பின் ஒளித்து வைத்திருந்த கத்தி, அரிவாளை எடுத்து பலமாக தாக்கினர். 6 இடங்களில் வெட்டுப்பட்டு உயிருக்கு ஆபத்தான நிலையில் ராஜேந்திரன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்தாக்குதலில் ஈடுபட்ட முக்கிய நபர்களான ஸ்ரீதர், விக்கிரமராஜா (பகுதி வியாபாரிகள் சங்கத் தலைவர், இந்து முன்னணியைச் சேர்ந்தவர்), சேர்மதுரை முதலியோர் தலைமறைவாகி விட்டனர். கைது செய்யப்பட்ட 'புல்லட்' முருகேசன் முதலான சிலரை ஜட்டியுடன் சங்கிலிகோர்த்து கே.கே.நகரின் கடைவீதிகளில் போலீசு இழுத்துச் சென்றது. இவர்களும் தலைமறைவானவர்களும் நாடார் என்பதாலும் பாதிக்கப்பட்ட ராஜேந்திரன் அணியினரும் நடவடிக்கை எடுத்த போலீசு எஸ்.ஐ. குமாரபாலனும் தேவர் என்பதாலும் இது சாதிப் பிரச்சினையாகவும் வளர்ந்துள்ளது. போலீசின் நடவடிக்கையைக் கண்டித்து நாடார் வியாபாரிகள் சங்கத்தினர் ஒரு நாள் அடையாள கடையடைப்பும் நடத்தியுள்ளனர். ஆனால் சம்பவத்திற்கு காரணமான ஆர்.எஸ்.எஸ். கும்பல் ஒதுங்கியும் பின்னணியில் இருந்து தூண்டியும் வேடிக்கைப் பார்க்கிறது. இது தானே 'அவாளின்' பரம்பரை நரித்தந்திரம்!

இந்து முன்னணி காலிகளால் வெட்டப்பட்ட தி.மு.க.காரர், எஸ்.ராஜேந்திரன்; விநாயகர் கையில் சூலாயுதமும், கத்தியும் வந்தது இதற்காகத்தான்!



முத்துப்பேட்டையில் செப்டம்பர் 21-ந் தேதி விநாயகர் ஊர்வலம் முடித்து திரும்பிய இந்துவெறி கும்பல், பெரிய கடைவீதியில் உள்ள பள்ளிவாசல் அருகே வந்ததும் தமது காலித்தனத்தைக் காட்டவே ஆத்திரமான முஸ்லீம் இளைஞர்கள் சிலர் சேர்ந்து தாக்கியுள்ளனர். இதை சாக்காக வைத்து இந்துவெறிக் கும்பல் வழியிலிருந்த முஸ்லீம் சமுதாயத்தினரின் கடைகளை எல்லாம் தாக்கி சேதப்படுத்தி வெறியாட்டம் போட்டது. மறுநாளும் கும்பலாக வந்து அதிகாலையில் பூட்டியிருந்த கடைகளை தாக்கி தீ வைத்து கொளுத்தினர். 10 சிறு கடைகள் சாம்பலாகின. 30 கடைகள் சேதப்படுத்தப்பட்டன. பாதிக்கப்பட்ட இருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். எம்.எஸ். அமிர்தலிங்கத் தேவர் தலைமையில் வர்த்தக சங்கம் கூடி, இச்சம்பவத்தைக் கண்டித்து கடையடைப்பும், சாலை மறியலும் நடத்தியது. சம்பவத்திற்குப் பின் பல நாட்கள் பகுதி முழுவதும் பதற்றம் நிலவியது.

"தமிழகம், பெரியார் தோன்றிய மண். இங்கு ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க., இந்து முன்னணி கும்பலின் நோக்கம் பலிக்காது" என்று திராவிடக் கழகத்தினர் ஆருடம் சொல்லிக் கொண்டு, வெற்று ஜம்பம் பேசிக் கொண்டு இனியும் திரியமுடியாது. அதே பெரியார் மண்ணில்தான் ஆர்.எஸ்.எஸ். நச்சுப் பாம்பு தனது கால் பதித்து பட

படிப்பகம்

www.padippakam.com

மெடுத்து ஆடவும் செய்கிறது; நம்மை தீண்டி உயிர்பலி எடுப்பதுதான் பாக்கி உள்ளது. இந்துமத உணர்வு, கடவுள் நம்பிக்கை என்கிற முகமூடிக்குள் வளர்ந்துவரும் இந்துவெறிக் கும்பலை பகிரங்கமாக எதிர்த்து களத்தில் நின்று போரிட எந்த ஓட்டுக் கட்சியும் தயாரில்லை. மக்களிடையே உள்ள மத உணர்வு, கடவுள் நம்பிக்கையில் கைவைக்க அவை விரும்பவில்லை; ஓட்டும் 'செல்வாக்கும்' போய்விடும் என்றே அஞ்சுகின்றன. அதே சமயம் பா.ஜ.க. வின் வளர்ச்சியையும் அதனால் தனது அரசியல் பிழைப்புக்கு வரும் ஆபத்தையும் எண்ணியே எதிர்ப்பதாக கூச்சலிடுகின்றன. தி.மு.க., பா.ம.க., தி.க. உட்பட அறிக்கை விடுவதோடு நிறுத்திக் கொண்டன; நடவடிக்கை எதுவும் இல்லை. தி.க.வும் விநாயகர் ஊர்வலத்திற்கு எதிரான இயக்கத்தை விடுத்து, பெரியார் பிறந்தநாள் விழாவையும் பொதுவான பகுத்தறிவு பிரச்சாரத்தையும் மட்டுமே செய்து 'ஜெ' ஆட்சிக்கு தலையையும் அணிகளுக்கு வாலையும் காட்டி ஏய்க்கிறது.

மக்கள், வீடுகளில் வைத்து வணங்கும் பிள்ளையாரை கரைப்பதற்காக தங்களிடம் ஒப்படைத்து விடுவதை பெருமையாக குறிப்பிடுகிறது. இந்து முன்னணி கும்பல். போகப்போக வீட்டுப் . பிள்ளையாரை விட்டு நாங்கள் வைக்கும் வீதிப் பிள்ளையாரை வணங்கவும் எங்களுடன் வந்து கரைக்கவும் வருவார்கள் என்று நம்பிக்கையுடன் பேசித் திரிகிறது. இது நடந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனெனில் சதித்தனமாக மரத்தடி புத்தரை ஒழித்து மரத்தடி பிள்ளையாரை மக்கள் வணங்கும்படி செய்த கும்பல்தானே இவர்கள்?! இன்று காளியாத்தா, மாரியாத்தா, மதுரைவீரன், மாடசாமி திருவிழாக்களை ஒழித்து விநாயகர் சதுர்த்தி விழாவை மக்களே ஏற்றுக் கொள்கிற நிலையை உருவாக்கி வருகிறார்கள். பத்திரிக்கை, வானொலி - வானொளி மூலம் விநாயகர் விழாவை உன்னதமான ஒன்றாக சித்தரித்து பிரச்சாரம் செய்து வருகிறார்கள். இவ்விழா காலங்காலமாக நிலவுகிற பாரம்பரியம் என்றும் புளுகுகிறார்கள். ஜெயா அரசும் இந்துக்களின் பாரம்பரிய மிக்க விழாவை எப்படி தடுக்க முடியும் என்று கேட்டே அனுமதி கொடுத்தது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

விநாயகரின் தொந்திக்குப் பின்னே மறைத்திருக்கும் இந்த இந்துவெறி கும்பலை மக்களுக்கு இனங்காட்டி தனிமைப் படுத்தவேண்டும். விநாயகர் விழாவிற்கு நிதிதிரட்டுவது, பூசை - சொற்பொழிவு என இந்துவெறி பிரச்சாரம் செய்வது, வீதிகளில் சிலை வைப்பது, ஊர்வலம் நடத்துவது என இருக்கும் இந்து முன்னணியின் அனைத்து செயல்பாடுகளையும் முடக்கி அக்கும்பலின் உறவை அறுத்தெறியவேண்டும். இதை இன்றைய எந்த அரசும் செய்ய முன்வராது. முற்போக்காளர்களும் புரட்சியாளர்களும் உழைக்கும் மக்களுமே செய்ய முன்வர வேண்டும்.

● *ராசு.*



# பத்தாண்டுகளில் ஈழம்: மீளாய்வு

**1983 கறுப்பு ஜூலை இனப் படுகொலைகளுக்குப் பிறகு பற்றி படர்ந்த ஈழ விடுதலைப் போராட்டம், பத்தாண்டுகளுக்குப் பின்னும் நெருக்கடிக்குள் சிக்கி மாற்றுப் பாதைக்காக காத்திருக்கிறது.**

1983 கறுப்பு ஜூலையை இந்தியத் தமிழர்கள் பெரும்பாலும் மறந்து போய்விட்டார்கள். ஆனால் ஈழத் தமிழர்கள் ஒருபோதும் மறக்கவே முடியாது. ஏனென்றால் ஈழத் தமிழர் விடுதலைக்கான நீண்ட போராட்ட வரலாற்றில் அது முக்கியமானதொரு திருப்பத்தை ஏற்படுத்தியதைக் குறிக்கிறது. அந்த ஜூலை 23-ந் தேதி திருநெல்வேலியில் 13 சிங்கள இராணுவ வீரர்களை விடுதலைப் புலிகள் கண்ணிவெடி வைத்துத் தாக்கிக் கொன்றனர். கொல்லப் பட்டவர்களின் பிரேத ஊர்வலத்தை கொழும்பில் நடத்தி சிங்கள மக்களிடையே பேரின வெறியைத் தூண்டி இலங்கைத் தமிழர்க்கெதிராக திட்டமிட்ட இனவெறிப் படுகொலையை அதிபர் ஜெயவர்த்தனே, பிரதமர் பிரேமதாசா, மந்திரிகள், ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னின்று நடத்தினர்.

அதற்குச் சற்று முன்பே திருகோணமலை, கிளிவெட்டி, மூதூர் பகுதிகளில் இராணுவம், போலீசு ஆகிய அரசுப் படையின் ஒத்துழைப்போடு சிங்கள இனவெறியர்கள் தமிழ்மக்களை வெட்டியும் சுட்டும் படுகொலைகள் புரிந்துவந்தனர். ஆனால் ஜூலை 23-க்குப் பின்னர் இது உச்சகட்டத்தை அடைந்தது. கிழக்கிலும், தெற்கிலும் குறிப்பாக கொழும்பு நகரிலும் வரலாறுகாணாத அளவு இனவெறி வன்செயல்களுக்கு இலங்கைத் தமிழர்கள் பலியாக்கப்பட்டனர். வாக்காளர் பட்டியலை வைத்துக் கொண்டு தமிழர்களின் வீடுகள், கடைகள், தொழிற்சாலைகள், உடைமைகள் சூறையாடப்பட்டபின் கொளுத்தப்பட்டன. கண்ணில்பட்ட தமிழர்கள் வெட்டியும் அடித்தும் உயிரோடு எரியும் நெருப்பில் வீசியும் கொல்லப்பட்டனர். சிறுவர்-சிறுமிகள், வயோதிகர்கள் மட்டுமல்ல பச்சிளம் குழந்தைகளும்கூட விட்டுவைக்கப்படவில்லை. பெண்களும் சிறுமிகளுமாகப் பலர் கும்பல் கும்பலாய் கற்பழிக்கப்பட்டனர். தமது உறவினர்களின் சித்திரவதைகளை நேரில் காணும்படி நேர்ந்தவர்களில் பலருக்கு சித்த பிரமையே ஏற்பட்டது. இந்திரா கொலையைத் தொடர்ந்து 1984 நவம்பரில் சீக்கியருக்கு எதிராக வட இந்தியாவில் நடத்தப்பட்ட மதவெறி வன்செயல்களைப் போலவே இலங்கைத் தமிழருக்கு எதிராக 1984 ஜூலை இனப்படுகொலைகள் நடந்தன.

இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தது போல 1983 ஜூலை 25-ஆம் தேதி வெலிக்கடை சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த ஈழப் போராளிகள் மீது பயங்கர ஆயுதங்களோடு இனவெறி தலைக்கேற்றப்பட்ட சிங்கள கைதிகள் ஏவிவிடப்பட்டனர்; அன்று மட்டும் 35 தமிழ்க் கைதிகள் கோரமான முறையில் குத்திக் குதறிக் கொல்லப்பட்டனர். அடுத்து ஜூலை 27-ஆம் தேதியே அதே சிறையில் மீண்டும் 18 தமிழ்க் கைதிகள் மிருகத்தனமாகக் கொல்லப்பட்டனர். உலகிலேயே கொடூரமான அந்த அநாகரீக வெறிச் செயல்களில் காந்தியம் - டாக்டர் ராஜசுந்தரம், குட்டிமணி, ஜகன், தங்கதுரை ஆகிய முன்னணிப் போராளிகள் உட்பட 53 தமிழக் கைதிகள் சிங்களக் காடையர் கொலை வெறிக்குப் பலியாகினர்.

1958,61,77 மற்றும் 81 ஆம் ஆண்டுகளிலும் தமிழர்களுக்கு எதிரான இனவெறிக் கலவரங்கள் நடந்துள்ளன. என்றாலும் 1983 ஜூலை இனவெறி வன்செயல்கள் ஏற்படுத்திய இழப்புகளும் தாக்கமும், மாற்றமும் அளவிடமுடியாதவை. இவற்றால் பாதிக்கப்படாத இலங்கைத் தமிழர் குடும்பமே கிடையாது. ஆயிரக்கணக்கானோர் அகதிகளாகி வெளிநாடுகளில் குறிப்பாக தமிழகத்தில் தஞ்சம் புகுந்தனர். உலகின் பல நாடுகளில் தமிழர்கள் மீது அனுதாப அலை ஓங்கியது. ஈழத் தமிழ் அகதிகளுக்கு இருகரம் நீட்டி வரவேற்றுத் தஞ்சமளித்ததோடு, சிங்கள இனவெறிக்கெதிராக இந்தியத் தமிழர்களிடையே கோபாவேசம் பொங்கியது. பல்வேறு சாதிச் சங்கங்கள், இரசிகர் மன்றங்கள் முதல் ஆளும் வர்க்க அரசியல் கட்சிகள் உட்பட அனைத்துத் தரப்பினரிடையேயும் அனுதாபமும் ஆதரவும் எழுச்சியும் காண முடிந்தது.

எங்காவது தப்பிப் பிழைத்து தஞ்சம் புகுந்தாலே போதும் என்கிற உணர்வில்லை; தாமும் விடுதலைப் போரில் குதிக்க வேண்டும் என்கிற போர்க்குணமே ஈழத் தமிழ் இளைஞர்கள், யுவதிகளிடையே பொங்கிப் பெருகியது. 1977 ஆம் ஆண்டு முதலே ஆயுதந்தாங்கிய நடவடிக் கைகளில் ஈடுபட்டிருந்த போராளிக் குழுக்

படிப்பகம்

www.padippakam.com

கள் புது பலம்பெற்றன; சிறியதும் பெரியது மாக பல ஈழ விடுதலை அமைப்புகள் சிங் கள இனவெறி பாசிச அரசுக்கெதிரான போராட்டத்தில் தீவிரம் காட்டின.

அப்போது பல புதிய நம்பிக்கைகளு டனும் எதிர்பார்ப்புகளுடனும் புதுவேகத்து டனும் தொடுக்கப்பட்ட ஈழத் தமிழர்களின் அத்தேசிய விடுதலைப் போராட்டம் இன்று ஒரு தேக்கநிலையை எட்டியிருக்கிறது: அல்லது ஒரு நீண்டகால இழுபறி நிலைக் குத் தள்ளப்பட்டிருக்கிறது. அப்போரில் குதித்த போராளி அமைப்புகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டுமே இன்னமும் இராணுவ பலம் மிக்கதாக எஞ்சியிருக்கி றது. ஏனைய அமைப்புகள், பெருத்து, வீங்கி, பின்னர் துரோகிகளாக சீரழிந்து, சிதைந்து போயின. எஞ்சிய சிறிய போராளி அமைப்புகள் விடுதலைப் புலிக ளால் தடை செய்யப்பட்டு ஒடுக்கப்பட்டுள் ளன. ஜனநாயக, தேசிய உணர்வுகொண்ட புரட்சிப் போராளிகள் பலரும் எதிரியை விட சக அமைப்புகளாலும், சொந்த அமைப்பின் சக தோழர்களாலுமே அதிக அளவில் கொல்லப்பட்டனர். எஞ்சியவர் கள் தமது சொந்த மண்ணிலேயே புலிக ளின் சிறைகளில் வதைபடுகிறார்கள். அல் லது அகதிகளாகி அந்நிய நாடுகளில் சித றிப் போயுள்ளனர். அடுத்த, புதிய, இளம் தலைமுறையோ பாசிசப் புலிகளின் குழு நலன்களுக்காகப் பலியிடப்படுகிறார்கள். சுதந்திர, ஜனநாயக ஈழமோ இன்னமும் கன வாகவே இருக்கிறது.

ஆயிற்று. 1983 கறுப்பு ஜூலைக்குப் பிறகு பத்தாண்டுகள் ஆயிற்று. இப்பத் தாண்டுகளில் ஈழ விடுதலைப் போர் பல முக்கியமான நிகழ்வுகளையும் திருப்பங்க ளையும் கண்டது.

● தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி மட்டுமே ஈழத் தமிழரின் தனிப் பெரும் கட்சி, தலைமைக் கட்சி என்ற நிலையில் இருந்து கீழே வீழ்த்தப்பட்டது. அதன் நாடாளுமன்ற சமரச சரணடைவுப் பாதை யும் துரோகத்தனமும் அம்பலப்பட்டு ஈழத் தமிழ் மக்களிடம் இருந்து தனிமைப்பட் டது. இந்தியாவில் தஞ்சம்புகுந்து அரசு விருந்தினராக வாழ்ந்துகொண்டு, கொழும் பில் சிங்கள பேரின பாசிச அரசுடன் பேரங் கள் நடத்திய அமிர்தலிங்கம் முதலிய துரோகத் தலைவர்கள் தமிழ் மக்களின் நம் பிக்கையை முற்றாக இழந்தனர். பெரும்பா லான ஈழத்தமிழர்கள் குறிப்பாக இளைய தலைமுறையினர் பல்வேறு போராளிக் குழுக்களின் தலைமைகளை ஏற்றதோடு கூட்டணியின் அமைதிவழி முயற்சிகளை நிராகரித்து ஆயுதப் போராட்டப் பாதை யில் இறங்கினர். பல குழுக்களாகப் பிளவு பட்டிருந்தபோதும் சிங்கள இராணுவத்துக் கும் அரசுக்கும் எதிராக பல வெற்றிகரமான தாக்குதல்களை நடத்தி, இழப்புகளை ஏற்ப டுத்தி எதிரியைக் கதிகலங்கடித்தனர். ஆயு தப் போராட்டத்தின் மூலம் ஈழ விடுதலை யைச் சாதித்துவிட முடியும் என்கிற நம் பிக்கை பிரகாசமாகியது.

● ஆயிரக்கணக்கான ஈழத் தமிழர்களுக் குத் தமிழ்நாடு தஞ்சமளித்து ஆதரவு காட் டிய அதேசமயம் பிழைப்புவாத திராவிடக் கட்சிகள் தமது சுயநல அரசியலுக்கு ஆதா யம் தேடுவதற்குப் போராளி அமைப்புக ளைப் பயன்படுத்த முனைந்தன. இந்திரா - ராஜீவ் தலைமையிலான இந்திய அரசோ ஈழத் தமிழருக்காக நீலிக்கண்ணீர் வடித்த அதேசமயம் தனது தெற்கு ஆசிய மேலா திக்கத்துக்கான கருவியாக ஈழப் பிரச்சினை யைப் பயன்படுத்த முனைந்தது. ''டெலோ'', ''ஈ.பி.ஆர்.எல்.எஃப்.'', ''ஈரோஸ்'', ''டி.யூ.எல்.எஃப்.'', ''எல்.டி.டி.ஈ.'', ''பிளோட்'' ஆகிய ஆறு பெரிய அமைப்பு களும் இந்திய அரசு விரித்த வலையில் விழுந்தன. இந்திய உளவுப் படையான ''ரா'' இந்த அமைப்புகளுக்குள் ஊடுருவி யது. இந்தியாவில் பல முகாம்களை நிறுவி போராளிக் குழுக்களுக்கு ஆயுதப் பயிற்சி யும், ஆயுதத் தளவாடங்களும், நிதியும் வழங்கியது. போராளிக் குழுக்களை ஏவி சிங்கள சிவிலியன் மக்களைப் படுகொலை செய்வதன் மூலம் இலங்கை அரசைப் பேச் சுவார்த்தைக்கு வரும்படி நிர்பந்தித்தது. இந் திய அரசு பஞ்சாயத்துக்காரனாக இருந்து நடத்திய ''பேச்சுவார்த்தை - சமரச முயற்சி கள்'' தோற்றன.

● அளவில் பெரியனவாக இருந்த போராளி அமைப்புகளின் திடீர் பெருக்கம், வளர்ச்சி, ஆயுதம் மற்றும் நிதிக் குவிப்பு காரணமாக ஈழ விடுதலைப் போரின் தலைமை ஆதிக்கத்துக்கான போட்டியும் சண்டையும் வெடித்தது. உட்கட்சிக் கொலைகளும் சித்திரவதைகளும் ஒருபுற மும், சகோதர இயக்க அழிப்புப் போர்கள் இன்னொரு புறமும் தீவிரமடைந்தன. எதி ரிப் படைகளுக்கு எதிரான தாக்குதலின் போது உட்கட்சி எதிரிகளான சகபோராளி களைச் சதித்தனமாகக் கொல்வது என்பதி லிருந்து பகிரங்கமாக சித்திரவதை செய்து படுகொலைகள் செய்வதாக வக்கிரமடைந் தது. எல்லாப் பெரிய போராளிக் குழுக்களி லும் உட்கட்சிக் கொலைகள் நடந்தபோதும் ''பிளோட்'' இந்த வகையில் ''திறமை'' பெற்றிருந்த அதேசமயம் மாற்று இயக்கங் களை அழித்தொழிப்பதில் விடுதலைப் புலி களே கைதேர்ந்த வல்லுனர் ஆயினர். ''பிளோட்'' முகுந்தன், ''ஈ.பி.ஆர்.எல்.எஃப்'' பத்மநாபா, ''டெலோ'' சிறீசபாரத்தி னம், ''டி.யு.எல்.எஃப்'' அமிர்தலிங்கம் என்று அவற்றின் தலைமை அழித்தொழிக் கப்பட்டது; ''ஈரோஸ்'' தலைமை சிறையில டைக்கப்பட்டது. புலிகள் தலைமை மட் டுமே எஞ்சியிருக்கிறது. 1986-லேயே ''டெலோ'', ''ஈ.பி.ஆர்.எல்.எஃப்'' இயக் கங்கள் புலிகளால் தடைசெய்யப்பட்டன. பின்னர் ''பிளோட்'', வேறுசிறு அமைப்பு கள், இறுதியாக ஈரோசும் தடை செய்யப் பட்டன. இவ்வமைப்பினர் பலரும் கொல் லப்பட்டனர் அல்லது புலிகளின் சிறைக



ஈழத்திற்காக போராடி உயிர் கொடுத்தவர்களின் எண்ணிக்கையும், தாய் மார்களின் சிந்திய கண்ணீரும் ஏராளம். பலன் என்ன ஆனது?



தமிழ் மாகாணத் தேர்தலில் ஓட்டளிக்கும் பெண்மணி; தமிழர்களை ஏமாற்ற ஆடிய நாடகம்.

படிப்பகம்

www.padippakam.com

ளில் வதைபடுகின்றனர். ஈழத்தில் ஜனநாயக. மனித உரிமைக்காக குரல் கொடுத்த ரஜனி திரணகம போன்ற ''நடுநிலை''யாளர்களுக்கும் இதே கதிதான் கிட்டியது.

● போராளிக் குழுக்களுக்கிடையே மோதலை உருவாக்கி சிலவற்றை அழித்து, ஒன்றிரண்டைத் தனது கைப்பாவை அமைப்புகளாக வைத்து, இலங்கை அரசுடன் பேரங்கள் நடத்தித் தனது மேலாதிக்கத்தை நிறுவும் முயற்சியில் இந்திய அரசு ஈடுபட்டது. இதற்கான பெங்களூர் பேச்சுவார்த்தை முறிந்தபோது, ஈழத்தில் கொடூரமான இராணுவத் தாக்குதலைத் தொடுத்தது இலங்கை அரசு. 1987 மே, ஜூன் மாதங்களில் ''விடுவிப்பு நடவடிக்கை'' என்ற பெயரில் வடமராட்சிப் பகுதியில் கட்டவிழ்த்து விடப்பட்ட இராணுவத் தாக்குதலில் விமானக் குண்டு வீசியும் உயிரோடு எரித்தும், வெட்டியும் குத்தியும் ஆயிரக்கணக்கான ஈழத்தமிழர்கள் கொல்லப்பட்டனர். இப்பாசிசப் படைத் தாக்குதலுக்குத் தலைமையேற்ற இராணுவ மந்திரி அதுலத்முதலியும், தளபதி கொப்பேகெடுவாவும் இப்போது அழித்தொழிக்கப்பட்டார்கள்.

● வடமராட்சி ''விடுவிப்பு நடவடிக்கை''யை சாக்கு வைத்து ஈழத் தமிழருக்கு ''உணவுப் பொட்டள வீச்சு'' நடவடிக்கையை மேற்கொண்டு தலையீடு செய்த இந்திய அரசு, தனது நிர்பந்தம் மூலம் ராஜீவ் - ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தைத் திணித்தது. ஒப்பந்தத்தை ஏற்கும்படியான புலிகளுடனான நிர்பந்தம் - பேரங்களில் தோல்வி கண்டபோது ''டெலோ'', ''ஈ.பி.ஆர்.எல்.எஃப்'' போன்ற ஈழத் துரோக அமைப்புகளை வைத்து வடகிழக்கில் ஒரு பொம்மை ஆட்சி நிறுவப்பட்டது. அமைதிப்படை என்கிற பெயரில் அனுப்பப்பட்ட இந்திய இராணுவம் புலிகளுக்கெதிரான ஆக்கிரமிப்புப் போரில் இறங்கி, இரண்டரை ஆண்டுகள் போரிட்டு அவமானகரமான தோல்வியுடன் விரட்டப்பட்டது.

● ஈழப் போரினால் கடும் அரசியல், பொருளாதார நெருக்கடிக்குள்ளாகி இருந்த இலங்கையின் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆளும் பாசிச கும்பலுக்கு எதிரான சிங்கள மக்கள் போராட்டமும் தீவிரமடைந்தது. இந்தியாவின் ஈழ ஆக்கிரமிப்பையும், இலங்கை அரசையும் எதிர்த்த ஜே.வி.பியின் போராட்டங்கள் மேலும் மேலும் தீவிரமடைந்தன. பல நாள் கடையடைப்புகளும், பொதுவேலைநிறுத்தங்களும் வெற்றிகரமாக நடந்து அரசையே நிலைகுலையச் செய்தன. ஆனால், ஜே.ஆர்.—பிரேமதாசா கும்பல் ''பச்சைப் புலிகள்'' என்கிற பெயரில் இராணுவம் - போலீசு - கிரிமினல் குற்றவாளிகளைக் கொண்ட இரகசிய கொலைக் குழுக்களைக் கட்டி பாசிச வெறித்தனமாக அறுபதாயிரத்துக்கும் மேற்பட்ட சிங்கள இளைஞர்களைப் படுகொலை செய்து குவித்தது. ஜே.வி.பியின் தலைமையே பூண்டோடு ஒழிக்கப்பட்டது. எதிர்க்கட்சிப் பிரமுகர்களும் பத்திரிகையாளர்களும், ஜனநாயகவாதிகளும் கூட கோரமாகக் கொல்லப்பட்டனர். சிங்கள மக்களது இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்புப் போராட்டங்களையும், கோசங்களையும் தமக்குச் சாதகமாக்கிப் பிரச்சாரம் செய்துகொண்டு பிரேமதாசா கும்பல் செல்வாக்குப் பெற்றது.

● இந்திய இராணுவத்தை வெளியேற்றுவதில் இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் காணப்பட்ட உடன்பாடும், ஐக்கிய இலங்கைக்குள் மாநில சுயாட்சித் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகளும் முறிந்து போய் 1990 ஜூனில் மீண்டும் தொடங்கிய போர் இன்னமும் நீடிக்கிறது. ஈழத்தின் மீதான பொருளாதார தடை முற்றுகை, இராணுவத்தாக்குதல்கள் ஈழத் தமிழ் மக்களின் வாழ்வைத் தொடர்ந்து சின்னாபின்னப்படுத்திக் கொண்டிருக்கிறது; அதே சமயம் பிரேமதாசா, அதுலத்முதலி, கொப்பேகெடுவ உட்பட 12 உயர் இராணுவ உயர் அதிகாரிகள் தலைமையின் முக்கிய பிரிவையே சிங்கள பாசிச கும்பல் பலிகொடுத்திருக்கிறது; பலாலி கோட்டைமீட்பு, ஆணையிறவு கண்ணிவெடிச் சம்பவம் மாங்குளம் மற்றும் கொக்கிளாய் - கொக்குத் தொடுவாய் - புல்மோட்டை பகுதி இராணுவ முகாம்கள் மீது அதிரடித் தாக்குதல் ஆகிய நடவடிக்கைகளில் புலிகள் பெரும் வெற்றிகளை ஈட்டியுள்ளனர்.

● புலிகளின் இராணுவ ரீதியிலான வெற்றி பாசிசவெறியாக மாறி சிங்கள சிவிலியன்கள் மீது மட்டுமல்ல முஸ்லீம் சிறுபான்மை மக்களுக்கும், ஈழத்தமிழர்களுக்கும் எதிரான படுகொலைகள் பலவும் நடந்துள்ளன. வடக்கிலிருந்து முஸ்லீம் மக்களை வெளியேறும் உத்திரவு போட்டனர். காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலையும், கிழக்கில் நான்கு முஸ்லீம் கிராமங்களில் புகுந்து குழந்தைகள், வயோதிகர்களையும் வெட்டியும் சுட்டும் கொன்றும் வேட்டையாடிய கொடுமைகளும் குறிப்பிட வேண்டியவை. பரம்பரை பரம்பரையாக யாழ்ப்பாணத்தையே தமது தாயகமாகக் கொண்டு வாழ்ந்த முஸ்லீம்கள் நிர்கதியற்ற அகதிகளாகத் துரத்தப்பட்டனர். இதற்குப் பலிவாங்கும் போக்காக 'ஜிகாத்' அமைப்பும், முஸ்லீம் ஊர்க்காவல் படையினரும் சிங்கள அரசின் துணையுடன் தமிழ் மக்கள்மீது கொலைவெறித் தாக்குதல்கள் நடத்தின. தடை செய்யப்பட்ட அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் மற்றும் அவர்களது ஆதரவாளர்கள் எனவும் சமூக விரோதிகள் எனவும் முத்திரை குத்தப்பட்டு வடக்கிலுள்ள சிறைகளில் வதைபடுகின்றனர். இப்படிக் குறைந்தது 4,000 பேர் புலிகளின் கைதிகளாக உள்ளனர். தீப்பொறி அமைப்பின் நிறுவனர் கேசவன், ''புதியதோர் உலகம்'' எழுதிய கோவிந்தன், யாழ் புத்தக நிலைய உரிமையாளர் மணி, பெண்ணிலைவாதியும் கவிஞருமான செல்வி போன்ற பலர் இதில் அடங்குவர். இவர்களின் கதி என்னவானதென்றே தெரியவில்லை. இதோடு ஈழமக்கள் அனைவருமே கட்டாய கப்பம் கட்டும்படி நிர்பந்திக்கப்பட்டுத் தவிக்கின்றனர்.

— மொத்தத்தில் கடந்த பத்தாண்டுகளாகத் தொடரும் போரும், சிங்கள - இந்திய இராணுவத்தின் பயங்கரவாத தாக்குதலும், பொருளாதார தடை முற்றுகைகளும் போராளி அமைப்புகளின் துரோகமும், புலிகளின் பாசிச ஒக்குமுறையும் ஈழத் தமிழர் வாழ்வில் பேரழிவுகளையும் இழப்புகளையும் ஏற்படுத்தியுள்ளன. ஒரு விடுதலைப் போரில் அழிவுகளும் இழப்புகளும் தவிர்க்க முடியாதவைதாம்; என்றாலும் சுதந்திரம், ஜனநாயகம், விடுதலைக்காக ஈழத் தமிழர்கள் கொடுத்துள்ள விலைக்கு ஈடாக எதிர்காலமாவது பிரகாசமான நம்பிக்கையூட்டுவதாக இருக்கிறதா?

— அடுத்த இதழில் முடியும்



**தரைமட்டமாகக் கிடக்கிறது யாழ்ப்பாணம்; பத்தாண்டு காலம் விடாத போர், எண்ணற்ற இழப்புகள்; ஆனால் ஈழ விடுதலைப் போராட்டம் மீண்டும் தொடக்கப்புள்ளியில்.**

படிப்பகம்

www.padippakam.com

## ரஷ்ய நெருக்கடி:

# அதிகாரப் போட்டி முற்றுகிறது
# சர்வாதிகார அபாயம் தொடர்கிறது

ரஷ்யாவில் தொடரும் அதிகாரப் போட்டியும் அரசியல் நெருக்கடிகளும் உள்நாட்டுப் போர் மூளுவதற்கான நிலைமையைத் தோற்றுவித்துள்ளன. அதிபர் யெல்ட்சினுக்கும், முன்னாள் போலிக் கம்யூனிஸ்டுகள் மற்றும் யெல்ட்சின் எதிர்ப்பாளர்களின் பிடியிலுள்ள நாடாளுமன்றத்துக்கும் இடையே நடந்துவரும் அதிகார மோதல் இப்போது உச்சகட்டத்தை அடைந்துள்ளது.

எதிர்த் தரப்பினரின் அதிகாரங்களைப் பறித்து தனது பதவியைத் தக்க வைத்துக் கொள்ளும் நோக்கத்தோடு செப்.21 அன்று யெல்ட்சின் ஓர் அதிரடி உத்திரவைப் பிறப்பித்தார். இதன்படி ரஷ்ய நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுவிட்டதென்றும், விரைவில் தேர்தல் நடைபெறும் என்றும், அதுவரை அதிபரே முழு அதிகாரமுடையவராகச் செயல்படுவார் என்றும் அறிவித்தார். இதனால் ஆத்திரமடைந்த எதிர்த்தரப்பினர் அன்று நள்ளிரவே நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தைக் கூட்டி, யெல்ட்சினின் உத்திரவுகள் சட்டத்திற்கும் ஜனநாயகத்துக்கும் விரோதமானவை என்று சாடி, அவரை அதிபர் பதவியிலிருந்து நீக்கிவிட்டதாக அறிவித்தனர். எதிர்த்தரப்பினரின் தளபதியாக கருதப்படும் சபாநாயகர் கஸ்புலடோவ், துணை அதிபராக இருந்த ரூட்ஸ்கோயை புதிய அதிபராகத் தேர்ந்தெடுத்து பதவிப் பிரமாணமும் செய்து வைத்தார்.

நான்தான் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபர் என்று யெல்ட்சின் ஒருபுறம் உத்திரவுகளைப் போடுகிறார். மறுபுறம், சட்டப்படி நான்தான் அதிபர் என்று ரூட்ஸ்கோய் ஆணைகளைப் பிறப்பிக்கிறார். இருவருமே ராணுவத்தை தயார் நிலையில் வைக்குமாறும், சட்டம் - ஒழுங்கைப் பாதுகாக்குமாறும் உள்துறை அமைச்சர்களுக்கும் மக்களுக்கும் அறைகூவல் விடுக்கின்றனர். யெல்ட்சினையும் அவரது மந்திரிகளையும் நீக்கிவிட்டதாக ரூஸ்ட்கோய் அறிவிக்கிறார். பாராளுமன்றம் தேர்ந்தெடுத்த ரூஸ்ட்கோயையும் அவர் புதிதாக நியமித்துள்ள மந்திரிகளையும் டிஸ்மிஸ் செய்வதாக யெல்ட்சின் அறிவிக்கிறார். யார் அதிபர்? யாருக்கு அதிகாரம்? என்கிற குழப்பமும், போட்டாபோட்டியும் தீராத அரசியல் நெருக்கடியாக ரஷ்யாவைப் பிடித்தாட்டிக் கொண்டிருக்கிறது.

''தனது அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள யெல்ட்சின் ஓர் ரகசிய ஆட்சிக் கவிழ்ப்பை நடத்தியுள்ளார். எங்கள் உயிரே போனாலும் இதை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்'' என்று யெல்ட்சின் எதிர்ப்பாளர்கள் நாடாளுமன்றக் கட்டிடத்துக்குள்ளேயே இருந்து கொண்டு உள்ளிருப்புப் போராட்டத்தை நடத்திவருகின்றனர். நாடாளுமன்றக் கட்டிடத்தின் மின்சாரம், தொலைபேசி, குடிநீர் இணைப்புகளைத் துண்டித்தும் உள்துறை அமைச்சகத்தின் பொறுப்பிலுள்ள ராணுவத்தைக் குவித்து யெல்ட்சின் கும்பல் பீதியூட்டியும் கூட அவர்கள் அசைந்து கொடுக்கவில்லை.

யெல்ட்சினுக்கும் நாடாளுமன்றத்துக்கும் இடையிலான அதிகார மோதலைத் தணிக்க உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ஜோர்கின் ஒரு சமரசத் திட்டத்தைக் கொண்டு வந்தார். இதன்படி யெல்ட்சின் அதிபராக நீடிப்பார்; பாராளுமன்றமும் கலைக்கப்படாமல் செப். 21-க்கு முந்தைய அதிகாரங்களுடன் நீடிக்கும்; விரைவில் நாடாளுமன்றத்துக்கும் அதிபர் பதவிக்கும் ஒரே நேரத்தில் பொதுத் தேர்தல் நடத்துவது என்ற ஆலோசனையையும் இருதரப்புமே நிராகரித்துவிட்டன. ''சட்டத்துக்குத் தலைவணங்கி யெல்ட்சின் பகிரங்க மன்னிப்பு கோராவிடில் எந்தத் தேர்தலையும் நடத்த அனுமதிக்கமாட்டோம்'' என்று கொக்கரிக்கிறார் சபாநாயகர் கஸ்புலடோவ்.

யெல்ட்சினின் அதிரடி உத்திரவுகளை எதிர்த்து பெரும்பான்மையான மாகாண அரசுகள் நாடாளுமன்றத்துக்கு ஆதரவாகத் திரண்டுள்ளன. ஜோர்கின் முன்வைத்த சமரசத் திட்டத்தை யெல்ட்சின் ஏற்காவிடில், தலைநகருக்குச் செல்லும் உணவுப் பொருள் போக்குவரத்தை நிறுத்தப் போவதாக எச்சரித்துள்ளன. செப்.23 அன்று முன்னாள் சோவியத் ஒன்றிய சுதந்திரக் குடியரசுகளின் கூட்டுப்படை தலைமையகத்தின் மீது யெல்ட்சின் எதிர்ப்பாளர்கள் நடத்திய ஆயுதத்தாக்குதல் - எதிர்த்தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். இராணுவத்தில் ஒரு பிரிவு யெல்ட்சினுக்கு ஆதரவாக நாடாளுமன்றக் கட்டிடத்தைச் சூழ்ந்துகொண்டு நின்ற போதிலும், கடுங்குளிரிலும் நாடாளுமன்றம் அருகே யெல்ட்சின் எதிர்ப்பாளர்கள் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர். குறிப்பாக, போலந்தில் அண்மையில் நடந்த தேர்தலில் முதலாளித்துவ வாதிகள் படுதோல்வி அடைந்து, போலிக் கம்யூனிஸ்டுகளின் கூட்டணி பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றியுள்ளதைச் சாதகமாக்கிக் கொண்டு, ரஷியாவின் போலிக் கம்யூனிஸ்டுகள் போராட்டத்தைத் தீவிரப்படுத்தி வருகின்றனர். இதனாலேயே இந்தியப் போலிக் கம்யூனிஸ்டுகளும் போராட்டத்தை ஆதரித்து யெல்ட்சினுக்கு எதிராக அறிக்கை விடுக்கின்றனர்.

மறுபுறம், யெல்ட்சினுக்கு ஆதரவாக அமெரிக்காவும் மேலை ஏகாதிபத்தியங்களும் ஓரணியில் திரண்டுள்ளன. ரஷிய ஒன்றியத்திலிருந்து பிரிந்த 'சுதந்திர'க் குடியரசுகளும் யெல்ட்சின் ஆதரவு நிலையை எடுத்துள்ளன. இந்திய அரசும் ஏகாதிபத்திய விசுவாசத்தோடு யெல்ட்சினை ஆதரிக்கிறது. வரம்பற்ற அதிகாரத்தைக் குவித்துக் கொண்டு யெல்ட்சின் கும்பல் ரகசிய ஆட்சிக் கவிழ்ப்பை நடத்தியபோதிலும், இதுதான் ஜனநாயகம் என்று யெல்ட்சினைக் காப்பாற்ற 250 கோடி டாலரை அமெரிக்கா அவசரமாக ஒதுக்கியுள்ளது.

ஏகாதிபத்தியங்களின் தயவில் யெல்ட்சின் இந்த ஆட்சிக்கவிழ்ப்பு நடவடிக்கையில் தற்காலிகமாக வெற்றி பெறலாம்; அல்லது எதிர்த்தரப்பினரின் நிர்ப்பந்தங்களுக்குப் பணிந்து தற்காலிக சமரசத்துக்கு வரலாம். நிலைமை எவ்வாறாயினும் அடுத்த சுற்றில் அது யெல்ட்சினுக்கு எதிரான பூகம்பமாக வெடிக்கவே செய்யும். ஏனெனின் யெல்ட்சினின் சந்தைப் பொருளாதாரக் கொள்கைகள் படுதோல்வி அடைந்து, அரசியல் பொருளாதார சமூக நெருக்கடிகள் மேலும் உக்கிரமடைந்துள்ளன. இதைச் சாதகமாக்கிக் கொண்டு எதிர்த்தரப்பினர் நடத்தும் போராட்டங்களுக்கு மக்கள் ஆதரவு பெருகி வருகிறது. இந்நிலையில், தனது அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்ள, அமெரிக்காவின் ஆசியுடன் பகிரங்கமான பாசிச சர்வாதிகாரத்தை நோக்கி யெல்ட்சின் பாய்வதற்கான வாய்ப்புகளே அதிகமாக உள்ளன. போலிக்கம்யூனிஸ்டுகளின் சர்வாதிகாரத்தையும், முதலாளித்துவ ஜனநாயகத்தின் கொடுங்கோன்மையையும் குறுகிய காலத்திலேயே அனுபவ ரீதியாக உணர்ந்துள்ள ரஷ்ய மக்கள் இன்னுமொரு பாட்டாளி வர்க்கப் புரட்சிக்காக காத்திருக்கிறார்கள்.

○ குமார்

ரஷ்யாவில் போர்வீரர் சிலையில் கம்யூனிச கொடியை பறக்கவிடும் யெல்ட்சின் எதிர்ப்பாளர்கள்.



www.padippakam.com


# பூகம்பப் பேரழிவு ஆளுங்கும்பலே குற்றவாளி

கடந்த செப். 30-ம் நாளன்று மகாராஷ்டிர மாநிலத்தின் தெற்கே மரத்வாடா பகுதியில் ஏற்பட்ட வரலாறுகாணாத பூகம்பத்தால் 28 ஆயிரத்துக்கும் மேற் பட்டோர் பலியாகியுள்ளதாக கணக்கிடப்படுகிறது. 50-க்கும் மேலான கிராமங்கள் அடியோடு பூமியில் புதைந்துவிட்டன. லத்தூர் அருகிலுள்ள கில்லாரி எனும் கிராமத்தில் மட்டும் குறைந்தது 5000 பேர் பலியாகியுள் ளனர். இப்பூகம்பப் பேரழிவினால் ஏறத்தாழ 50,000 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தியாவில் நடந்துள்ள மிகக் கோரமான பேரழிவு இதுதான் என்று நிலவியலாளர்கள் அறுதியிடுகின்றனர். 6 ரிக்டர் அளவு சக்தி வாய்ந்த இப்பூகம்பம் 30 வினாடி அளவுக்கு அதிகாலை 4 மணி முதல் 7 மணி வரை விட்டுவிட்டு 5 முறை தாக்கியது. மகாராஷ்டிரா தவிர 8 மாநிலங்களிலும் நிலநடுக்கம் ஏற்பட்டது. கர்நாடகாவில் ரெய்ச்சூர், பீஜப்பூர் பகுதிகளில் 25 பேர் பலியாகியுள்ள னர். மற்ற மாநிலங்களில் நிலநடுக்கம் இருந்தபோதிலும் பாதிப்போ உயிர்ச் சேதமோ ஏற்படவில்லை.

**பூகம்பத்திற்கு உறவினரைப் பறிகொடுத்த தாய்மார்களின் கண்ணீர்; இக்கேடுகெட்ட அரசை சும்மா விடாது!**

கேட்போர் நெஞ்சமே வெடித்துவிடும் அளவுக்கு மிகக் கோரமான பேரழிவு ஏற்பட்டு இரண்டு நாட்களாகி யும் மீட்புப் பணிகள் நடக்கவேயில்லை. உற்றார் உறவி னரைப் பறிகொடுத்த துக்கம் தொண்டையை அடைக்க கிராம மக்களே படுகாயமடைந்தவர்களை மாட்டு வண் டிகளில் போட்டுக் கொண்டு மருத்துவமனைக்கு எடுத் துச் சென்றனர். ஆடம்பர - உல்லாச ஊதாரித்தனங்க ளுக்கு ஹெலிகாப்டரில் பறக்கும் ஆட்சியாளர்கள், பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு ஹெலிகாப்டர், ''பாராகுட் '' படையை அனுப்பி மீட்கக்கூட முன்வரவில்லை. இவ் வளவு பெரிய பேரழிவு நடந்த பின்னரும் பிரதமரோ, குடியரசுத் தலைவரோ, மத்திய மந்திரிகளோ அப்பகு திக்கு விரைந்து செல்லவுமில்லை. மராட்டிய முதல்வர் மட்டுமே சென்று பார்வையிட்டுள்ளார். மீட்புப் பணிக ளுக்காக வந்து கில்லாரி கிராமத்தில் முகாமிட்டுள்ள ராணுவம், சாலை வசதிகள் துண்டிக்கப்பட்டதால் அருகி லுள்ள குகிராமங்களுக்குச் செல்லவேயில்லை என்று மாவட்ட ட்சியாளரே ஒப்புக் கொண்டுள்ளார்.

பாதிப்புகள் இல்லாத போதிலும் 1962 முதலாகவே இப்பகுதியில் அடுத்தடுத்து நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் ஆகஸ்டில் - செப்டம்பர் மாதங்களில் தொடர்ச்சியாக நிலநடுக்கம் ஏற்பட்ட போதிலும் மத்திய - மாநில அரசுகள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இத்தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்டு நாடாளுமன்ற சபாநாயகராக உள்ள சிவராஜ் பாட்டிலிடம் கில்லாரி கிராம பஞ்சாயத்துத் தலைவர் முறைப்படி மனு கொடுத் தும், கிராம மக்களை பாதுகாப்பான இடத்திற்கு மாற்றக் கோரி மகாராஷ்டிர சட்ட சபையில் விவாதிக்கப்பட்டும் கூட ஆட்சியாளர்கள் எந்த நடவடிக்கையும் மேற்கொள் ளவில்லை. அவ்வளவு அலட்சியம்! அதிலும் பேரழிவு ஏற்பட்ட இரு மாவட்டங்களும் பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட கூலி - ஏழை விவசாயிகளைக் கொண்ட பகுதிகள் என்ப தால் கடுகளவும் அக்கறை காட்டாமல் இருந்துள்ளனர். 28000 பேரை பலிகொடுத்த பிறகு இப்போது நீலிக்கண் ணீர் வடிக்கின்றனர். இப்பேரழிவுக்கு இயற்கையின் சீற் றமே காரணம் என்று ஆறுதல் கூறும் ஆட்சியாளர்களே முதல் குற்றவாளிகள்!



# பனிமலையில் பயங்கரவாதப் பேய்கள்

சுயநிர்ணய உரிமைப் போர் தொடரும் காஷ் மீரில், அண்மைக் காலமாக நள்ளிரவில் வரும் பேய்க ளும், இரத்தக் காட்டேரிகளும் அம்மக்களை பீதியில் ஆழ்த்தியுள்ளது. தலைநகரான சிறீநகரிலிருந்து வடக்கே சோபூர் வரை கடந்த இரு மாதங்களில் 12-க்கும் மேற்பட் டோர் பேய்களால் தாக்கப்பட்டு படுகாயமடைந்துள்ள னர். நால்வர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தப் பேய்கள் இரும்புக் கவசம் அணிந்து கொண்டு கைவிரல்களில் கூரிய கத்திகளைக் கொண்ட தாக சில பகுதிகளில் வந்து தாக்குகின்றன. வேறுசில பகுதிகளில், கால்களில் சலங்கை கட்டிக் கொண்டு பிச்சை எடுக்கும் பெண்ணாக வருகின்றன. எந்த வடிவத் தில் வந்தாலும் இந்தப் பேய்கள் நள்ளிரவில் வீடு புகுந்து தாக்குவதோடு, பணம், நகைகளையும் கொள்ளையடித் துச் செல்கின்றன. சோபூரில் முகமது கூரு என்பவரை இப்பேய்கள் நள்ளிரவில் வந்து குத்திக் கொன்றன. தால் ஏரிப் பகுதியில் தூங்கிக் கொண்டிருந்த முகமது கான் என்பவரைக் கட்டிலோடு சேர்த்து மாடியிலிருந்து வீசி யெறிந்தன. திடீரென கும்பலாக வந்து பலரைத் தாக்கி விட்டு இப்பேய்கள் தப்பியோடி விடுகின்றன. தைரிய மான இளைஞர்கள் இப்பேய்களைப் பிடிக்க துரத்திச் சென்றால், திடீரென பல பேய்கள் சூழ்ந்து கொண்டு தாக்கிவிட்டுத் தப்பிவிடுகின்றன. பயபீதியும் பயங்கர மும் காஷ்மீரைக் கவ்வியுள்ள நிலையில், போராளிகள் இரவு நேரத்தில் தமது ஆதரவாளர் வீடுகளுக்கு வந்து கதவைத் தட்டினால்கூட யாரும் திறப்பதேயில்லை.

இத்தகைய பேய்களின் பெருக்கத்திற்கும் கொலை வெறித்தாக்குதலுக்கும் காரணம் என்ன? இந்தியக் கொலைவெறி பிடித்த ராணுவம்தான் இத்தகைய 'பேய்' களை ஏவிவிட்டு பயபீதியூட்டி வருகிறது. இத்தகைய புதிய வகை கொலை உத்திகளுடன் போராளிகளை நர வேட்டையாடுவதில் இஸ்ரேலிய ரகசியக் கொலைப்ப டையான ''மொசாத்'' ஏற்கனவே அனுபவம் பெற்றதாக உள்ளது. மொசாத் படையிலிருந்து சிலரை கூலிக்கு அமர்த்திக் கொண்டும் அவர்கள் மூலம் இந்தியாவில் பயிற்சி பெற்ற ரகசிய கொலைக்-குழுக்களைக் கொண் டும் இத்தகைய பேய்த் தாக்குதலை இந்திய அரசு பயங்க ரவாதிகள் நடத்தி வருகின்றனர். இந்த விவகாரம் வெளியே தெரியாமலிருக்க 'பேய்' தாக்கிவிட்டதாக பீதி யையும் வதந்தியையும் பரப்பி வருகின்றனர்.

போராளிகளுக்கு தங்குமிடமில்லாமல் செய்து தனி மைப்படுத்தி தாக்குவது, போராளிகளின் ஆதரவாளர் களை 'பேய்'களைக் கொண்டு தாக்கி அழிப்பது என்கிற நோக்கத்தோடு இத்தகைய ரகசிய கொலைவெறியாட் டத்தை அரசு பயங்கரவாதிகள் நடத்தி வருகின்றனர்.


படிப்பகம்

www.padippakam.com



தப்பியோடிய சில 'பேய்கள்' இந்திய ராணுவத்தின் பதுங்கு குழிகளுக்குள் சென்று மறைவதைப் பார்த்த காஷ்மீரி மக்கள், இப்போது இந்த ரகசிய சதியை அம்பலப்படுத்தத் தொடங்கி விட்டனர். இந்திய அரசு பயங்கரவாதிகளின் கோரமான முகத்தை இப்பேய்ச் சம்பவம் மீண்டுமொரு முறை திரைகிழித்துக் காட்டிவிட்டது.

## பத்திரிகைகள் மீது பாயும் பாசிஸ்டுகள்

இந்துவெறி பாசிஸ்டுகளின் இளைய பங்காளியான சிவசேனா, கடந்த ஆகஸ்ட் மாதத்தில் பம்பாயில் மூன்று முறை செய்திப் பத்திரிகை அலுவலகங்கள் மீது காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை நடத்தியுள்ளது. இத்தாக்குதலைக் கண்டித்த பத்திரிகையாளர்கள் மீதும் வன்முறைக் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

சிவசேனாவுக்கு எதிரான கருத்துக்களைத் தாங்கி வரும் "மகா நகர்" எனும் மராத்திய மாலை தினசரிப் பத்திரிகை அலுவலகம் சிவசேனா குண்டர்களால் அண்மையில் சூறையாடப்பட்டது. இதேபோல் "ஆஜ்தினக்" எனும் மராத்திய மாலை தினசரிப் பத்திரிகை அலுவலகத்தினுள் கும்பலாக நுழைந்த சிவசேனா குண்டர்கள் நிருபர்களையும் பெண் பணியாளர்களையும் மிருகத்தனமாகத் தாக்கி, மேசை, நாற்காலிகளையும் உடைத்து நொறுக்கினர்.

இத்தாக்குதல்களைக் கண்டித்து ஆகஸ்ட்-18 அன்று பத்திரிகையாளர்கள் நடத்திய கருத்தரங்கிலும் சிவசேனா குண்டர்கள் ரௌடித்தனத்தில் இறங்கினர். மேடைமீதேறி மகாநகர் பத்திரிகை ஆசிரியர் நிகில் வாக்லேயைத் தாக்க முற்பட்டனர். போலீசார் வந்ததும் நாற்காலி, ஒலிபெருக்கி, சன்னல் கண்ணாடிகளை உடைத்துவிட்டு ஓடினர். சிவசேனாவின் வெறியாட்டத்தைக் கண்டித்து மீண்டும் ஆகஸ்ட்-28 அன்று பத்திரிகையாளர்கள் பொதுக்கூட்டம் ஒன்றை நடத்தினர். அக்கூட்டத்தையும் நடத்தவிடாமல் கலாட்டா செய்த இந்து வெறியர்கள், பி.பி.சி.யின் செய்தியாளரான தரேஷ் கௌசிக் என்பவரைத் தாக்கினர். சிவசேனாவின் அதிகாரபூர்வ பத்திரிகையான "சாம்னா"வில் சிவசேனா தலைவரான பால்தாக்கரே, "மகாநகர்" பத்திரிகை ஆசிரியரான நிகில் வாக்லேயைத் துரோகி என்று வசைபாடியதோடு, அவரைச் சுட்டுக் கொல்ல வேண்டும் என்றும் கொலைவெறியோடு தலையங்கம் எழுதினார்.

இதைத் தொடர்ந்து நாடு முழுவதுமுள்ள பத்திரிகையாளர்கள் ஊர்வலமாகச் சென்று சிவசேனா அலுவலகம் முன்பு தர்ணா போராட்டத்தை நடத்தினர். அதன் பின்னரே, மேலும் அம்பலப்பட்டு தனிமைப்படுவதைத் தவிர்க்க பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதலுக்கு பால்தாக்கரே வருத்தம் தெரிவித்துள்ளார்.

பத்திரிகைகள் மீதான சிவசேனா குண்டர்களின் தாக்குதல் இப்போது முதன் முறையாக நடப்பதல்ல. கடந்த மூன்றாண்டுகளாக அதன் பாசிச பயங்கரவாதத்தை எதிர்க்கும் பத்திரிகைகளைக் குறிவைத்துத் தொடர்ந்து தாக்கி வருகிறது. சிவசேனாவின் அட்டூழியங்களை எதிர்த்து பம்பாய் பத்திரிகையாளர்கள் நடத்தி வரும் போராட்டம் பாராட்டத்தக்கது என்றாலும், இந்து வெறி பாசிஸ்டுகளை பத்திரிகை பிரச்சாரத்தின் மூலமாக நிர்மூலமாக்கிவிட முடியாது. வலுவான குண்டர்படையைக் கொண்டுள்ள சிவசேனாவுக்கு எதிராக, புரட்சிகர - ஜனநாயக சக்திகளை அணிதிரட்டி எதிர்த் தாக்குதல் நடத்தாமல், பெருகிவரும் இந்துவெறி பாசிச அட்டூழியங்களை தடுத்து நிறுத்திடவும் முடியாது.



"மகாநகர்" தினசரியின் ஆசிரியரைச் சூழ்ந்து கொண்டு தாக்கும் சிவசேனா குண்டர்கள்

## இட ஒதுக்கீடு விவகாரம் மேல் சாதியினரின் மோதலே

பிற்பட்டோருக்கு இட ஒதுக்கீடு அளிப்பது தொடர்பாக கடந்த ஆண்டு நவம்பரில் உச்சநீதி மன்றம் தீர்ப்பளித்த பிறகு, 10 மாதங்களாக கிடப்பில் போட்டு வந்த காங்கிரசு அரசு, இப்போது அவசரமாக அதனைச் செயல்படுத்த ஒப்புக்கொண்டுள்ளது. பாரதீய ஜனதா அரசுகள் கலைக்கப்பட்ட 4 மாநிலங்களின் விரைவில் இடைத் தேர்தல் நடைபெற உள்ளதால், ஓட்டுக்களைக் குறிவைத்து அரசியல் ஆதாயம் பெறும் நோக்கத்தோடு மத்திய அரசு இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இதன்படி அரசு உயர்பதவி வகிப்போர், மருத்துவர், வழக்கறிஞர், பொறியியலாளர், விவசாயப் பண்ணையாளர் மற்றும் வருட வருமானம் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டவர்களின் குழந்தைகள் முன்னேறிய பிரிவாகக் கருதப்படுவர். பிற்பட்டவர்களாக இருந்தாலும் இவர்களுக்கு இட ஒதுக்கீடு கிடையாது. இதுதவிர, இட ஒதுக்கீடு தகுதியுடைய 1300 பிற்பட்ட சாதிகளை அறிவிப்பது, பிற்பட்ட சாதிக்குள்ளேயே, மிகவும் பிற்பட்ட சாதிகளைக் கண்டறிந்து வகைப்படுத்துவது, இரு பிரிவினருக்கும் தனித்தனி ஒதுக்கீடுகளைச் செய்வது ஆகியவற்றை விரைவில் நிறைவேற்றப் போவதாகவும் அறிவித்துள்ளது. இது எப்போது நிறைவேறும் என்பதற்கான உத்திரவாதமும் இல்லை. சுருக்கமாகச் சொன்னால், இட ஒதுக்கீட்டுக்கு ஏற்ற பொருத்தமான நடைமுறையை உருவாக்குவது என்ற பெயரில் தீராத சிக்கலுக்குள் இழுத்தடிப்பதே காங்கிரசுப் பெருச்சாளிகளின் நோக்கமாக உள்ளது. இதனால்தான், மண்டல் பரிந்துரைகளைக் கடுமையாக எதிர்த்து வந்த அருண்ஷோரி முதலான 'அறிவுஜீவி'களும், மேல்சாதி-பார்ப்பனக் கும்பலும் இப்போது வாயை மூடிக்கொண்டு ஆதரிக்கின்றன.

மறுபுறம், பிற்பட்டவர்களிலேயே வசதிபடைத்த மேட்டுக்குடியினரை இட ஒதுக்கீட்டில் சேர்க்காததை எதிர்த்து தி.க., தி.மு.க., ஜனதாதளம் ஆகியவை பேசியும் எழுதியும் வருகின்றன. பிற்பட்டவர்களை பொருளாதார அளவுகோலை வைத்துப் பார்க்கக்கூடாது; சமூக ரீதியாகப் பார்க்க வேண்டும் என்று அவை வாதிடுகின்றன. இவர்கள் குறிப்பிடும் வசதிபடைத்த பிற்பட்ட சாதியினர்தான், அரசு பதவிகளில் மட்டுமின்றி, உள்ளூர் அளவில் தாழ்த்தப்பட்ட மக்களைச் சுரண்டி ஒடுக்கும் மேல்சாதி வெறியர்களாக உள்ளனர். பிற்பட்டோருக்கான இட ஒதுக்கீடு என்ற பெயரில், முற்பட்டவர்களுக்குப் போட்டியாக அரசு பதவிகளைக் கைப்பற்ற மேட்டுக்

படிப்பகம்

www.padippakam.com



குடி - மேல்சாதி பிற்பட்டவர்கள் நடத்தும் போராட்டம் தான் இது. மேல்சாதி இந்துக்களிலேயே ஒரு பிரிவினரான முற்பட்டவர்களுக்கும், மற்றொரு பிரிவினரான பிற்பட்டவர்களுக்கும், பிற்பட்ட சாதிகளுக்கு இடையேயும் நடக்கும் சண்டை மீண்டும் நிரூபணமாகியுள்ளது.

ஆனால், ஒருசில மா-லெ புரட்சிகர குழுக்கள் மற்றும் போலிப் புரட்சியாளர்கள் பிற்பட்டவர்களிலேயே வசதி படைத்தவர்கள் தவிர மற்றவர்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டும் என்றும், இதை காங்கிரசு அரசு நிறைவேற்றாது என்றும் போராட்டங்களை நடத்தினர். இத்தகைய சீர்திருத்தங்களுக்கான போராட்டத்தையே வர்க்கப் போராட்டமாகச் சித்தரித்து முன்னுரிமை கொடுத்தனர். அவர்கள் கோரியபடியே, வசதிபடைத்த பிரிவினர் தவிர இதர பிற்பட்ட சாதியினருக்கு இப்போது அதிகாரபூர்வமாக இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டுவிட்டது. ஆளும் வர்க்கங்கள் எப்போதுமே அடக்குமுறையைச் சார்ந்திருப்பதில்லை. சமூகத் தேவைகள், நிர்பந்தங்கள் காரணமாக அவை சில சில்லறை சீர்திருத்தங்களை மேற்கொண்டு எதிர்ப்பை திசை திருப்புவது நடக்கக் கூடியதுதான். யதார்த்த நிலைமையைப் பரிசீலிக்காமல் பரவசப் போக்கில் தவறான முடிவுகள் எடுத்த சில புரட்சிகர குழுக்கள் இப்போது வாய்திறக்க முடியாமல் தடுமாறி நிற்கின்றன.

அதேசமயம், இட ஒதுக்கீடு மூலமாக தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட சாதிகளின் ஒடுக்கப்பட்ட மக்கள், சுரண்டல் - அடக்குமுறையிலிருந்து ஒருபோதும் விடுதலை அடைந்துவிட முடியாது என்பதையே கடந்த 40 ஆண்டு கால அனுபவங்கள் காட்டுகின்றன. இட ஒதுக்கீடு ஆதரவும் சரி, எதிர்ப்பும் சரி — தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்கள் உட்பட சகல பிரிவு உழைக்கும் மக்களையும் அடக்கி ஒடுக்கிச் சுரண்டும் தரகு அதிகார முதலாளிகள், நிலப்பிரபுக்களுக்குச் சேவை செய்யும் அரசு எந்திரத்தில் பதவி - இடம் பிடிப்பதற்கான போட்டா போட்டியும் நாய்ச் சண்டையும்தான். இந்த அப்பட்டமான உண்மை இப்போது மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

## நாற்காலிக்காக நாய்ச்சண்டை
## பாசு - பட்டாச்சார்யா லடாய்

**'மார்க்சிஸ்டு' கட்சிக்குள் நாறும் கோஷ்டிப் பூசல் சித்தாந்த மோதல் அல்ல; அப்பட்டமான அதிகாரப் பதவிச் சண்டை**

மே.வங்க 'இடது' முன்னணி அரசின் கலாச்சார - தகவல் அமைச்சராக இருந்த புத்தாதேவ் பட்டாச்சார்யா திடீரென பதவி விலகிய விவகாரம், 'மார்க்சிஸ்டு' கட்சிக்குள் நிலவும் கோஷ்டிப் பூசலையும் அதிகாரப் போட்டியையும் மீண்டும் தோலுரித்துக் காட்டியுள்ளது.





வங்கத்தை ஆளும் 80 வயதான ஜோதிபாசுவுக்குப் பிறகு அடுத்தது யார் பதவியில் உட்காருவது என்பதுதான் தற்போதைய கோஷ்டிப் பூசலுக்கு மூல காரணம். தற்போதைய பதவிப் போட்டியில் முன்னணியில் இருந்தவர்தான் பட்டாச்சார்யா. முன்பு ஜோதிபாசுவின் வாரிசாக புகழப்பட்ட இவர்தான் இன்று பாசுவுக்கு எதிராகக் கலகக் கொடி தூக்கியுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த பாசு கும்பல், பட்டாச்சார்யாவுக்கு எதிராக விளையாட்டுத்துறை அமைச்சரான சுபாஷ் சக்ரவர்த்தியைக் களத்தில் இறக்கிவிட்டது. உடனே சுபாஷின் தவறுகள், அதிகார முறைகேடுகளை பட்டாச்சார்யா அம்பலப்படுத்தத் தொடங்கினார். 'இடது' முன்னணி அரசின் ஊழல்களை - குறிப்பாக ஜோதிபாசுவின் ''பூர்ஷ்வா'' மகன் சந்தன் பாசுவுக்குச் சலுகைகள் காட்டப்படுவதை தோலுரித்துக் காட்டுவதன் மூலம் பாசுவின் செல்வாக்கைக் குறைக்க எத்தனித்தார். அதைத் தொடர்ந்து பாசு - பட்டாச்சார்யா லடாய் தீவிரமடைந்தது.

இதன் உச்சகட்டமாக, தாகூரின் 52-வது நினைவு நாளை ஒட்டி பட்டாச்சார்யா தனது பொறுப்பிலுள்ள தகவல் - கலாச்சாரத் துறையின் சார்பில் ஒரு விழாவுக்கு ஏற்பாடு செய்தபோது, அதற்குப் போட்டியாக இன்னொரு விழாவுக்கு ஏற்பாடு செய்தார் சக்கரவர்த்தி. இதனால் ஆத்திரமடைந்த பட்டாச்சார்யா தனது பதவியை ராஜினாமா செய்வதாக அறிவித்தார். பீதியடைந்த ஜோதிபாசு அவசரமாக தனது வெளிநாட்டுப் பயணத்தை ரத்து செய்துவிட்டு, பட்டாச்சார்யா மீது பழிசுமத்தி அவரைத் தனிமைப்படுத்தும் வேலைகளில் இறங்கினார்.

தனது பதவி விலகலைப் பற்றி முறையாக கட்சித் தலைமைக்குத் தெரிவிக்காமல், செய்தியை முதலாளித்துவப் பத்திரிகைகளுக்குக் கசியவிட்டது தவறு என்று பட்டாச்சார்யா மீது குற்றம் சாட்டப்பட்டு, மித்னாபூர் கட்சி விவகாரப் பொறுப்பு அவரிடமிருந்து பறிக்கப்பட்டது. கல்கத்தா நகர வளர்ச்சிக் குழுமத்தில் அவருக்கு அளிக்கப்பட்ட பதவியும் பிடுங்கப்பட்டுள்ளது. கட்சியிலும் ஆட்சியிலும் பாசுவின் கை மேலோங்கியிருப்பதை இது நிரூபித்துக் காட்டியுள்ளது. இருப்பினும் ''ஒரு நிச்சயமற்ற அமைதி நிலவுகிறது; மோதலுக்கான காரணங்கள் பூசிமெழுகப் பட்டுள்ளன.'' என்று 'மார்ச்சிஸ்டு' மந்திரிகளே ஒப்புக் கொள்கின்றனர்.

''எங்கள் கட்சி கட்டுப்பாடுமிக்கது'' என்று சவடால் அடித்து வந்த 'மார்க்சிஸ்டு' கட்சிக்குள் இப்போது மீண்டும் கோஷ்டிப் பூசல்கள் புழுத்து நாறத் தொடங்கிவிட்டது. சித்தாந்த மோதல்கள் அல்ல; அப்பட்டமான அதிகாரப் போட்டிக்கான நாய்ச்சண்டை தீவிரமடைந்திருக்கிறது.

## பிரிட்டனில் பரவும் இனவெறி

ஜெர்மனியைத் தொடர்ந்து, முதலாளித்துவ ஜனநாயகத்தின் தொட்டிலாகக் கருதப்படும் பிரிட்டனிலும் நவீன நாஜிகளின் அட்டூழியங்கள் பெருகத் தொடங்கிவிட்டன. கடந்த 8-ஆம் தேதியன்று பிரிட்டனில் குடியேறி வசித்து வரும் வங்க தேசத்தைச் சேர்ந்த ஒரு இளைஞனை, எட்டு வெள்ளையர்களும் ஒரு வெள்ளைக்காரப் பெண்ணும் சேர்ந்து காட்டுமிராண்டித்தனமாக அடித்துப் போட்டு விட்டு ஓடிவிட்டனர். படுகாயமடைந்த அந்த இளைஞர் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இச்சம்பவம் பிரிட்டனில் வாழும் ஆசிய நாடுகளைச் சேர்ந்த மக்களிடம் ஆத்திரத்தை ஏற்படுத்தியது. அவர்கள் பெருந்திரளாக மருத்துவமனை முன்பு திரண்டு நிறவெறியர்க

படிப்பகம்

www.padippakam.com



ளைத் தண்டிக்கக்கோரி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

லண்டன் மாநகரின் கிழக்குப் பகுதியில் வங்கதேசம் மற்றும் பிற ஏழை ஆசிய நாடுகளைச் சேர்ந்த மக்கள் பெருமளவில் குடியேறி வாழ்கின்றனர். பிரிட்டனில் நிலவும் வேலையின்மை, வீட்டு வசதியின்மை முதலானவற்றுக்கு ஆசிய நாட்டவர்கள்தான் காரணம் என்று இப்பகுதியில் வளர்ந்துவரும் பிரிட்டிஷ் தேசியக் கட்சி இனவெறியைக் கிளறிவிட்டு வருகிறது. ஏற்கனவே வேலையின்றி, வீடின்றித் தவிக்கும் பிரிட்டிஷ் மக்களிடம் — குறிப்பாக இளைஞர்களிடம் இத்தகைய இனவெறிக் கருத்துக்கள் தீயாகப் பற்றிக் கொள்ளத் தொடங்கியதும் அண்மைக்காலமாக ஆசிய நாட்டவர் மீதான தாக்குதல் தீவிரமாகி வருகின்றன. கடந்த ஈராண்டுகளில் மட்டும் சிறியதும் பெரியதுமாக 7,000 தாக்குதல்கள் நடந்துள்ளன.


அண்மையில் கிழக்கு லண்டனில் போவர் ஹேம்லெட் தொகுதியில் நடந்த இடைத்தேர்தலில் நவீன நாஜிக் கட்சியான பிரிட்டிஷ் தேசியக் கட்சி வெற்றி பெற்றுள்ளது. தேர்தலின் போது இப்பகுதியில் வாழும் வங்கதேசத்தவர்கள் வீட்டைவிட்டு வெளியே வந்து வாக்களிக்கவே முடியவில்லை. முசோலினியைப் போல மொட்டையடித்துக் கொண்டுள்ள இக்கட்சியின் குண்டர்கள் கையில் ஆயுதங்களுடன் வந்து வங்கதேசத்தவரை மிரட்டினர். தேர்தல் வெற்றி அறிவிப்பு வெளியானதும் அதைக் கொண்டாடும் வகையில் இக்குண்டர்கள் ஆசிய நாட்டவரை மிருகத்தனமாகத் தாக்கினர். ''பிரிட்டனில் வெள்ளையருக்கே முதலிடம், முழு உரிமை உண்டு; அந்நிய நாய்கள் அதைப் பங்குபோட அனுமதிக்க மாட்டோம்'' என்று கொக்கரிக்கிறார் இத்தொகுதியில் வெற்றி பெற்ற நவீன நாஜி டெரக் பீக்கான்.

நவீன நாஜி-இனவெறி சக்திகள் வேர்விட்டுப் பரவுவதற்கு பெருகிவரும் ஏகாதிபத்திய நெருக்கடிகளே வளமான அடிப்படையாக உள்ளன. முதலாளித்துவ ஜனநாயகத் தொட்டிலில் இன்று நவீன நாஜியிசம் துள்ளி விளையாடத் தொடங்கிவிட்டது. ஜெர்மனி, பிரிட்டன் மட்டுமல்ல ஐரோப்பாவையே விழுங்கிவிடுமளவுக்குப் புதிய அச்சுறுத்தலாக நவீன நாஜியிசம் வேகமாகப் பரவி வருகிறது.

## வன்முறையாளர்கள் யார்?
## 'நீதி'த் துறையின் புதிய தீர்ப்பு!

தொழிலாளர்களின் போராட்ட உரிமையை நசுக்கி அபராதம் விதிக்கும் மிகக் கொடிய பாசிசத் தீர்ப்பை அண்மையில் பம்பாய் உயர்நீதிமன்றம் பிறப்பித்துள்ளது. மஹாராஷ்டிர மாநிலம் புனாவிலுள்ள பஜாஜ் ஆட்டோ - ஸ்கூட்டர் தொழிற்சாலையில், ஊதிய உயர்வு கோரி 1979-ஆம் ஆண்டு தொழிலாளர்கள் மாபெரும் வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தினர். இப்போராட்டத்தை ஒடுக்க வந்த போலீசாரைத் திருப்பித் தாக்கிய தொழிலாளர்கள், போலீசு வாகனங்களைத் தீயிட்டுக் கொளுத்தினர். இது தொடர்பாக 31 தொழிலாளர் மீது போலீசார் வழக்கு தொடுத்திருந்தனர். 13 ஆண்டுகளுக்குப் பிறகு இவ்வழக்கில் தீர்ப்பளித்த நீதிபதி அரசு சொத்துக்களைச் சூறையாடி வன்முறையில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டி 31 லட்ச ரூபாயை தொழிலாளர்கள் மீது அபராதமாக விதித்துள்ளார். ''வன்முறையைத் தூண்டும் தொழிற்சங்கங்கள் அதற்கான தண்டனையை அனுபவித்தே தீர வேண்டும்'' என்றும் எச்சரித்துள்ளார்.

தொழிலாளர் போராட்டத்திற்கான காரணம், நிர்வாகம் - தொழிற் கோர்ட்டுகளின் பங்கு, போலீசின் பாத்திரம், தொழிலாளர்களை ஆத்திரமூட்டிய நிகழ்ச்சி - முதலான எதைப் பற்றியும் ஆராயாமல், ஒருதலைப் பட்சமாக வன்முறை என்று முத்திரை குத்தி, தொழிற்சங்க உரிமையைப் பறிக்கும் இப்பாசிச தீர்ப்பை முதலாளிகளும் அரசாங்கமும் வரலாற்றுச் சிறப்புமிக்கது என பாராட்டி வரவேற்றுள்ளன.



1984 கலவரத்தில் தன் மகனை பறிகொடுத்த தாய்; குற்றவாளிகள் தண்டிக்கப் படவில்லை.

தொழிலாளர் போராட்டத்தை வன்முறையாகச் சித்தரித்து அபராதம் விதிக்கும் இந்திய நீதித்துறை, 1984-ல் இந்திரா சாவின் போது சீக்கியர்கள் மீது காங்கிரசு குண்டர்கள் நடத்திய வன்முறை - இனவெறித் தாக்குதலுக்கு என்ன தண்டனை விதித்தது? எதுவுமேயில்லை.

சீக்கியர்கள் மீதான நரவேட்டையைப் பற்றி விசாரித்த ஜெயின் மற்றும் அகர்வால் கமிஷன்கள், பத்தாண்டுகளுக்குப் பிறகு கடந்த ஆகஸ்ட் மாதத்தில் தனது அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது. 5,000 சீக்கியர்கள் உயிரோடு எரிக்கப்பட்டும், வெட்டிக் கொல்லப்பட்டும், வீடுகள் சூறையாடப்பட்டும் நடந்த இக்கொடிய கலவரத்தில் காங்கிரசுக்காரர்களும் போலீசாரும் குற்றவாளிகளாக அடையாளம் காட்டப்பட்டுள்ளனர். இவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு கமிஷன் பரிந்துரைத்துள்ளது. குறிப்பாக, காங்கிரசுத் தலைவர்களான ஹெச்.கே.எல்.பகத், சஜ்ஜன் குமார், ஜெகதீஷ் டைட்லர் மற்றும் 298 போலீசு அதிகாரிகள் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். ஆனாலும் இப்பாசிச பயங்கரவாதிகள் மீது அரசாங்கமோ, நீதித்துறையோ இன்றுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அதேபோல, அயோத்தியில் மசூதியை இடித்து நாடெங்கும் முஸ்லீம்களை நரவேட்டையாடிய இந்து வெறி பாசிஸ்டுகள் மீது இன்றுவரை எந்த நடவடிக்கையும் இல்லை.

உரிமைக்காகப் போராடிய தொழிலாளர்களுக்கு அபராதம்; உயிர்குடிக்கும் பாசிஸ்டுகளுக்கு விடுதலை. புரிந்துகொள்ளுங்கள்! இதுதான் இன்றைய இந்தியாவின் வரலாற்றுச் சிறப்புமிக்க 'நீதி'!

படிப்பகம்

www.padippakam.com

# ஓய்யாரக் கொண்டையின் உள்ளே ஈறும் பேனும்

## அமெரிக்காவிற்கே கடன்கொடுக்கும் ஜப்பானில் வறுமையும், வேலையின்மையும், வீடற்றவர்களும் பெருகுகிறார்கள்; ஏழைகள் நிறைந்த பணக்கார நாடு

நோபோ கிஷி - ஜப்பானின் சான்யா பிராந்தியத்தைச் சேர்ந்த 36 வயதான தொழிலாளி. பத்தாண்டுகளுக்கு முன்பு, கார் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றில் வேலை செய்த போது அவருக்கு நல்ல ஊதியம் கிடைத்தது. ஆனால் ஈராண்டுகளுக்கு முன்பு அந்த நிறுவனம் ஆட்குறைப்பு செய்தபோது கிஷியும் வேலையிலிருந்து விரட்டியடிக்கப்பட்டார். சான்யா மாவட்டத்தில் அவரைப் போலவே ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் வேலையின்றித் தவிப்பதைப் பார்க்கும்போது அவருக்கு நம்பிக்கையே போய்விட்டது. கையிலிருந்த சேமிப்புகளெல்லாம் கரைந்து கடன் சுமையால் தவிக்கும் அவர் ஏறத்தாழ ஒரு பிச்சைக்காரனின் நிலைக்குத் தள்ளப்பட்டார். தொழிற்சங்கங்களும் சில சமூக சேவை அமைப்புகளும் இணைந்து நிறுவியுள்ள ''பிரட்லைன்'' ''சூப்லைன்'' எனப்படும் கஞ்சித் தொட்டி நிலையத்துக்கு தின்மும் மதியம் சென்று ஒரு துண்டு ரொட்டியும் ஒரு குவளை கஞ்சியும் வாங்கிக் குடித்துக் கொண்டு எப்படியோ உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறார். ''ஜப்பான் மிக மோசமான நாடு; அது தொழிலாளிகளிடம் இரக்கமற்ற அரக்கனாக நடந்து கொள்கிறது'' என்று குமுறுகிறார், அவர்.

''குபேரபுரியான ஜப்பானிலா இப்படி?'' என்று பலர் சந்தேகத்தோடு புருவத்தை நெறிக்கலாம். ''அமெரிக்காவுக்கே கடன் கொடுக்குமளவுக்கு மிகப்பெரிய பொருளாதார வல்லரசாக வளர்ந்துள்ள ஜப்பானில் வறுமையும் வேலையின்மையும் நீடிக்கிறதா? கற்பனை செய்ய முடியாத கட்டுக்கதை'' என்று சிலர் திடலடியாக மறுக்கலாம். ஆனால் ஜப்பானின் அண்மைக்கால நிலைமைகளை சற்று உற்றுக் கவனித்தாலே இந்த உண்மைகள் பளிச்சென தெரிய வரும்.

மிகப் பெரிய பொருளாதார வல்லரசாக வளர்ந்துள்ள ஜப்பானில், கடந்த 4,5 ஆண்டுகளாக இதுவரை காணாத உற்பத்தித் தேக்கமும் பணவீக்கமும் நீடித்து வருகிறது. மிகப்பெரிய தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன அல்லது நிர்வாகச் சீரமைப்பு என்ற பெயரில் ஆட்குறைப்பு செய்து தொழிலாளர்களை வெளியேற்றுகின்றன. குறிப்பாக, அமெரிக்காவும் சில ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுகளும் தமது சந்தையைப் பாதுகாத்துக் கொள்ள, ஜப்பானிய நுகர்பொருட்களின் இறக்குமதிக்கு காப்புரிமை கட்டுப்பாடுகள் விதித்ததிலிருந்து, ஜப்பானில் நெருக்கடிகள் முற்றத் தொடங்கிவிட்டன. உற்பத்தி பெருகி சந்தை இல்லாத நிலையில் இன்று ஜப்பானில் 20%-க்கும் மேற்பட்ட ஆலைகளில் 'லே-ஆப்' விடப்பட்டுள்ளது. ஜப்பானின் மூன்றாவது பெரிய நகரமான ஒசாகாவில் மட்டும் 25,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலையின்றித் தவிக்கின்றனர்.

பெரிய ஆலைகளிலிருந்து விரட்டப்பட்டு, வேலையின்றித் தவிக்கும் தொழிலாளர்கள், சிறிய நிறுவனங்களில் தினக்கூலிகளாக வேலைக்குச் சேர முடிவதில்லை. ஏனெனில் அத்தகைய நிறுவனங்களில் அற்பக்கூலிக்கு அடிமைபோல் வேலை செய்யும் ஏழைநாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் ஏற்கனவே லட்சக்கணக்கில் உள்ளனர். இதனால் பெரிய ஆலைகளிலிருந்து விரட்டப்படும் ஜப்பானியத் தொழிலாளர்களுக்கு வேலை கிடைப்பதென்பது குதிரைக் கொம்பாகிவிட்டது. வேலையிழந்து கடன் சுமையால் தத்தளிக்கும் தொழிலாளிகள், தமது மனைவி - குழந்தைகளை உறவினர்களிடம் ஒப்படைத்துவிட்டு, நகரங்களிலேயே தங்கி வேலைதேடி அலைகின்றனர். நாளடைவில் கையிலிருந்த அற்ப சேமிப்பும் கரைந்த பிறகு, வீடற்றவர்களாக மாறி பிச்சை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.



குபேரபுரி ஜப்பானில் தெருவோரங்களில் தீமூட்டி குளிர்காயும் வீடற்ற ஏழைகள்.

### குபேரபுரியில் வீடற்ற ஏழைகள்

சான்யா மாவட்டத்தில் மட்டும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளிகள் வீடற்றவர்களாக உள்ளனர். தலைநகர் டோக்கியோவில் ஏறத்தாழ 5,000-க்கும் மேலானோர் வீடற்றவர்களாக உள்ளனர் என்று ஜப்பானிய பத்திரிகைகளே ஒப்புக் கொள்கின்றன. உடைந்து கைவிடப்பட்ட கார்கள், பூங்காக்கள், ஆற்றுப் பாலங்கள், நெடுஞ்சாலை மேம்பாலங்கள், சுரங்கப் பாதைகள் முதலானவற்றில் வீடற்றவர்கள் இரவுப் பொழுதைக் கழிக்கின்றனர்.

அரசாங்கமோ வீடற்றவர்கள் என்று யாருமேயில்லை என்று கூறுகிறது. தெருவில் திரியும் ஊதாரிகள், குடிகாரர்கள், அரைப் பைத்தியக்காரர்தான் வீடற்றவர்கள் என்பது அரசின் வாதம். வேலையிழந்து வாழ்விழந்த தொழிலாளர்கள வீடற்றவர்களாகத் திரிவதாக ஒப்புக்கொண்டால் அது நாட்டின் கௌரவத்தையே பாதிக்கும் என்று திட்டமிட்டே இருட்டடிப்பு செய்து வருகிறது.

ஆனால் குபேரபுரியான ஜப்பானில், கடந்த ஆண்டில் சான்யா பிராந்தியத்தில் மட்டும் 186 வீடற்ற தொழிலாளர்கள் பட்டினியாலும் நோயினாலும் ரௌடிகளின் தாக்குதலாலும் பலியாகியுள்ளனர். இவ்வாண்டு ஜனவரியில் மட்டும் 26 பேர் மாண்டு போயுள்ளனர்.

பத்திரிகை நிருபரும் வீடற்றோர் உரிமைக்காக குரல் கொடுப்பவருமான அட்சுஷி என்பவர், தெருவில் வாழும் 400-க்கும் மேற்பட்ட வேலையிழந்த தொழிலாளிகளின் வாழ்க்கையைப் பற்றிய ஆய்வை 1990-ஆம் ஆண்டில் மேற்கொண்டார். 1991-ஆம் ஆண்டின் துவக்கத்தில் அவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் நோயினாலும் குளிராலும் மாண்டுபோய் விட்டதாக தனது ஆய்வறிக்கையில் வேதனையுடன் குறிப்பிட்டுள்ளார்.

ஜப்பானின் பெரும் பணக்காரர்களது மாளிகைகளின் அறைகளுக்குச் சூடேற்றும் கருவிகள் அப்பங்களாக்களின் முன்பகுதியில் வைக்கப்பட்டிருக்கும். குளிர்காலத்தில்

படிப்பகம்

www.padippakam.com

ஓரளவுக்காவது குளிரின் கொடுமையிலி ருந்து தப்பிக்கலாம் என்று வீடற்றோர் பலர் இரவில் இக்கருவியின் அருகே படுத்துறங் குகின்றனர். மற்றவர்கள் குப்பைக் கூளங்க ளைப் பொறுக்கி தீமூட்டி குளிர்காய்ந்து கொண்டு இரவுப் பொழுதைக் கழிக்கின்ற னர்." கடுங்குளிர் காலத்தில் எத்தனை பேரால் இப்படித் தாக்குப் பிடிக்க முடியும்? குளிர் தாளாமல் உடல் விறைத்து இறந்து போனவர்கள் ஏராளம்.

கம்போடியாவில் அமைதியை நிலை நாட்டப் போவதாகக் கூறிக்கொண்டு தனது படைகளை அனுப்பி மேலாதிக்கம் செலுத் தத் துடிக்கும் ஜப்பானிய வல்லரசு, தமது நாட்டு மக்களுக்கு குடியிருப்பு வசதிக ளைக்கூட செய்து தராமல் அமைதியாகவே அவர்களைச் சுடுகாட்டுக்கு அனுப்பி வருகி றது. வீடற்றோர்பிரச்சினையைத் தீர்க்க ஜப் பானிய ஆட்சியாளர்களிடம் உருப்படி யாக எந்தத் திட்டமும் கிடையாது. வீடற் றோருக்காக அரசு செலவிடுவது மிக அற்ப மானது. உள்ளூராட்சி நிர்வாகங்களே இதற் குப் பொறுப்பு என அரசு கையைக் கழுவிக் கொள்கிறது. தலைநகர் டோக்கியோவில் வீடற்றோருக்காக ஒரேயொரு சிறிய சத்தி ரம் மட்டுமே உள்ளது. இதுவும் கூட ஆண் டுக்கொருமுறை புத்தாண்டு தினக் கொண் டாட்டங்களின்போது ஒருவார காலத்திற்கு மட்டுமே திறக்கப்படும். மற்றைய காலங்க ளில் அவர்கள் தெருவில் அலைந்து திரிய வேண்டியதுதான். போலீசாரால் அடிக்கடி விரட்டியடிக்கப்படுவதால், அவர்கள் டோக்கியோ நகரத் தெருக்களில் கூட குடி யிருக்க முடிவதில்லை.

**"ஜப்பானைப் பார்!**
**உண்மையைப் புரிந்துகொள்!"**

"ஜப்பானைப் பார்! அந்த நாட்டு மக்க ளின் சுறுசுறுப்பைப் பார்! இரண்டாம் உல கப் போரில் நொறுங்கிச் சிதைந்த அந்த நாடு இன்று மாபெரும் வல்லரசாகத் திகழ்வ தற்குக் காரணமே அந்நாட்டு மக்களின் கடின உழைப்பும் சுறுசுறுப்பும்தான். அந் நாட்டுத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தங் களில் ஈடுபடுவதே இல்லை. நாட்டு நலன் கருதி அவர்கள் கடுமையாக உழைக்கிறார் கள்." — பள்ளிக்கூடம் தொடங்கி பத்திரி கைகள் வரை இப்படித்தான் ஜப்பானைப் பற்றிய சித்திரம் நம்நாட்டு மக்களிடம் உரு வாக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஜப்பா னின் பொருளாதார வளர்ச்சிக்கு மிக முக்கி யமான அடிப்படையான காரணத்தை அவர்கள் திட்டமிட்டே மறைத்து வருகிறார் கள். அதுதான் ஜப்பானியத் தொழிலாளர்க ளின் ரத்தம் ஒட்டச் சுரண்டப்படும் கொடு ரம்; ஓயாது இயங்கும் அவர்களின் இயந் திர வாழ்க்கை.

விலையேற்றமும், வாழ்க்கைத் தேவைக்கான செலவுகளும் ஜப்பானில் தொடர்ந்து அதிகரித்து வருவதால், எல் லாத் தொழிலாளிகளும் "ஓவர் டைம்" வேலை செய்ய வேண்டிய நிலைக்குத் தள் ளப்பட்டுள்ளார்கள். நாளொன்றுக்கு 12 அல்லது 16 மணிநேரம் வேலை செய்யும் தொழிலாளர்களே அதிகமாக உள்ளனர்.



ஒசாகாவிலுள்ள கஞ்சித் தொட்டி நிலையத்தில் கையேந்தி நிற்கும் வேலையிழந்த தொழிலாளர்கள்

களைப்போ, சோர்வோ தெரியாமல் தொடர்ந்து வேலை செய்வதற்காக ஜப்பா னியத் தொழிலாளர்கள் ஒருவகை உற்சாக பானத்தைக் குடிக்கிறார்கள். ரயில் நிலை யப் பெட்டிக் கடைகளிலிருந்து இந்த உற் சாக பானத்தை ஆண்களும் பெண்களுமாக வாங்கிக் குடித்துவிட்டு அடுத்தடுத்த வேலைக்கு ஓடுவது ஜப்பானில் அன்றாடக் காட்சி.

இந்த உற்சாக பானத்தில் அப்படி என்ன சிறப்பு? இந்த பானத்தில் "நிக்கோ டின்" எனும் நஞ்சு கலக்கப்பட்டிருக்கிறது. புகையிலை, சிகரெட்டுகளில் உள்ள நஞ்சு தான் இது. மிக நீண்ட நேரம் சோர்வோ, களைப்போ இன்றி வேலை செய்வதற்காக இந்தப் பானத்தை ஜப்பானியர்கள் தொடர்ந்து குடித்து இளமையிலேயே நரம் புத் தளர்ச்சி, இரத்தக் கொதிப்பு முதலான நோய்கள் தாக்கி மாண்டு போகிறார்கள்.

கடுமையான வேலைப்பளு, ஓயாத வேலை, நீண்ட நேரம் வேலை செய்வது

**உடைந்து கைவிடப்பட்ட காரில் இரவுப் பொழுதைக் கழிக்கும் 'புராகுமின்' இனத்து ஏழை; ஏறத் தாழ 5000 பேர் டோக்கியோவில் மட்டும் வீடற்றவர்களாக உள்ள னர்.**



முதலானவற்றால் ஜப்பானியத் தொழிலா ளர்களில் பத்தில் ஒருவர் 40 வயதுக்குள் இறந்துவிடுகிறார். 50 வயதுக்கும் மேற் பட்ட தொழிலாளர்களில் 5 சதவீதத்தினர் ஆலைகளில் பணியாற்றிக் கொண்டிருக் கும்போதே மரணமடைகிறார்கள் என்று 1991-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட "கரோஷி" எனப்படும் வேலை தொடர் பான சாவுகள் பற்றிய அறிக்கையே ஒப்புக் கொள்கிறது. கடந்த இரு ஆண்டுகளில் மட் டும் 2,000-க்கும் மேற்பட்டோர் "ஓவர் டைம்" வேலை செய்ததன் காரணமாக மாண்டு போயுள்ளனர்.

ஜப்பான் கோர்ட்டுகளில் இப்போது புது வகையான வழக்குகள் வந்து குவிகின் றன. தங்கள் கணவன்மார் நீண்ட நேரம் அதிக வேலை செய்ததால்தான் மாண்டு போயுள்ளார்கள்; இதற்கு சம்பந்தப்பட்ட ஆலை நிர்வாகம்தான் நட்ட ஈடு தரவேண் டுமென்று நூற்றுக்கணக்கான விதவைகள் கோர்ட்டுகளில் நியாயம் கேட்கத் தொடங் கியிருக்கிறார்கள். மிக நீண்ட வேலை நேரங்கள், மிகக் குறைந்த விடுமுறை நாட் கள் என்கிற மிகப் பிரபலமான ஜப்பானின் பாரம்பரியத்திற்குப் பின்னால் நடக்கும் கொடூரங்கள் இப்போது மெதுவாக வெளி வரத் தொடங்கிவிட்டன.

**உரிமைகளற்ற அடிமைகள்**

ஏகாதிபத்திய வல்லரசாகத் திகழும் ஜப்பானில் ஏழை ஆசிய நாடுகளிலிருந்து வந்து பிழைப்போருக்கு எவ்வித சலுகை யும் கிடையாது. அரசு மருத்துவமனைக ளில் வெளிநாட்டினரை அனுமதிப்பதே யில்லை. கட்டுமான நிறுவனம், உணவு விடுதி, சலவையகம், துப்புரவு முதலான வற்றில் வேலை செய்யும் வெளிநாட்டுத் தொழிலாளிகள் ஆண்டுக்கணக்கில் தினக் கூலிகளாகவே வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு இன்சூரன்சு, பிராவிடண்ட் முதலானவையும் கிடையாது. ஏறத்தாழ 3 லட்சத்துக்கும் மேற்பட்ட வெளிநாட்டுத் தொழிலாளர்களில் மூன்றில் ஒரு பங்கினர் பெண்கள். வெளிநாட்டுத்தொழிலாளர்க ளில் பாதிக்கும் மேற்பட்டோர் சட்டவிரோ

படிப்பகம்

www.padippakam.com



ஆலை மூடப்பட்டதால் தினக்கூலி வேலைக்காக காத்து நிற்கும் வேலையிழந்த டோக்கியோ தொழிலாளர்கள்

தமாக (பாஸ்போர்ட், விசா இல்லாமல்) குடியேறியவர்கள். ஜப்பானிலுள்ள சிறுவீத உற்பத்தி நிலையங்களில் இவர்கள் எவ்வித உரிமையுமின்றி அற்பக்கூலிக்கு கொத்தடிமைகளாக உழல்கின்றனர். பெண்கள் மதுபானக் கடைகளில் பணிப் பெண்களாக, பெரிய பங்களாக்களில் வேலை செய்பவர்களாக உள்ளனர். ஜப்பானியர்களால் இழிவாகக் கருதப்படும் வேலைகளே வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கு ஒதுக்கப்படுகிறது.

இதைவிடக் கொடுமை என்னவென்றால், ஏழை ஆசிய நாடுகளிலிருந்து ஆயிரக்கணக்கான பெண்கள் விபச்சாரத்திற்காகவே பிடித்து வரப்பட்டு கொத்தடிமைகளாக்கப்பட்டுள்ளார்கள். மசாஜ் பார்லர், நீராவிக் குளியல், மதுபான விடுதிகள் மற்றும் விபச்சார விடுதிகளில் ஆசிய நாட்டு ஏழைப் பெண்களே அதிகமாக உள்ளனர். பெருமுதலாளிகள் அரசு ஒப்பந்தங்களைப் பெறுவதற்காக அரசு அதிகாரிகளுக்கு விபச்சார விருந்து படைக்கவும், கடினமான வேலை காரணமாக மேட்டுக்குடி தொழிலாளர்கள் புத்துணர்ச்சி பெறுவதற்கான ஏற்பாடாகவும் ஜப்பானில் இன்று விபச்சாரம், முதலாளித்துவ தொழில் விதிகளில் ஒன்றாகவே மாறிவிட்டது. தனது பால்வெறி நோக்கங்களுக்காக ஜப்பானிய ஏகாதிபத்தியம் ஏழை நாடுகளிலிருந்து பெண்களைக் கொண்டு வந்து விபச்சாரத்தில் ஈடுபடுத்துவதை கடந்த ஜூன் மாதத்தில் நடந்த சர்வதேச மனித உரிமை மாநாடு வன்மையாகக் கண்டித்துள்ளது.

**நசுக்கப்படும் சிறுபான்மையினர்**

ஒருங்கிணைந்த சமச்சீரான சமுதாயத்தைக் கொண்டுள்ளதாகக் கூறப்படும் ஜப்பானில், சிறுபான்மை தேசிய இன-பழங்குடியின மக்கள் இன்றும்கூட கீழ்த்தர மாகவே நடத்தப்படுகிறார்கள். முந்தைய காலத்தில் ஆடு-மாடுகள் வெட்டுபவர்களாக, செருப்பு தயாரிப்பவர்களாக இருந்த ''புராகுமின்'' எனும் பழங்குடி இனத்தவர்கள் இப்போதும் பாரபட்சமாகவே நடத்தப்படுகிறார்கள். இதேபோல, ''அய்னூ'' சிறுபான்மையினர், ''ஒக்கிவான்'' பழங்குடியினர், சீனர்கள் அல்லது கொரியர்களைத் தமது மூதாதையர்களாகக் கொண்டவர்கள் - என இச்சிறுபான்மை மக்கள் இரண்டாம் தர குடிமக்களாகவே கருதப்படுகின்றனர்.

ஏறத்தாழ 300 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே ஷோகன் பெருந்தேசிய இனத்தவர்கள், காட்டுமிராண்டித்தனமான சாதிய ஒடுக்குமுறை கொண்ட சமுதாயத்தைக் கட்டியெழுப்பினார்கள். வடக்கே ஹொக்கைடோ தீவில் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் அது தென்பகுதியிலுள்ள தீவுகளிலும் பரவியது. இப்பகுதியிலுள்ள சிறுபான்மை இனத்தவர்கள் மீது ஜப்பானிய மொழியும் பண்பாடும் கட்டாயமாகத் திணிக்கப்பட்டு பாரபட்சமாக நடத்தப்பட்டார்கள். ஏறத்தாழ 120 ஆண்டுகளுக்கு முன்னர், சிறுபான்மை இனத்தவருக்கு அரசியல் உரிமைகள் வழங்கப்பட்ட போதிலும், சமுதாய வாழ்வில் அவர்கள் இன்றும்கூட இழிவானவர்களாகவே கருதப்படுகிறார்கள்.

இரண்டாந்தர குடிமக்களாக நடத்தப்படும் ''புராகுமின்'' பழங்குடி மக்கள் உரிமைகோரி நடத்தும் ஆர்ப்பாட்டம்



இத்தகைய மேல்சாதி - பெருந்தேசிய இனவெறிக் கண்ணோட்டம் இன்று புதிய வகை போக்காக வெளிப்படுகிறது. வசதிபடைத்த ஜப்பானியர்கள் தமது மகனுக்கோ, மகளுக்கோ திருமணம் செய்யும் முன்னர் மணமகள் - மணமகன் வீட்டாரின் பூர்வீகத்தைப் பற்றி அறிந்து கொள்வதில் குறியாய் இருக்கிறார்கள். தனியார் துப்பறியும் நிறுவனங்கள் மூலமாக ரகசியமாகத் தகவல்களைப் பெற்று திருப்தி அடைந்த பின்னரே திருமணங்கள் நிச்சயிக்கப்படுகின்றன. ஜப்பானின் இளவரசர் நாருஹிபோவின் திருமணம்கூட, இந்த முறையில்தான் நடந்தது. அவர் மசாகோ ஒவடா என்ற இளம் பெண்ணைக் காதலித்த விவகாரம் நாடே அறிந்திருந்த போதிலும், புதிய இளவரசியின் பூர்வீகம் பற்றி ஆராய்ந்து திருப்தி ஏற்பட்ட பின்னரே அரச குடும்பம் திருமணத்துக்கு ஒப்புதல் அளித்தது.

இத்தகைய பூர்வீகம் பற்றிய ஆராய்ச்சியின் மூலம் மணமகனோ, மணமகளோ சிறுபான்மை இனத்தவராக அல்லது கலப்பினத்தவராக இருப்பது தெரியவந்தால் அத்திருமணங்கள் தடைபடுகின்றன. இப்படி ஆயிரக்கணக்கான திருமணங்கள் முறிந்து போய் இளங்காதலர்கள் தற்கொலை செய்து கொள்வதும் அதிகரித்து வருகிறது. சிறுபான்மையினரின் பூர்வீகம் ஆராயப்பட்டு திட்டமிட்டே அவர்களுக்கு அரசு உயர்பதவிகள் மறுக்கப்படுகிறது.

1910-ஆம் ஆண்டில் ஜப்பான், கொரியாவை ஆக்கிரமித்துக் கொண்டபோது 2 லட்சம் கொரியர்கள் கட்டாயமாக இழுத்து வரப்பட்டு மரம் அறுத்தல், சுரங்கப் பணிகளில் கொத்தடிமைகளாக்கப்பட்டனர். தப்பியோட முயற்சிப்பவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். அடிமைகளாக உழன்ற கொரியர்கள் உழைத்து பல்கிப் பெருகி இன்று 7 லட்சம் பேராக உள்ளனர். 80 ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்றுவரை ஜப்பானிலுள்ள கொரியர்களுக்கு ஓட்டுரிமை கிடையாது. வெளிநாடுகளுக்குச் செல்ல பாஸ்போர்ட் பெறவும் முடியாது.

ஐ.நா. மன்றம் இவ்வாண்டை உலகின் சிறுபான்மை இனத்தவர் ஆண்டாக அறிவித்துள்ளதை ஒட்டி, ஜப்பானிலுள்ள கொரியர்கள் தமது உரிமைக்கான போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இதேபோல அய்னூ, புராகுமின் சிறுபான்மை இனத்தவர்கள் தமது மொழியும் பண்பாடும் நசுக்கப்படுவதை எதிர்த்தும், அரசு பதவிகளில் இட ஒதுக்கீடு கோரியும் உரிமைக்கான போராட்டங்களை நடத்தி வருகின்றனர். ஆயினும் 1937-லிருந்து இன்றுவரை அய்னு மக்களின் உரிமைக்கான மசோதா நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டு வருகிறது.

படிப்பகம்

''எனது பாட்டனார் காலத்தில், கடைக்காரர்கள் நாங்கள் காசு கொடுக்கும்போது அவற்றின் மீது தண்ணீர் தெளித்த பிறகே டுத்துக் கொள்வார்கள். காலம் மாறிய போதிலும் இன்றும்கூட நாங்கள் கீழ்மக்களாகவே நடத்தப்படுகிறோம்'' என்கிறார் 5 வயதான புராகுமின் இனத்தைச் சேர்ந்த தியவர். ''எனது பேரன் காலத்தில் ய்னு மொழி அழிந்துவிடும் என்று அஞ்சுறேன்'' என்கிறார் 60 வயதான அய்னு னத்தின் மூதியவர். வீடற்ற மக்களில் 0%-க்கும் மேற்பட்டவர்கள் சிறுபான்மை னத்தவர்களாகவே உள்ளனர் என்று வலையிழந்தவர்கள் பற்றிய அறிக்கையே ப்புக் கொள்கிறது.

சிறுபான்மையினர் மட்டுமல்ல; முன் னறிய ஜப்பானிய முதலாளித்துவ சமுதா த்தில் பெண்களும் இரண்டாந்தர குடிமக் ளாகவே கருதப்படுகின்றனர். ஆண்க க்கு இணையாக கடுமையாக உழைத்த பாதிலும் பெண்களுக்கு சம ஊதியமோ, தவி உயர்வோ கிடைப்பதில்லை. பெண் ள் வீட்டுவேலை செய்வதற்கே தகுதியான ர்கள் என்ற ஆணாதிக்கக் கருத்து இன்ன ம் பலமாகவே உள்ளது. ''ஆண்களைப் பாலவே ஓவர்டைம் வேலை செய்தாலும் னக்கு அற்பத் தொகையே ஊதியமாக டைக்கிறது. நான் சம்பாதிக்க ஆரம்பித்த றகும்கூட எங்கள் குடும்பத்தின் பொரு தாரத்தில் முன்னேற்றமில்லை. இன்ன ம் புறாக் கூண்டு போன்ற சிறிய வாடகை ட்டில்தான் வசிக்கிறோம்'' என்று வேத னயுடன் கூறுகிறார் நாட்சுயி எனும் பண் தொழிலாளி.

### ஏழைகள் நிறைந்த பணக்கார நாடு

வாழ்க்கைத் தேவைக்கும் வருமானத் க்கும் பெரிய இடைவெளி நிலவுவதால் ப்பானிய நுகர்பொருட்களை அந்நாட்டு களாகலேயே வாங்கி அனுபவிக்க முடி தில்லை. உதாரணமாக, சலவை இயந்தி ஜப்பானில் பெருமளவு உற்பத்தியான ாதிலும், சொந்தமாக அந்த இயந்தி தை வைத்திருப்பவர்கள் மிகக் குறைவு. னெனில் சற்று பெரிய வீடாக இருந்தால் ன் சலவை இயந்திரத்தைப் பயன்படுத்த டியும். சிறிய அறைகளைக் கொண்ட டகை வீடுகளில் அவற்றை வைத்திருக்க டியாத நிலையில் பெரும்பான்மையான கள் தமது துணிகளை சுயசேவை ாதுச் சலவையகங்களில் துவைத்துக் ாள்கின்றனர். ''பெருநகரங்களைக் கட் படுத்தும் ரியல் எஸ்டேட் மா.ஃபியாக் வீட்டு மனை விலைகளை கிடுகிடு ன உயர்த்திய பிறகு, வீட்டு வாட க்கே வருமானத்தின் மூன்றில் ஒரு கு போய்விடுகிறது'' என்கிறார் ஒரு ாக்கியோ நகரத் தொழிலாளி. ''ஜப் ன் பணக்கார நாடுதான். ஆனால் ஏழை நிறைந்த பணக்கார நாடு'' என்கிறார் ாஷிடோ எனும் தொலைக்காட்சி உற்பத் ாளர்.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் குச் சந்தை மதிப்புக் குறியீட்டு எண் 63%-க்கு மேல் சரிந்த பிறகு, விலைவாசிகள் கடுமையாக உயர்ந்துவிட்டன. உற்பத்தித் தேக்கம், வேலையின்மை, விலைவாசி ஏற்றம் என பொருளாதாரப் புற்று நோய் தாக்கி ஜப்பான் இன்று நெருக்கடியில் சிக்கிக் கொண்டுள்ளது. அதன் வங்கிக் கடனோ 30,000 கோடி டாலரைத் தாண்டி விட்டது. இருப்பினும் தனது மேலாதிக்க நோக்கங்களுக்காக, கம்போடியாவுக்கு தனது 'அமைதி'ப் படையை அனுப்பி 10,000 கோடி டாலருக்கும் மேல் செலவிடுகிறது.

இதன் விளைவாக, கல்வி, மருத்துவம், சுகாதாரம் முதலானவற்றுக்கான அரசு மானியங்கள் படிப்படியாக குறைக்கப்பட்டு விட்டன. அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் நம்பிக்கையை மக்கள் அறவே இழந்துவிட்டனர். தனியார் மருத்துவமனைகளும், மருத்துவ இன்சூரன்சுகளும் புற்றீசலாகப் பெருகி, மக்கள் அவற்றில் முதலீடு செய்து தமது மருத்துவ செலவு



அமெரிக்காவிடமிருந்து உணவுப் பொருட்கள் இறக்குமதி செய்வதை எதிர்த்து பாதிக்கப்பட்ட விவசாயிகள் நடத்தும் ஆர்ப்பாட்டம்

களை ஈடுகட்ட முயலுகின்றனர். கல்விக்கான மானியங்கள் தொடர்ந்து குறைக்கப்படுவதால், 60% குழந்தைகள் உயர்கல்வியைப் பெற முடிவதில்லை. அதேசமயம் தனியார் மேட்டுக்குடி கல்வி நிலையங்கள் ஏராளமாகப் பெருகியுள்ளன. ''இந்த நிலைமை தொடர்ந்து நீடித்தால், அமெரிக்காவைப் போல ஜப்பானும் வெளிநாடுகளிலிருந்து தொழில் நுட்பவாதிகளை இறக்குமதி செய்து கொள்ள வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டு விடும்'' என்று அங்கலாய்க்கிறார் ஒரு கல்வியாளர்.

பொருளாதார நெருக்கடிகள் ஒருபுறமிருக்க ஜப்பானில் அரசியல் நெருக்கடிகள் மேலும் தீவிரமாகிவிட்டது. லஞ்ச ஊழல் புதைசேற்றில் மூழ்கி 38 ஆண்டுகளாக ஜப்பானை ஆண்ட லிபரல் ஜனநாயகக் கட்சி அண்மையில் நடந்த தேர்தலில் படுதோல்வி அடைந்துள்ளது. இருப்பினும் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காமல், அரசியல் நெருக்கடி தீவிரமாகி இப்போது எதிர்க்கட்சிகளின் சிறுபான்மைக் கூட்டணி ஆட்சி நிறுவப்பட்டுள்ளது. இக்கூட்டணி ஆட்சி எவ்வளவு காலம் தாக்குப் பிடிக்கும் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. அண்மையில் ஜப்பானியப் பத்திரிகைகள் நடத்திய ஆய்வின்படி 40% மக்கள் இத்தகைய கேடுகெட்ட நாடாளுமன்ற ஆட்சிமுறையின் மீது தமது அதிருப்தியைத் தெரிவித்துள்ளனர்.

அதிகரித்துவரும் அரசியல் நெருக்கடிகளின் எதிர்விளைவாக ஜப்பானில் இன்று நவீன நாஜிக் குழுக்கள் வேர்விடத் தொடங்கியுள்ளன. இனவெறி, ஆக்கிரமிப்பு நோக்கங்களைக் கொண்ட டோஜேயிசம் இன்று மீண்டும் செல்வாக்குப் பெற்று வருகிறது. தமது ஆட்சியதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ள ஆட்சியாளர்கள் இத்தகைய பாசிசக்குழுக்களை ஊட்டி வளர்த்து வருகின்றனர். இரண்டாம் உலகப் போரில் கொல்லப்பட்ட பாசிஸ்டுகளின் கல்லறைகளுக்குச் சென்று இப்போது ஆட்சியாளர்கள் மரியாதை செலுத்துகின்றனர். உள்நாட்டில் பாசிச அடக்குமுறை; அன்னிய நாடுகள் மீது ஆக்கிரமிப்பு என்கிற திசையில் ஜப்பான் வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது.

ஜப்பானில் அரசியலும் பொருளாதாரமும் சமுதாயமும் நீண்ட காலமாகவே நிலைத்த தன்மை கொண்டது என்று கருதப்பட்டு வந்தது; ஆனால் அது இப்போது கேள்விக்குறியாகிவிட்டது என்று முதலாளித்துவ மூதறிஞர்களே ஒப்புக்கொள்கின்றனர். ஜப்பானைப் பற்றி முதலாளித்துவவாதிகள் உருவாக்கியுள்ள மாயத்திரைகளை பெருகிவரும் நெருக்கடிகள் விரைவில் கிழித்தெறியும். ஜப்பானிய பாட்டாளி மக்களும் தமது சொந்த அனுபவத்தின் மூலம் முதலாளித்துவ ஜனநாயகத்தின் மோசடிகளை உணர்வார்கள், ஏகாதிபத்தியவாதிகள் தாங்களே வெட்டி வைத்துள்ள சவக்குழிக்குள் விரைவில் அவர்களை வீழ்த்துவார்கள். ●

www.padippakam.com

www.padippakam.com

# இஸ்ரேல் - பி.எல்.ஓ. ஒப்பந்தம்:
# கனவு நனவாகவில்லை

**இஸ்ரேலியக் காட்டுமிராண்டிகளின் துப்பாக்கி முனையில் வாழ்ந்துவரும் பாலஸ்தீனிய மக்களுக்கு கடைசியில், தேசிய சுயநிர்ணய உரிமைக்கூட கிட்டவில்லை.**

பாலஸ்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அராபத்துக்கும் இஸ்ரேலியப் பிரதமர் இசாக் ராபினுக்கும் இடையே கடந்த செப். 13-ம் நாளன்று அமைதிக்கான ஓர் உடன்பாடு ஏற்பட்டுள்ளது. 45 வருடங்களாக ஓயாத போரிலும் ஆக்கிரமிப்பிலும் அவலத்திலும் சிக்கித் தவிக்கும் பாலஸ்தீனிய மக்களுக்கு வெறுமனே மாநில சுயாட்சி போன்ற அற்ப உரிமை அளிப்பதாகவே இந்த ஒப்பந்தம் அமைந்துள்ளது.

இதன்படி, இதுநாள் வரை பயங்கரவாத அமைப்பாக சித்தரிக்கப்பட்ட பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தை (பி.எல்.ஓ.) பாலஸ்தீனிய மக்களின் பிரதிநிதியாக இஸ்ரேல் அங்கீகரித்துள்ளது. பி.எல்.ஓ.வும் இஸ்ரேலிய நாட்டை அங்கீகரித்து ஏற்றுக் கொண்டுள்ளது. இந்த உடன்பாட்டின்படி, பாலஸ்தீனியர்கள் பெரும்பான்மையாக வாழும் காசா முனை பிராந்தியத்திலும், மேலைக்கரை பிராந்தியத்திலுள்ள ஜெரிகோ நகரிலும் பாலஸ்தீனியர்களுக்கு சுயாட்சி உரிமை அளிக்க இஸ்ரேல் ஒப்புக் கொண்டுள்ளது. மீண்டும் அமைதிக்கான பேச்சுவார்த்தைகள் நடத்தி, குறிப்பிட்ட கால இலக்கிற்குள் இப்பகுதிகளிலிருந்து படைகளை விலக்கிக் கொள்வதாகவும் இஸ்ரேல் கூறியுள்ளது.

இந்த ஒப்பந்தம் வரலாற்றுச் சிறப்புமிக்க மகத்தான சாதனை என்றும் மத்திய கிழக்கில் அமைதியை நோக்கிய தொடக்கம் என்றும் முதலாளித்துவவாதிகள் ஆரவாரத்துடன் புகழ்ந்து தள்ளுகின்றனர். ஆனால் அவ்வாறு புகழ்ந்து பெருமிதம் கொள்ளுமளவுக்கு இந்த ஒப்பந்தத்தில் எதுவுமே இல்லை.

தாம் பிறந்து வளர்ந்த மண்ணுக்காக - பாலஸ்தீனம் எனும் நாட்டுக்காக இத்தனை காலமாகப் போராடி வந்த மக்களுக்கு வெறுமனே நகராட்சி உரிமை மட்டுமே கிடைக்கப் போகிறது. அதுவும்கூட மேற்காசியாவிலுள்ள பாலஸ்தீனிய மக்களில் கால்வாசிப் பேருக்குத்தான் இந்த உரிமை கிடைக்கும். இன்னமும் இந்த உரிமை வாக்குறுதி அளவில்தான் உள்ளது. ஐந்தாறு ஆண்டுகளில் படிப்படியாகத் தரப்படும். அதற்குமுன் பி.எல்.ஓ. நிறைவேற்ற வேண்டிய நிபந்தனைகள் ஏராளம். அவற்றில் பல எந்த நியாயத்திலும் சேராதவை. ஒப்பந்தத்தில் உள்ள குறைபாடுகளை தோற்றத்திலேயே யாவரும் உணரமுடியும்.

துரோகம்: அமெரிக்க அதிபர் கிளிண்டன் முன்னிலையில் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு கைகுலுக்கும் இஸ்ரேலியப் பிரதமர் ராபின் - பி.எல்.ஓ. தலைவர் அராபத்.



தமது தாய் நாட்டுக்காக பாலஸ்தீனியர்கள் நடத்திவரும் போராட்டத்தின் நியாயத்தை எவரும் மறுக்க முடியாது. பாலஸ்தீனிய மக்களின் நாட்டுப் பற்றும் தீரமும் உலக வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படக் கூடியவை. இந்த நியாயமும் எதிர்பார்த்த நீதியும் வாஷிங்டனில் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தத்தில் பாலஸ்தீனியர்களுக்கு கிடைக்கவில்லை. ஜெருசலத்தைத் தலைநகராகக் கொண்ட பாலஸ்தீன நாடு உருவாகும் என்ற நீண்ட காலக் கனவு நனவாகவில்லை.

ஊசலாட்டமற்ற போர்க்குணமிக்க தலைவர் என்று போற்றப்படும் பழுத்த அனுபவமிக்க பி.எல்.ஓ. வின் தலைவர் யாசிர் அராபத் இந்த ஒப்பந்தத்தில் ஏன் கையெழுத்திட்டார். இதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் கூறப்படுகிறது.

முதலாவதாக, உலகின் மிகப் பெரிய மேலாதிக்க வல்லரசுகளில் ஒன்றாகத் திகழ்ந்த சோவியத் ஒன்றியம் சிதைந்து பலவீனப்பட்டதைத் தொடர்ந்து உலக நிலைமைகளில் பெருத்த மாற்றம் ஏற்பட்டுள்ளது. எண்ணெய் வளமிக்க மேற்காசியாவில் தனது மேலாதிக்கத்தை நிலைநாட்ட அமெரிக்க வல்லரசு தனது அடியாட்படையான இஸ்ரேலைக் கொண்டு ஆட்டம் போட்டு வந்தது. மேலாதிக்கப் போட்டியில் அமெரிக்காவை வீழ்த்த சோவியத் ஒன்றியம் பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தை ஒரு துருப்புச் சீட்டாகப் பயன்படுத்திக் கொண்டு ஆதரித்து வந்தது. இன்று பாலஸ்தீனியர்களுக்கு ஆதரவாக நிற்க சோவியத் ஒன்றிய வல்லரசு இல்லை. அதேசமயம் அமெரிக்க வல்லரசின் மேலாதிக்கம் எவ்விதத் தடையுமின்றி நிலை நாட்டப்பட்டு வருகிறது. இஸ்ரேலை இனவெறிக் காட்டுமிராண்டி அரசாக ஒதுக்கி வைத்து புறக்கணித்த நாடுகள் கூட இன்று அதனுடன் நட்புறவு கொள்கின்றன. இத்தகைய மாறிய உலக நிலைமையில், பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்திற்கான செல்வாக்கும் ஆதரவும் முன்னைவிட குறைவாகவே உள்ளது. இஸ்ரேலுடன் பேரம் நடத்துமளவுக்கு அதற்கு வலுவான பின்னணியும் இல்லை.

மேலும் ஈராக் - குவைத் யுத்தத்தின் போது, குவைத்தின் விடுதலைப் போராட்டம் என்ற பெயரில் அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்களின் படையெடுப்பை ஜோர்டான், லிபியா தவிர அரபு நாடுகள் ஆதரித்தன. ஏகாதிபத்தியங்களின் படையெடுப்பை எதிர்த்த பி.எல்.ஓ., சதாம் உசைனை ஆதரித்தது. இதுநாள்வரை பி.எல்.ஓ.வை ஆதரித்துவந்த அரபுநாடுகள் இதனால் அதிருப்தியடைந்தன. அரபு நாடுகள் அளித்துவந்த நிதியுதவியும் குறைந்து போனதால் பி.எல்.ஓ. மேலும் பலவீனப்பட்டுப் போயுள்ளது.

இரண்டாவதாக, '87-ல் வெடித்து நான்காண்டுகள் நீடித்த பாலஸ்தீனிய மக்களின் போராட்டங்கள் தற்காலிகமாக பின்னடைந்தபோது, பி.எல்.ஓ. வுக்குப் போட்டியாக புதுப்புது அமைப்புகள் தலைதூக்கத் தொடங்கின. மதவாதத்தை ஏற்காத


படிப்பகம்

www.padippakam.com

பி.எல்.ஓ.க்கு எதிராக இஸ்லாமிய தீவிரவாதக் குழுக்கள் தலையெடுத்தன. மறுபுறம், ஆயுதப் போராட்டம் வேண்டாம்; அரசுதந்திர நடவடிக்கைகள் மூலமாகவே உரிமைகளைப் பெறமுடியும் என்று வாதிட்ட அல்பெட்டா குழுவுக்கு பி.எல்.ஓ.வினுள் ஆதரவு பெருகத் தொடங்கியது. இதுதவிர அமெரிக்காவும் இஸ்ரேலும் பி.எல்.ஓ.வுக்கு மாற்றாக புதியதொரு அடிவருடி அமைப்பை உருவாக்க ரகசிய சதி முயற்சிகளில் ஈடுபட்டு வந்தன. இந்தச் சூழ்நிலையில் சுயாட்சி உரிமை கிடைத்ததே பெரிய விஷயம்; அதைவிட, பி.எல்.ஓ.வை பாலஸ்தீனிய மக்களின் பிரதிநிதியாக அங்கீகரித்திருப்பதே முதல் வெற்றி என்று இத்துரோக ஒப்பந்தத்திற்கு முதலாளித்துவவாதிகளும் சமரசவாதிகளும் நியாயம் கற்பிக்கின்றனர்.

இந்த ஒப்பந்தத்தால் இஸ்ரேலுக்கு கணக்கற்ற ஆதாயங்கள். ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனிய பிராந்தியங்களில் தனது அரசியல் ராணுவ மேலாதிக்கத்துக்கு இந்த ஒப்பந்தம் மூலம் அங்கீகாரம் பெற்றுள்ளது. அரபு நாடுகள் இஸ்ரேலுக்கு எதிராக ஓரணியில் திரளும் வாய்ப்பையும் அது தடுத்துவிட்டது. பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக நின்ற அரபு நாடுகள் இப்போது இஸ்ரேலுடன் நட்புறவு, பொருளாதார ஒத்துழைப்புக்கான ஒப்பந்தங்களின் கையெழுத்திட முனைப்பாக நிற்கின்றன.

பாலஸ்தீனிய மக்களுக்கு அரபுநாடுகளிடம் ஆதரவற்ற நிலையை உருவாக்கி தனிமைப்படுத்துவது, சுயாட்சி அரசின் ஆட்சியாளர்கள் என்ற முறையில் பி.எல்.ஓ.வைக் கொண்டே பாலஸ்தீனிய மக்களின் போராட்டங்களைக் கட்டுப்படுத்துவது, தங்களை சமாதான - ஜனநாயகக் காவலர்களாகக் காட்டிக் கொண்டு, நாளை பாலஸ்தீனிய மக்கள் போராடினால் ஒப்பந்தத்தை மீறிவிட்டதாகப் பழிசுமத்தி சுயாட்சி உரிமையையும் பறித்துக் கொண்டு அடக்குவது என்கிற நரித்தனத்தோடுதான் ஏகாதிபத்தியவாதிகளும் இஸ்ரேலிய இனவெறியர்களும் இந்த ஒப்பந்தத்தை உருவாக்கியுள்ளனர். இதனை எவ்வாறு எதிர்கொள்வது என்பதை பாலஸ்தீனிய மக்களின் சமரசமற்ற உறுதிப்பாடே இந்த ஒப்பந்தத்தின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும்.




**ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனிய பிராந்தியங்களில் தனது அரசியல் ராணுவ மேலாதிக்கத்துக்கு இந்த ஒப்பந்தம் மூலம் இஸ்ரேல் அங்கீகாரம் பெற்றுள்ளது.**

இஸ்ரேலியக் காட்டுமிராண்டிகளின் துப்பாக்கி முனையில் வாழ்ந்து வரும் பாலஸ்தீனிய மக்களுக்கு கடைசியில், தேசிய சுயநிர்ணய உரிமைகூட கிட்டவில்லை. சூழ்நிலையைக் காரணம் காட்டி, சுயாட்சி உரிமையாவது கிடைத்துள்ளதே என்று சுயதிருப்தி அடைவது கடைந்தெடுத்த துரோகத்தனமே அன்றி வேறில்லை. தமது உயிரையும் உடைமைகளையும் இழந்து தலைமுறை தலைமுறையாக அளப்பரிய தியாகத்துடன் போராடிவரும் பாலஸ்தீனிய மக்கள் இத்துரோகத்தை ஒருபோதும் அங்கீகரிக்கவே மாட்டார்கள். பி.எல்.ஓ. சார்பாக இச்சமரச ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட யாசர் அராபத்தையும் மன்னிக்கவே மாட்டார்கள்.

பி.எல்.ஓ. என்பது பாலஸ்தீனிய விடுதலைக்காகப் போராடிவரும் பல்வேறுபட்ட போராளிக் குழுக்களின் கூட்டமைப்பு. அதிலே அராபத் மற்றும் சில குழுக்களின் துரோகத்தால் ஒட்டுமொத்த விடுதலை இயக்கமே திசைதவறிப் போய் விட்டதாகக் கருத முடியாது. பல்வேறு போராளிக் குழுக்கள் இத்துரோக ஒப்பந்தத்தை எதிர்த்து வருவதே இதை நிரூபிக்கிறது. தேச விடுதலைப் போராட்டத்தில் முதலாளித்துவ, குட்டி மதலாளித்துவ தலைமையின் ஊசலாட்டம் காரணமாக இத்தகைய துரோகங்களும் தவறான போக்குகளும் தலைதூக்கவே செய்யும். ஆயினும் நீண்ட போராட்ட அனுபவமிக்க பாலஸ்தீனிய மக்கள் நிச்சயம் இவற்றை முறியடிப்பார்கள். இத்தனை ஆண்டுகளாக மிகமோசமான அடக்கு முறைக்கும் இனவெறிப் படுகொலைகளுக்கும் ஆளாகி நிற்கும் பாலஸ்தீனிய மக்கள் இத்தகைய அற்ப உரிமையில் தமது தாய்நாடு தாகத்தை ஒருபோதும் தணித்துக் கொள்ளவே முடியாது. அம்மக்களின் வீரஞ்செறிந்த போராட்டமும் தியாகமும் ஒருபோதும் மடிந்துவிடாது. பாலஸ்தீனிய மக்களுக்கு சுதந்திரமான தாய்நாடு கிட்டும்வரை அவர்களின் போராட்டம் தொடரவே செய்யும்.

★ பாலன்


# மதுரை தெற்குவாசல் ரௌடியின் அட்டகாசம்

தீயோடு மோதி அழிவது விட்டில் பூச்சியின் மடமை. புரட்சியாளர்களோடு மோதி அழிவது ரௌடிகளின் மடமை. மதுரை தெற்குவாசல் பகுதியில் காய்கறி சந்தையருகே கந்துவட்டி பிழைப்பு நடத்திவரும் முத்துராமலிங்கம் என்பவரின் அராஜகம் - ரௌடித்தனம் கொடிகட்டிப் பறக்கிறது. பகுதியிலுள்ள கடைகளில் யாரிடமும் பொருட்கள் வாங்கினால் காசு தருவதில்லை. தனது ரௌடித்தனத்தைக் காட்டி பிரட்டியே பணமில்லாமல் பொருள் பிடுங்குவான். அதிகம் பாதிக்கப்படும், — பகுதி சிறு வியாபாரிகளுக்கு இவனைக் கண்டாலே பிடிக்காது. ஆனால் பயத்தின் காரணமாக யாரும் இவனைத் தட்டிக்கேட்க முன்வரவில்லை. ஆனால் இப்பகுதியில் தேநீர் கடை நடத்திவரும் புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியைச் சேர்ந்த ராஜாவும் அவரது சகோதரர்களும் முத்துராமலிங்கத்தை தட்டிக்கேட்டனர். ராஜாவின் தேநீர்கடையில் முத்துராமலிங்கம், பத்துபேர் சகிதம் வந்து தேநீர் சாப்பிட்டு விட்டு காசுகொடுக்காமல் போனபோது ராஜா காசு கேட்டுள்ளார். தனது கௌரவம் (?) குறைந்துவிட்டதாக ஆத்திரப்பட்ட கும்பல், "என்ன எங்கிட்டேயே காசு கேட்கறியாடா, இனிமேல் இப்படியெல்லாம் கேட்டால் கை-காலை முறித்துவிடுவோம்" என தகராறு செய்து எச்சரித்துவிட்டு போனது. இதைத் தொடர்ந்து 20-8-93 அன்று சாலையோரம் சென்று கொண்டிருந்த ராஜாவின் மீது இளநீர் மட்டையை தூக்கியெறிந்து வம்புக்கு இழுத்தான் முத்துராமலிங்கம். மறுநாள் ராஜா பு.மா.இ.மு. வினருடன் சென்று முத்துராமலிங்கம் கும்பலிடம் நியாயம் கேட்டுபேசிக் கொண்டிருந்த போதே முத்துராமலிங்கம் தன் அருகே இருந்த நாற்காலியைத் தூக்கி அடித்தான். இதனால் பு.மா.இ.மு. வினரும் தற்காப்பில் ஈடுபடவே கைகலப்பானது. சிறிது நேரம் கழித்து வந்த போலீசு இரு தரப்பினரையும் கைதுசெய்ய மறுநாள், நீதிமன்றம் இருதரப்பினரையும் விடுவித்தது.

முத்துராமலிங்கம் கும்பல் ராஜாவை மீண்டும் தாக்க முற்பட்டதால் பு.மா.இ.மு. சார்பாக பகுதியில் 27-8-93 அன்று பரவலாக கண்டன சுவரொட்டி ஒட்டி ரௌடிக் கும்பல் அம்பலப்படுத்தப்பட்டது. மூக்குடைப்பட்ட ரௌடிக் கும்பல் ஆத்திரத்திலும் அவசரத்திலும் செயல்பட்டு இளைஞர் அணி மற்றும் சிறு வியாபாரிகள் சங்கள் என்ற போலி பெயரில் பதில் சுவரொட்டி தயாரித்து மறுநாளே ஒட்டியது. அதிலுள்ள அரைவேக்காட்டுத்தனமான முழக்கங்களும், அவதூறுகளும், பொய்களும் இக்கும்பலை மேலும் அம்பலப்படுத்திக் காட்டின. பகுதி மக்கள் ஆதரவுடன் பு.மா.இ.மு. புரட்சியாளர்கள் முத்துராமலிங்கம் கும்பலுக்கு தக்க பதிலடி கொடுக்க உள்ளனர்.

— தகவல்: பு.மா.இ.மு. மதுரை.

www.padippakam.com



# மின்சாரமும் தனியார்மயம் விவசாயிகளுக்குப் பேரிடி

**கூடுதல் தேவையுள்ள மின்சாரத்தையும் அரசே உற்பத்தி செய்ய முடியும்; இருந்தும் ஆளுங்கும்பலின் கூட்டுக் கொள்ளைக்காக தனியாருக்கு தாரைவார்க்கப்படுகிறது.**

''தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கொண்டுவந்த விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தை அ.தி.மு.க. அரசு நிறுத்தப்போகிறது'' என்று தி.மு.க.வினரும், ''இலவச மின்சாரத்தை நிறுத்தப் போவதில்லை; பொய் சொல்வதே எதிர்க் கட்சிக்காரர்களுக்கு வேலையாகிவிட்டது'' என்று ஜெயலலிதாவும் தற்போதைய தமிழக இடைத் தேர்தலில் ஓட்டுப்பொறுக்குவதற்காக மாறிமாறி கத்தினார்கள். ஜெயலலிதா மட்டுமல்ல கருணாநிதி ஆட்சியிலிருந்தாலும் இலவச மின்திட்டத்தை நடத்த முடியுமா என்பது மிகப்பெரிய கேள்வியே. மத்திய அரசின் எட்டாவது ஐந்தாண்டு திட்ட கமிசன், தமிழக அரசு வழங்கும் இலவச மின்சாரத்தை நிறுத்தக்கோரியும் மாநில அரசுகள் வழங்கும் விவசாயத் துறைக்கான மின்சார மானியத்தை குறைத்து கட்டணத்தை கூட்டச் சொல்லியும் நிர்பந்தித்துள்ளது.

''மாநில மின் துறைகளின் மொத்த கடன் 4000 கோடி ரூபாய்க்கு மேல் உள்ளது; மொத்த மின் உற்பத்தியில் மிகப்பெரிய அளவு (27 சதவிகிதம்) விவசாயத் துறைக்குதான் செலவிடப்படுகிறது; மின் உற்பத்திக்கு ஒரு யூனிட்டிற்கு அரசிற்கு ரூ.1.10 செலவாகிறது; மாநில அரசுகளின் மானியங்களால் 40%, 50% வருமானமே கிடைக்கிறது; எனவே மாநில அரசுகள் விலைப் பட்டியலை மாற்றியமைப்பது தவிர வேறுவழியே இல்லை. விவசாயத்திற்கு யூனிட்டிற்கு 50 பைசா விலை கூட்டினாலே மாநில மின்துறைகளின் கடனை அடைத்துவிட முடியும்'' என்கிறது மின்துறை மத்திய அமைச்சகம். ஆக மானிய வெட்டும், விலையேற்றமும் உறுதியாகி விட்டது. தற்போது பல மாநிலங்கள் நடைமுறைப்படுத்துவதற்கான தயாரிப்பிலும் இறங்கிவிட்டன. இவை அமுலானால் விவசாய உற்பத்தி பாழாகி விவசாயிகளின் வாழ்க்கை மேலும் துன்பமாகிவிடும் என்பது சொல்லாமல் விளங்க கூடியதே! இத்தகைய அபாயம் மட்டுமா என்ன? இல்லை; இன்னொரு பெரிய குண்டையும் மக்களது தலையில் தூக்கிப் போட்டுளளது, பாசிச ராவ் கும்பல்.

மின் உற்பத்தியையும் விநியோகத்தையும் இதுவரை அரசே செய்து வந்தது. பம்பாய், கல்கத்தாவில் டாட்டா போன்ற சில தரகு முதலாளி கம்பெனிகளுக்கு மட்டும் தங்கள் தேவைக்காக மின் உற்பத்தி செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டிருந்தது. தற்போது பொது விநியோகத்திற்கான அரசு மின் உற்பத்தியையும் தனியார் கம்பெனிகளுக்கு குறிப்பாக அமெரிக்க கம்பெனிகளுக்கு தாரைவார்த்துள்ளார்கள். அந்நிய கொள்ளைக்கு நாட்டின் கட்டுப்பாடுகளை எல்லாம் தளர்த்தி மக்களின் வாழ்வை படுகுழியில் தள்ளுவதில் ராஜீவ் கும்பல் நாலு கால் பாய்ச்சலில் முன்னேறியது என்றால், ராவ் கும்பல் எட்டுக்கால் பாய்ச்சலில் முன்னேறுகிறது.

○ ○ ○

இந்தியாவின் நுழைவாயிலான பம்பாயில்தான் அன்று ('86-ல்) பம்பாய் நகர்ப்புற மின் விநியோகம் (BSES) என்கிற பெயரில் முதன்முதலில் தனியார் கம்பெனிக்கு (FIs) சொந்த தேவைக்கான 500 மெகா வாட் மின் உற்பத்தியை செய்துகொள்ள அனுமதி வழங்கப்பட்டது. இதுவன்றி காற்றாலை, சூரிய ஒளி, இயற்கை வாயுக்கள், கடல் அலைகள் முதலியவற்றிலிருந்து தயாரிக்கப்படும் சிறுவீத அளவு மின் உற்பத்தியும் தனியாருக்கு கொடுக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் சிறுவீத மின் உற்பத்தியை தனியாருக்கு தாரைவார்த்துள்ளனர். அண்மையில் 4 மெகாவாட் மின்சாரத்தை ராம்கோ சிமிண்ட்ஸ் நிறுவனத்திற்கு காற்றாலை மூலம் உற்பத்தி செய்வதற்கு தமிழக அரசு அனுமதியளித்துள்ளது.

இன்று டாடாவின் மூன்று கம்பெனிகள் இதுபோன்று மின்சாரம் தயாரிப்பதோடு தங்களது சொந்த தேவைக்குப் போக எஞ்சியவற்றை பிற தனியார் கம்பெனிகளுக்கு விற்கவும் அனுமதி பெற்றுள்ளன. அதே பம்பாயில்தான் (15-9-93) இன்று பொதுவிநியோகத்திற்கான மஹாராஷ்டிர அரசின் தபோல் மின்உற்பத்தி திட்டத்தை ''என்ரோன்'' என்ற அமெரிக்க கம்பெனிக்கு இந்தியாவிலேயே முதன்முதலாக தாரைவார்த்து விழா கொண்டாடியுள்ளார், காங். முதல்வர் சரத்பவார். கொங்கன் கடற்கரையோரம் தபோல் எனுமிடத்தில் ஆண்டுதோறும் 2000 மெகாவாட் மின்சாரத்தை வாயுவிலிருந்து எடுத்து தயாரிப்பதற்காக ''என்ரோன்'' (Enron Power Corporation) நிறுவனத்துடன் 9,053 கோடி ரூபாய்க்கான திட்ட ஒப்பந்தத்தில் மஹாராஷ்டிரா முதல்வர் கையொப்பமிட்டுள்ளார். இத்தொகையில் 70 சதவிகித மூலதனத்தைப் போடும் ''என்ரோன்'', ஏராளமான அரசு சலுகைகளையும் பெற்றுள்ளது.

இத்திட்ட ஒப்பந்தத்தின்படி ''என்ரோன்'' கம்பெனி, முதல்கட்டமாக 1996-க்குள் 625 மெகாவாட் மின்சாரத்தையும் இரண்டாம் கட்டமாக 1998-க்குள் எஞ்சிய 1375 மெகாவாட் மின்சாரத்தையும் உற்பத்தி செய்யும்வண்ணம் நிர்மானப் பணிகள் தொடங்கும். உற்பத்திக்கு தேவையான திரவமாக்கப்பட்ட இயற்கை வாயு (Liquified Natural Gas) -வை ஓமன் நாட்டிடமிருந்து இறக்குமதி செய்யும். இதை கப்பலில் எடுத்துவந்து பயன்படுத்துவதற்கு வசதியாக் தபோலில் ஒரு துறைமுகமும் அமைக்கப்படும். இக்கம்பெனி உற்பத்தி செய்யும் மின்சாரத்தை யூனிட்டிற்கு ரூ.2.50 கொடுத்து மஹாராஷ்டிரா மாநில மின்துறை வாங்கி அதை தொழிற்துறைக்கு விநியோகிக்கும். இத்தொகையை அமெரிக்க டாலரிலேயே கொடுக்க வேண்டும் என ''என்ரோன்'' நிபந்தனை விதித்து ஏற்றுக்கொள்ளவும் பட்டுள்ளது. டாலருக்காக மாநில அரசு, ''ஹாவ்லா மார்க்கெட்''டிற்குத்தான் (கள்ளச்சந்தை) போகவேண்டும் என்கிறார்கள் பத்திரிகையாளர்கள். அடுத்தமாதம், மஹாராஷ்டிரா அரசின் இத்திட்டத்திற்கு மத்திய அரசு அங்கீகாரம் வழங்க உள்ளது.

மாநில அரசு, ஒரு யூனிட் மின்சாரத்தை ரூ. 2.50-க்கு வாங்கும் என்பது இன்றைய நிலைமையில் கணக்கிடப்பட்ட

படிப்பகம்


www.padippakam.com

தொகை. 1997-ல் இதன் விலை அதிகரிக்கலாம். (ஒரு யூனிட்டிற்கு ரூ.4 இருக்கும் என்று மதிப்பிடுகிறார்கள்) நிர்மானப் பணியில், ஒதுக்கப்பட்ட திட்ட தொகையைக் காட்டிலும் பல மடங்கு செலவாகுவதைக் காட்டியும் விலையேற்றப்படலாம். வருடா வருடம் ஏதாவது காரணம்கூறி விலையேற்றியும் கொள்ளையடிக்கும் அந்நிறுவனம். அப்பொழுது தனியார் கம்பெனியின் பேச்சுக்கெல்லாம் தலையாட்டி பின்செல்வது தவிர மாநில அரசுக்கு வேறு வழியில்லை மின்சாரம், நிலக்கரி, இரும்பு முதலானவை அடிப்படை உற்பத்தி பொருட்கள். இதன் விலையேறினால் தொடர்ச்சியாக சங்கிலித் தொடர்போல் உள்ள அனைத்து பொருட்களின் விலைகளும் ஏறும்.

ooo

மஹாராஷ்டிராவைத் தொடர்ந்து பல மாநில அரசுகளும் பொதுவிநியோகத்திற்கான பெருவீத அளவு மெகாவாட் மின்சாரத்தை தனியாருக்கு தாரைவார்க்க முன்வரும். தற்போதே இமாசலப் பிரதேசம் - சாமிரா எனுமிடத்தில் 300 மெகாவாட் நீர் மின் சக்தி திட்டம், 1320 கோடி ரூபாய் செலவில் தொடங்க தனியார் கம்பெனிகளுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. ஜெயப்பிரகாஷ் தாபர்ஸ், பிர்லா நிறுவனங்கள் இத்திட்டத்தின் 100 சதவிகித முதலீட்டையும் கைப்பற்ற உள்ளன. காற்றாலை மூலம் தயாரிக்கும் 600 மெகாவாட் திட்டம் ஒன்றை மத்திய அரசு அந்நிய தனியார் கம்பெனிகளுக்கு தாரைவார்ப்பதாக அண்மையில் அறிவித்துள்ளது. ஜெர்மன் கம்பெனிக்கு அனுமதியளித்து ஜெயங்கொண்டம் அருகே 1,500 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய உள்ளது, தமிழக அரசு. இந்தியா முழுக்க 55,540 கோடி ரூபாய் திட்டத்தில் 97-க்குள் 20,580 மெகாவாட் மின்சாரம் தயாரிக்க தனியாருக்கு அனுமதியளிக்கப்போவதாக அறிவித்துள்ளது, மத்திய அரசு. 29 அந்நிய மின்உற்பத்தி கம்பெனிகள் மின் உற்பத்தியில் நுழைவதற்காக மாநில அரசுகளின் அனுமதிக்காக நாக்கைத் தொங்கப்போட்டுக் கொண்டு நிற்கின்றன. தற்போது எட்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்திற்கு தேவையான மின் உற்பத்தியில் உள்ள பற்றாக்குறையை மட்டும் உற்பத்தி செய்வதற்கே தனியாருக்கு அனுமதிக்கப்படுகிறது என்கிறது மத்திய அரசு. ஆனால் நாளடைவில் ஒட்டுமொத்த உற்பத்தியும் தனியாருக்கு தாரைவார்ப்பதாகவே முடியும்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தனியார் கம்பெனிகளுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களில் மத்திய, மாநில அரசுகள் ஏராளமாக கடன் வைத்துள்ளன. இக்கடனை அடைப்பதற்காகவும் மேலும் மேலும் கடன் வாங்குகிறார்கள், ஆட்சியாளர்கள். எனவே தனியார் கம்பெனிகள், அரசுடனான வர்த்தகத்தை நம்பி மின் உற்பத்திக்கு மூலதனமிட சிறிதே தயங்குகின்றன. எனினும் மூக்கை நுழைத்துவிட்டால், பிறகு அரசு தரப்பு கடன், நிதியின்மை, நிர்வாகக் கோளாறை சாக்கிட்டு மொத்த மின் உற்பத்தியையும் கைப்பற்றுவதோடு விநியோகத்தையும் நேரடியாக தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிடலாம் என்ற நம்பிக்கையில் உள்ளன. மேலும் இம் மின் உற்பத்தியில் அமெரிக்க கம்பெனிகள் தான் ஏகபோகமாக செல்வாக்கு செலுத்தும் என்பதால், அவை அமெரிக்கா மற்றும் உலக வங்கியின் மூலம் நிர்ப்பந்தம் கொடுத்தும் காரியத்தை எளிதாக சாதித்துக் கொள்ளும். விநியோகமும் தனியார் கைக்கு போகுமானால் என்ன ஆகும் என்று சொல்லவே தேவையில்லை. அவற்றின் கொள்ளைக்கு இருக்கும் சிறிய கட்டுப்பாடுகளும் நீங்கும். பண்ணையார்கள், பண முதலைகள், தரகு முதலாளித்துவ நிறுவனங்கள் பயன்பாட்டுக்குத்தான் முக்கியத்துவமும் ஏராளமான சலுகைகளும் கொடுக்கப்படும். அரசின் மானியம் அறவே நீங்கி சாதாரண மக்கள் மின்சாரத்தைப் பயன்படுத்த முடியாத நிலையே உருவாகும்.



**மோசமான நிலையில் உள்ள மின்மாற்றிகளால் ஏராளமான மின்சாரம் வீணாகிறது. புதிய தொழில்நுட்ப மின்மாற்றிகளை நிர்மாணிக்க அதிக செல்வாகிறது என்பதால் அலட்சியப்படுத்துகிறது அரசு.**

எட்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்திற்குள் அதாவது 1997-க்குள் கூடுதலாக 38,000 மெகாவாட் மின்சாரம் தாரிக்கும் வண்ணம் மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்க வேண்டும் என்றும் இதில் பொதுத்துறை மூலம் 28,000 மெகாவாட் மின்சாரமே தயாரிக்க மூலதனம் உள்ளது; எஞ்சிய 10,000 மெகாவாட் மின்சார உற்பத்திக்கு தனியார் மூலதனத்தையே நாட வேண்டியுள்ளது என்றும் பொதுவாக எல்லா ஆய்வுகளும் தெரிவிக்கின்றன. ஆனால் அரசோ ஏறக்குறைய 20,000 மெகாவாட் தனியார் உற்பத்திக்கு அனுமதிக்க உள்ளது. மேலும் மத்திய மின்சக்தி நிறுவனம் (CEA) ஒத்துக்கொண்டுள்ள சமீபத்திய 14-வது மின்சக்தி ஆய்வறிக்கை தந்த புள்ளிவிவரப்படியே ஆண்டுக்கு 28,850 மெகாவாட் மின்சாரம்தான் கூடுதலாகத் தேவைப்படுகிறது. ''இதை பொதுத்துறை நிறுவனமே உற்பத்தி செய்ய முடியும் என்பதால் 20,580 மெகாவாட் மின் உற்பத்தியை தனியாருக்கு கொடுக்க வேண்டிய அவசியமே இல்லை'' என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

மேலும் மின்துறைகளில் உள்ள செயல்பாடு மற்றும் நிர்வாகக் கோளாறால் ஒழுங்கீனத்தால் நடக்கும் மின் இழப்புகளை சரிபடுத்தினாலே பல ஆயிரக்கணக்கான மெகாவாட் மின்சாரத்தை மிச்சப்படுத்த முடியும் என்கிறார்கள். மின்மாற்றம் மற்றும் விநியோகத்தில் ஏற்படும் இழப்புகள், மின் சேமிக்கும் களம் - மின்மாற்றிகளின் தரமற்ற பழைய தன்மையால் ஏற்படும் இழப்புகள், வெகு தொலைவிற்கு மின் அழுத்தப் பெருக்கிகள் — தரமான கம்பிகள் இல்லாமல் கொண்டு செல்லப்படும் மின்சாரத்தால் ஏற்படும் இழப்புகள், ஒரு நாளில் அதிக மின்சுமை தேவை நேரத்தை (Peak load hours) கட்டுப்படுத்தாமல் - மாற்றியமைக்காமல் இருப்பதால் ஏற்படும் இழப்புகள் என ஏராளமாகப் பட்டியலிடலாம். இதில் அதிக மின்சுமை நேரத்தை குறைத்து ஒழுங்குபடுத்த வேண்டும் என்று எட்டாவது ஐந்தாண்டு திட்ட கமிஷன், இதற்கு 10 சதவிகிதம் இலக்கும் நிர்ணயித்து உள்ளது. இந்த 10 சதவிகித குறைப்பால் மட்டும் மின்துறைக்கு சேமிக்க கிடைக்கும் மின்னளவு ஆண்டுக்கு 8,000 மெகாவாட் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

மின்சாரம் குறைவாக செலவாகும் மின்சாதனப் பொருட்களை உற்பத்தி செய்யாமல் லாபம் கருதி மின்சாரம் அதிகம் செலவாகும் பொருளை உற்பத்தி செய்வதாலும் ஏராளமாக மின்சாரத்தை இழக்கிறோம். நிலைப்படுத்தப்பட்ட மோட்டாரைக் (Standards motors) காட்டிலும் சக்தி பாதுகாப்புள்ள மின் மோட்டார்கள் (Energy efficient motors), குளிர்பதனப் பெட்டியில் (Refrigeration) வெப்பத்தை வெளியேற்றும் வாயு முறையைக் காட்டிலும் வெப்பத்தை உட்கொள்ளும் வாயு முறை, மெர்குரி வாயு மின் விளக்கைக் காட்டிலும் சோடியம் வாயு மின் விளக்கு, ஒளிரும் காந்த குழல் விளக்கைக் காட்டிலும் ஒளிரும் மின்னணு குழல் விளக்கு, இழைகளால் எரியும் வெள்ளொளி விளக்கைக் காட்டிலும் வாயு அழுத்தத்தால் எரியக்கூடிய வெள்ளொளி விளக்கு போன்றவற்றால் மின்சாரம் அதிகம் சேமிப்பாகிறது. இவற்றை உற்பத்தி செய்ய முக்கியத்துவம் கொடுப்பதோடு இவற்றையே பயன்பாட்டுக்கும் கொண்டு வரவேண்டும்.

மேற்கண்ட முறையில் முக்கியத்துவமளித்து உற்பத்தி நடந்தால் மஹாராஷ்டிராவில் மட்டும் ஆண்டுக்கு 250 மெகாவாட் மின்சாரத்தை மிச்சப்படுத்த முடியும் என ஆய்வாளர்கள அறிவிக்கின்றனர். இதுவன்றி மஹாராஷ்டிராவின் பெரிய ஆலைகளில் உற்பத்தியோடு அதிலிருந்து வெளியேறும் வெப்பம், வாயு, அழுத்தம், காற்று, நீரிலிருந்தும் மின்சாரம் தயாரிக்கும் முறையே (Co-generation) இணைத்தால் ஆண்டுக்கு 242 மெகாவாட் மின்சாரம் தயாரிக்க முடியும் என்று தெரிவிக்கிறார்கள். ஆக மேற்கண்ட முறை இந்தியா முழுவதும் அமுல்படுத்தப்பட்டால் ஆயிரக்கணக்கான மெகாவாட் மின்சாரத்தை சேமிக்க முடியும்.

படிப்பகம்

www.padippakam.com



**அரசியல்வாதிகள் - அதிகாரிகளின் உல்லாசத்திற்கும் கேளிக்கைக்கும் விருந்திற்கும் அநாவசியமாகப் பயன்படுத்தப்படும் மின்சாரம் ஏராளம்.**

மேற்கண்ட பட்டியல்படி பார்த்தால் மின்சாரத்தை விரயமாக்கும் கும்பல் யாராக இருக்க முடியும்? மேட்டுக்குடி கும்பல்தானே! குளிர்பதனப் பெட்டி, ஒளிரும் பளபள விளக்குகள் (Fluorescent tubes), மெர்குரி விளக்குகளைப் பெருவீத அளவிற்கு பயன்படுத்துபவர்கள் இவர்கள் தானே!? பங்களாக்கள், ஐந்து நட்சத்திர விடுதிகள், கேளிக்கை நடன அரங்குகள், நடிகர்கள் - அரசியல்வாதிகள் - தொழிலதிபர்களின் வீட்டு ஆடம்பர விழாக்கள் - விருந்துகள், திரைப்பட தொழிற்சாலை முதலியவைதான் ஏராளமான மின்சாராத்தை விரயமாக்குகின்றன. இதேப்போல் தரகு முதலாளிகள், அந்நிய கம்பெனிகளின் கனரக ஆலைகள்தான் விதிமுறைகளை எதுவும் கடைபிடிக்காமல் மின்அதிகமிழுக்கும், மோட்டார்களைப் பயன்படுத்தி மின்சாரத்தை விரயமாக்குகின்றன. ஆனால் இக்கேடுகெட்ட அரசோ சிறிதும் கூச்சமின்றி மக்களையும் விவசாயிகளையும் பார்த்து மின்சாரத்தை விரயமாக்காமல் மிச்சப்படுத்தக்கோரி அறிவுரை வழங்குகிறது. அதிகாரிகளின் அலுவலக அறைகள் விரயமாக்கும் மின்னளவைக்கூட மக்கள் (அறியாமையால்) விரயமாக்கும் மின்னளவு தொடாது! இருந்தும் மேட்டுக்குடி கும்பல் மேல் கைவைக்காமல் மக்களின் - விவசாயிகளின் வயிற்றில் கைவைத்து சிக்கன நடவடிக்கை எனக்கூறி மின்வெட்டை அமுல்படுத்துகிறது. அரசு.

ooo

இந்தியாவில் கூடுதலாகத் தேவைப்படும் மின் உற்பத்தியை அரசே தயாரிக்க முடியும் என்ற நிலையிருந்தும் தனியாருக்கு வலிந்து தாரைவார்க்கிறார்களே ஏன்? இத்தனியார்மயமாக்கலுக்கு எதிராக கிளம்பும் போராட்டங்களையும் முனைப்பாக ஒடுக்குகிறார்களே ஏன்? காரணம்; அந்நிய முதலாளிகள், தரகுமுதலாளிகள், அரசியல்வாதிகள், அதிகாரிகளின் கூட்டுக் கொள்ளைலாப - சுயநலவெறியே.

தமிழகத்தில், மின் உற்பத்திக்கான நிலக்கரி வாங்குவதில் வெளிநாட்டு கம்பெனிகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தில முறைகேடு நடந்து பலகோடிகளை அதிகாரிகளும், அ.தி.மு.க. அமைச்சர்களும் சுருட்டியது அண்மையில் வெளிவந்த செய்தி. இதுபோன்று சிறிய - பெரிய அளவிலான முறைகேடுகள் - ஊழல்கள் பரவலாக நடக்கின்றனவே ஒழிய அனைத்தும் வெளிவருவதில்லை. ஆளும் கும்பல் மின் உற்பத்தியை தனியாருக்கு தாரைவார்ப்பதிலும் பேரம் நடத்தி அந்நிய கம்பெனிகளிடம் கொள்ளையடிப்பது மட்டுமல்ல; மின் உற்பத்திக்காக உலக வங்கியிடமும் அந்நிய ஏகாதிபத்தியங்களிடமும் வாங்கிய கடனை முழுமையாகப் பயன்படுத்தாமலும் கொள்ளையடிக்கிறது.

''பெரோஸ் காந்தி அன்ச்சாகர் மின் உற்பத்தி திட்டத்''திற்காக ஆசிய முன்னேற்ற வங்கி (ADB) யிடம் 160 மில்லியன் அமெரிக்க டாலர் பெற்று தொடங்கப்பட்டதில் 16.9 மில்லியன் டாலரே பயன்படுத்தப்பட்டுள்ளது. உத்திர பிரதேச மின்சக்தி திட்டத்திற்காக உலகவங்கியிடம் 350 மில்லியன் அமெரிக்க டாலர் பெறுவதற்காக போட்ட ஒப்பந்தம் 3 வருடமாகியும் பயன்படுத்தப்படாததால் ஒப்பந்தத்தையே உலக வங்கி நிறுத்தி வைத்துவிட்டதும் பேசின் பிரிட்ஜ் வாயு விசையாழி திட்டத்திற்காக ஜப்பானிடம் இருந்து பெற்ற நிதி ரூ.229 கோடியில் 16.76 கோடி ரூபாயே இவ்வொப்பந்தம் காலாவதியாகும் வரை பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் அதே சமயம் பெற்ற கடனுக்காக உலக வங்கிக்கு ஒப்பந்த தொகை செலுத்தப்படுகிறது. இந்திய கம்பெனிகள் ஒப்பந்தப்படி நிதி போடாதது, திட்டத்திற்கான உபகரணங்கள் வாங்கி நிர்மானிப்பதில் தாமதமாவது முதலியவற்றை திட்டத்திற்குரிய முழுத் தொகையையும் பயன்படுத்தாதற்கு நொண்டிச் சாக்கு கூறுகிறது, அரசு. ஆனால், பயன்படுத்தப்படாத நிதி பங்குச் சந்தை சூதாட்டத்தில் புரண்டு அரசியல்வாதிகள், அதிகாரிகளின் பையை நிரப்புகிறது. அதிகாரிகள் - அரசியல்வாதிகளின் ஊழல் முறைகேடுகள், நிர்வாகக் கோளாறுகள் காரணமாகத்தான் அரசுத் துறைகள் நட்டமாவதும், முடங்கிப் போவதும் செய்கின்றன

ஆனால், இவற்றையெல்லாம் மூடிமறைத்துவிட்டு தனியார் துறைதான் சீரான - ஒழுங்கான நிர்வாகம், தரமான உற்பத்திக்கு உகந்தது என்ற கருத்தை பரப்பி தனியார்மயமாக்கலுக்கு பாமரனையும் வக்காலத்து வாங்க வைத்துவிடுகிறார்கள். தனியார் மின் உற்பத்தி கழகங்கள் அனைத்தும் லாபத்தில், தரம் - நிர்வாக முன்னேற்றத்தில் இயங்குவதாகக் காரணம் காட்டியே தற்போது தனியாருக்கு அரசு மின் உற்பத்தி தாரைவார்க்கப்படுவதை ஆதரிக்கிறார்கள், முதலாளித்துவ அறிவுத்துறையினர். தனியார் துறை லாபம் - சுயநலவெறி அடிப்படையிலானது என்பதையும் இதனால் சாதாரண மக்களும், விவசாயிகளும் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதையும் வசதியாக மறைத்துவிடுகிறார்கள்.

தனியார் மூலதனம், பொதுத்துறையின் தொழிற்பிரிவு என்று மட்டுமல்லாமல் சேவைப்பிரிவிலும் புகுந்து ஆதிக்கம் செலுத்தும் வண்ணம், அவற்றையும் காசாக்கும் வண்ணம் உள்நாட்டு - வெளிநாட்டு தனியார் முதலாளிகளுக்கு சேவை செய்து வருகிறது, காங்கிரசின் புதிய பொருளாதாரக் கொள்கை. மின்துறை மட்டுமல்ல; விமானத்துறை, வங்கித் துறை, தொலைபேசி, அஞ்சல் துறை என எந்த பொதுத்துறை நிறுவனத்தையும் மிச்சம் வைக்காமல் அனைத்தையும் தனியாருக்கு தாரைவார்த்தும், அதற்கு திட்டமிட்டும் வருகிறது ராவ் கும்பல். இவையெல்லாம் ராவ் கும்பலின் புதிய பொருளாதாரக் கொள்கையால் மட்டுமே விளைந்தவை அல்ல; இன்றைக்கு காங்கிரசிற்கு மாற்று என்று கூறிக்கொள்கிற பா.ஜ.க., ஜனதாதளம், போலிக்கம்யூனிஸ்டுகள் யாராக இருந்தாலும் இவற்றைதான் கூடவோ குறைச்சலோ நடைமுறைப்படுத்த முடியும். ஏனெனில் எதுவும் இந்திய ஆட்சியாளர்களின் மூளையில் இருந்து உதிக்க முடியாது; அனைத்தும் உலக வங்கி, ஐ.எம்.எப், டங்கல் என்ற பெயரில் அமெரிக்க மூளையிலிருந்துதான் உதிக்க முடியும்; அவற்றைத்தான் நடைமுறைப்படுத்த முடியும்.

ஐ.எம்.எப். மற்றும் டங்கல் திட்ட முன்மொழிதலில் உள்ள, ''சேவைத் துறையில் சந்தைப் பொருளாதாரத்தை அனுமதி; விவசாயத்துறைக்கான அனைத்து வகை மானியங்களையும் குறை'' என்ற இரண்டு கட்டளைப்படியே தற்போது மின் உற்பத்தியும் தனியாருக்கு தாரைவார்க்கப்பட்டுள்ளது; மின்சார மானியத்தை வெட்டச் சொல்லி மாநில அரசுகள் நிர்பந்திக்கப்பட்டுள்ளன. எனவே மின்சாரத்தை மிச்சப்படுத்த பல முறைகள் இருந்தாலும் சரி, கூடுதல் மின் உற்பத்தியே தேவையில்லாவிட்டாலும் சரி, மின்வெட்டையோ, விலையேற்றத்தையோ நடைமுறைப்படுத்த அவசியமில்லையாயினும் சரி அமெரிக்க கட்டளை நடைமுறையாக வேண்டும் என்பதை விரைவாக நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது ராவ் கும்பல். உழைக்கும் மக்களின் இவ்விரோதக் கூட்டத்தை பலமடங்கு முனைப்போடும், விரைவாகவும் துடைத்தொழிக்க வேண்டியதே நம்முன்னுள்ள அவசர - அவசியப் பணி.

● சுப்பு

படிப்பகம்

www.padippakam.com




*● தி.க. நிறுவனர், தமிழர் தந்தை பெரியார் உண்மையான பகுத்தறிவோடு, மூட நம்பிக்கைகளை எதிர்த்துப் போராடி வாழ்ந்தார் என்று நான் கூறும்போது சிலர் எதிர் விமர்சனம் வைக்கின்றனர். சாதி எதிர்ப்பு பிரச்சாரத்தால் (பார்ப்பனர்கள்) பெரியாரை நேராக எதிர்கொள்ள முடியாமல் அவரை நரித்தனமாக ராஜாஜி தனது இளம் மகளை அவருக்கு மணம் முடித்து வைத்து பழியைத் தீர்த்து பெரியாரை இழிவுபடுத்தியபோது பகுத்தறிவுத் தலைவருக்கு "பகுத்தறிவு" அன்று எங்கே போனது என்று கேட்கின்றனர். மூட நம்பிக்கைப் பிரச்சாரம் ஊரெல்லாம் செய்தவர், அவர் இறந்தபோது வீட்டில் பிள்ளையார் சிலை இருந்தது என்றும் சொல்லுகின்றனர். இது எந்த அளவுக்கு உண்மை?*

— கணேசன், சாத்தூர்.

☆ மூடநம்பிக்கை எதிர்ப்பிலும், பகுத்தறிவுக் கொள்கையிலும் பெரியாருக்கு இருந்த உறுதியையும், நடைமுறையையும் அவரது பரம எதிரிகளான பார்ப்பன கூட்டத்தாரே சந்தேகித்ததில்லை. அது குறித்துப் புகழ்ந்து பாராட்டாதவர் எவருமில்லை. அவரது வீட்டில் பிள்ளையார் சிலை வைத்து வழிபட்டார் என்பது வடிகட்டின முட்டாள்தனமான பொய்தான். ஆனால் பெரியார் வாழ்நாளில் இருந்தே இந்தப் பொய்ப் பிரச்சாரம் வதந்தியாகப் பல பக்த கோடிகளால் செய்யப்பட்டு வருகிறது; அறிவுள்ள எவரும் இதை நம்புவதில்லை. ராஜாஜியின் மகளைப் பெரியார் மணந்துகொண்டார் என்பது போன்ற தற்குறிகளின் விமர்சனங்களை நம்ப வேண்டியதில்லை.

பெரியார் தவறே செய்யாத பொருந்தலைவர் என்று நாம் கருதவில்லை. அவர் தனது எழுபது வயதில் இருபது வயது மணியம்மையைப் பொருந்தாத் திருமணம் செய்துகொண்டது அவரது தவறுகளில் ஒன்று; அவரது பகுத்தறிவு இயக்கத்தில் ஏற்பட்ட களங்கம்தான். மணியம்மை ராஜாஜியின் மகள் அல்ல. வேலூரைச் சேர்ந்த ஒரு பகுத்தறிவுக் குடும்பத்தில் பிறந்தவர்; பெரியாருடன் தங்கி அவருக்குப் பணிவிடைகள் செய்வதையே வாழ்வாக ஏற்றுக்கொண்டிருந்தவர். தி.க.வில் தனக்கு அடுத்த நிலையில் இருந்த அண்ணாதுரை, சம்பத் போன்றவர்கள் கழகத்தையும் தனது சொத்துக்களையும் கைப்பற்றும் முயற்சியில் இருப்பதாகவும், தனது கட்டளைகளுக்கு மாறாகவும் தனக்கே தெரியாமலும் கட்சிப் பத்திரிகையில் அவர்கள் செய்திகள், அறிக்கைகள் வெளியிடுவதாகவும், தன்னையே கொலைசெய்யச் சதிகள் நடப்பதாகவும் அது குறித்து இரகசியப் போலீசும் நெருங்கிய நண்பர்களும் எச்சரிப்பதாகவும் இவற்றை முறியடிப்பதற்காகவும் கழகத்தையும் சொத்துக்களையும் பாதுகாப்பதற்காகவும் ஒரு "ஏற்பாடாக" தனது வாரிசாக நியமிக்கும் பொருட்டு மணியம்மையை மணமுடிப்பதாகவும் திடீரென்று பெரியார் அறிவித்தார். இது குறித்துக் கலந்தாலோசிக்கும் அளவுக்கு நம்பிக்கைக்குரியவர் எவரும் கழகத்தில் இல்லாததால் ராஜாஜியின் யோசனை கேட்டு முடிவு எடுப்பதாகவும் அறிவித்தார். பின்னர் இந்தப் பொருந்தா மணத்தை நியாயப்படுத்திப் பல விளக்கங்களும் தந்தார்; அவற்றை ஏற்காத, அதையே காரணமாகக் காட்டி அண்ணாதுரை தலைமையிலானவர் பிரிந்து போய் தி.மு.க. வைத் துவக்கினர். அப்போது நடந்தவற்றில் திராவிட இயக்கத்தினர் மறைக்கவும் மறக்கவுமான ஏதோ சில இரகசியங்கள் உள்ளன; பார்ப்பனக் கூட்டத்தாரும் அவற்றில் உடந்தையாக இருந்தனர், உடன்பட்டனர் என்று மட்டுமே தெரிகிறது. ஆனால் பெரியாரின் மூடநம்பிக்கை, பகுத்தறிவுக் கொள்கைகளை சந்தேகிப்பதற்கு இது ஒரு அடிப்படையாக இருக்க முடியாது.

*● கருவறை நுழைவுப் போராட்டத்தின்போது ரங்கநாதனுக்குப் பதிலாக தாழ்த்தப்பட்ட மக்களின் விடிவெள்ளியாகத் திகழும் டாக்டர் அம்பேத்கார் அவர்களுடைய உருவப்படத்தை கருவறைக்குள் வைத்ததற்கு மிக்க மகிழ்ச்சி அடைகிறோம். எங்களுடைய பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறோம். ஆனால் நீங்கள் அவருடைய கொள்கை, சட்டதிட்டங்களைப் பின்பற்றுவீர்களா?*

— டி.சுகுமாரன், சென்னை-3

☆ பஞ்சமரும் சூத்திரரும் கோவிலுக்குள்ளும் கருவறைக்குள்ளும் நுழைந்தால் தீட்டாகிவிடும், புனிதம் கெட்டுவிடும் என்று ஒடுக்கப்படுகிறார்கள். அதற்கு எதிராகவும் சூத்திரர், பஞ்சமர் சமூக விடுதலைக்காகவும் அம்மக்களைத் திரட்டிப் போராடிய தலைவர்கள் பெரியாரும் அம்பேத்காரும். இப்போதும் பார்ப்பன சனாதன வருணாசிரம - சாதி ஆதிக்கத்தை தூக்கிப்பிடிக்கும் அரசியல் கட்சிகளும் அரசும் அத் தலைவர்களையும் பூசை அறைப் பொம்மைகளாக ஆதாயம் தேடுகின்றனர். இந்த நிலையில் பார்ப்பன சனாதன வருணாசிரம - சாதி ஆதிக்கத்தையும், இந்துமத வெறி பாசிசத்தையும் எதிர்த்த போராட்டத்தின் ஒரு பகுதியான கருவறை நுழைவின் போது அத்தலைவர்களின் படங்களை எடுத்துச் செல்வது பொருத்தமாக இருக்கும் என்று அவ்வாறு செய்தோம்.

பார்ப்பன சனாதன வருணாசிரம - சாதி ஆதிக்கத்துக்கு எதிராக பெரியார், அம்பேத்கார் நடத்திய போராட்டங்களையும் சூத்திரர், பஞ்சமர் சமூக விடுதலைக்கான அவர்களது இலட்சிய நோக்கத்தையும் நாங்கள் ஏற்கிறோம். ஆனால் அவர்களது "கொள்கை, சட்டதிட்டங்கள்" சூத்திரர், பஞ்சமர் விடுதலையைச் சாதிக்க முடியாதவை; இவர்களுடைய வாழ்வில் சில சீர்திருத்தங்களை மட்டுமே ஏற்படுத்தக்கூடியவை. இம்மக்களது சமூக, பண்பாட்டு, பொருளாதார விடுதலைக்கு அடிப்படையான அரசியல் விடுதலைக்கு அவர்களது "கொள்கை, சட்டதிட்டங்கள்" தீர்வு தரவில்லை. பார்ப்பன சனாதன வருணாசிரம - சாதி ஆதிக்கத்தைக் காத்துவரும் இந்த அரசு அமைப்பிலேயே, தீண்டாமை ஒழிப்பு, தாழ்த்தப்பட்ட, பழங்குடி கமிசன் போன்ற சில சீர்திருத்த சட்ட திட்டங்களைக் கொண்டு வருவது; இட ஒதுக்கீடு மூலம் கல்வி, வேலைவாய்ப்புகள் பெற்று சமூகப் பொருளாதாரத் தகுதியை உயர்த்திக் கொள்வது — இவைதான் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கு அத்தலைவர்கள் முன்வைக்கும் தீர்வு. இத்தோடு இழிவு நீங்க இந்து மதத்தில்இருந்து வெளியேறும்படி பெரியாரும், அப்படி வெளியேறி புத்தமத்தில் சேரும்படி அம்பேத்காரும் வழிசொல்கிறார்கள். இவையெல்லாம் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கு வழிவகுக்கவில்லை என்பதே நமது அனுபவம். இன்னும் குறிப்பாகச் சொல்வதானால் "ஆரியர்கள் இந்த நாட்டுக்கு வந்தேறிகள் அல்ல, பூர்வ குடிகள்தாம்; இந்தியே இந்த நாட்டின் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும்; அப்படிப்பட்ட நிலைவரும் வரை ஆங்கிலம் நீடிக்க வேண்டும்; தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்க முடியாது, இந்திய 'தேசிய' ஐக்கியத்தைக் காத்திடவேண்டும்; கம்யூனிச சர்வாதிகாரத்தை ஏற்க முடியாது, மேற்கத்திய பாணியிலான நாடாளுமன்ற ஜனநாயகமே சிறந்தது" போன்ற அம்பேத்காரின் ஆய்வுகளும் முடிவுகளும் நாம் ஏற்றுப் பின்பற்றக் கூடியன அல்ல. ●

- பெரியார் மீதான அவதூறுகள்
- பெரியார், அம்பேத்கார் மீதான நமது நிலைப்பாடுகள்

www.padippakam.com

# பொட்டல் காடாய் விளைநிலங்கள் ஓட்டாண்டிகளாக விவசாயிகள்

## அரசின் அலட்சியத்தால் பஞ்சபூமியாகும் புதுகை - ராமநாதபுரம் மாவட்டங்கள்

ஒரு குடம் தண்ணீருக்காக தினமும் சுட்டெரிக்கும் வெயிலில் நான்கு மணிநேரம் பானையைத் தலையில் சுமந்து கொண்டு அலைந்து திரிகின்றனர் பெண்கள். கிணறும் கண்மாயும் வற்றிப்போனதால் நிலங்களெல்லாம் விளைச்சலும் ஈரப்பசையும் இன்றி பாளம் பாளமாக வெடித்துப் போய்விட்டன. அரை வயித்துக்குக் கூடப் பத்தாத கஞ்சியும் மாற்றி உடுத்திக் கொள்ள வேறு உடையில்லாத கிழிந்த கந்தலான உடையுமென குடும்பத்தில் வறுமை கோரத்தாண்டவமாடுகிறது. இந்நிலையில் குழந்தைகளின் படிப்பைப் பற்றியோ தேக ஆரோக்கியத்தைப் பற்றியோ சிந்திப்பது கூட கைமீறிய காரியம். இதோடு மட்டும் அந்த அவலம் அம்மக்களின் வாழ்க்கையில் நின்றுவிடவில்லை; மீளாக் கடன் துயரிலும் நிலத்தை அடகு வைப்பதிலும் தொடங்கி கொத்தடிமையாகச் செல்வது, பஞ்சம் பிழைக்க குடும்பத்தாரும் வேறு இடங்களுக்கு பிழைப்பு தேடிச் செல்வது என ஏழை, நடுத்தர விவசாயிகளை புதை சேற்றுக் குழியினுள் தள்ளிவிட்டுள்ளது.

எங்கோ தொலைதூர ராஜஸ்தான் பாலைவனப் பகுதியிலோ அல்லது ஒரிஸ்ஸாவின் காளகந்தி மாவட்டத்திலோ இது நடைபெறுகிறது எனத் தமிழ்நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் நினைத்துக் கொண்டிருந்தால், அது நமது பேதமையைக் குறிப்பதாகும். இதோ, இங்கேயே, நமது அருகாமையிலேயே புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுர மாவட்டங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான கிராமங்களிலும் சிற்றூர்களிலும் வாழும் இலட்சக்கணக்கான ஏழை விவசாயிகள் கடந்த பத்தாண்டுகளாகவே இந்த இழிநிலையில்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறனர். இவ்வருடத்தின் நடுப் பகுதியில் இந்த இரு மாவட்டங்களைச் சேர்ந்த கிராமப்புற பகுதிகளில் சுயேச்சையான பத்திரிகையாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் 'வறட்சி' என்ற அளவில் வெளியுலகுக்குத் தெரிந்த இந்த அவலம் அப்பகுதி மக்களின் வாழ்க்கையினை குறிப்பாக விவசாயிகளை எத்தகைய மீள்வே முடியாத இருட்குகையினுள் தள்ளியுள்ளது என்பதனை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளன.

### வெளியேறும் விவசாயிகள்; காலியாகும் கிராமங்கள்

புதுக்கோட்டை மாவட்டத்தில் மட்டும் கிணறு மற்றும் கால்வாய்ப் பாசனத்தால் சாகுபடியாகும் பரப்பு 22,000 ஹெக்டேர்; கண்மாய் பாசனப் பரப்பு 82,000 ஹெக்டேர், நிலத்தடி நீர் மேலும் மேலும் ஆழமாகக் கீழிறங்கிச் செல்வது, பருவமழை பொய்த்து போவது காரணமாக இந்த ஒரு லட்சம் ஹெக்டேர் வயற்பரப்பை நம்பியுள்ள பத்தாயிரக்கணக்கான விவசாயக் குடும்பங்கள் இன்று ஒரு போகம் கூட சாகுபடி செய்ய முடியாத நிலையிலுள்ளன. தமிழ்நாட்டிலுள்ள மிகப் பின்தங்கிய, தொழிற்துறை வாய்ப்புகளில்லாத மாவட்டங்களும் ஒன்றாக இருப்பது இந்த வேலையற்ற அவலநிலையினை மேலும் ஆழமாக்கியுள்ளது. தங்கள் வீட்டையும், நிலத்தையும், வயது முதிர்ந்தவர்களையும் அப்படியே கிராமத்தில் விட்டுவிட்டு குழந்தை குட்டிகளுடன் குடும்பத்தோடு வேலை தேடி பக்கத்து மாவட்டங்களுக்கும் சில வேளைகளில் பக்கத்து மாநிலமான கேரளாவுக்கும் விவசாயிகள் வருடம் முழுவதும் இடம் பெயர்வது சர்வசாதாரணமாகப் போய்விட்டது.

ஆய்வு மேற்கொள்ளப்பட்ட துலுக்கம் பட்டி, கடுநவல் பகுதிகளில் காலனிகளில் வாழும் 200 குடும்பங்களில் 160 குடும்பங்கள் பஞ்சம் பிழைக்க வேறு இடங்களுக்குச் சென்றுவிட்டனர். இவர்கள் அனைவரும் தாழ்த்தப்பட்ட மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட (குறவர் மற்றும் முத்துராஜா) சமூகத்தைச் சேர்ந்தவர்கள். '18-லிருந்து 45 வயதுக்குள்ளான ஆண்-பெண்களையே இப்பகுதிகளில் காண முடியவில்லை' எனக் கூறுகிறார் ஆய்வு செய்த பத்திரிகையாளர். இப்பகுதியில் வாழும் மாரியப்பன் என்பவரின் ஏப்ரல் மாத வருமானம் ரூ. 200 மட்டும் தான். இதைக்கொண்டுதான் அவர் எட்டு பேர் அடங்கிய தனது குடும்பத்தைப் பராமரிக்க வேண்டும். மே மாதத்தில் இந்த 200 ரூபாய்கூட அவருக்குக் கிடைக்க வழியில்லை. மாணிக்கம், முத்துசாமி, கலியமூர்த்தி போன்றோர்க்கு சென்ற ஏப்ரலில் இருந்தே வருமானத்திற்கான எந்தவிதமான வாய்ப்புமில்லாத நிலை. தற்பொழுது இவர்கள் அனைவருமே பஞ்சம் பிழைக்க குடும்பத்துடன் வெளியேறிவிட்டனர்.

இப்படி வெளியேறிச் சென்றவர்கள் எங்கு போனார்கள் என்பது ஊரில் உள்ளவர்களுக்குத் தெரியாது. 'கூலி வேலைக்கு வெளியூர் போயிருக்கிறார்' என்பதுதான் விசாரித்தால் கிடைக்கும் பதில். ஊரில் உள்ளவர்களின் உணவு ஒரு வேளை கேழ்வரகு கூழ்தான்; அதுவும் பெரியவர்களுக்கு மட்டும்தான். சிறுவர்களுக்கு அரசு போடும் ஒரு வேளை 'சத்துணவு'தான் ஒரு நாளைக்கான சாப்பாடு. மீறிப் பசித்தால் கண்மாய்களில் கலங்கிப் போய் தேங்கிக் கிடக்கும் தண்ணீரைத் தேடிப் போய் குடித்துக்

**வற்றி கலங்கிப் போய் கிடக்கும் தண்ணீர்தான் புதுக்கோட்டை நகர மக்களுக்குக் குடிப்பதற்கும் சமைப்பதற்கும்.**



படிப்பகம்

www.padippakam.com

கொள்ள வேண்டியதுதான்.

இங்கிருந்து வெளியேறியவர்களில் மிகப் பெரும்பாலோர் தஞ்சை மாவட்டத்தில் செங்கல் சூளைகளில் காண்டிராக்ட்டர்களிடம் கொத்தடிமை போல் வாழ்க்கை நடத்துகின்றனர். அதிகாலை 3.00 மணியிலிருந்து அந்திசாயும் வரை இடுப்பொடிய கொளுத்தும் வெயிலில் வேலை செய்தால்தான் தினக்கூலியாக 13 ரூபாய் பெற முடியும். செங்கல்களின் எண்ணிக்கைக்குத் தகுந்தபடிதான் சம்பளம்; அதுவும் அந்த நேரத்தில் காண்டிராக்டர் தீர்மானிப்பதுதான் என்றிருப்பதால் இக்கூலிகூட வாரம் ஒவ்வொருமுறையும் குறைந்து போக வாய்ப்புண்டு. அது மட்டுமின்றி திடீரென மழை பெய்து செங்கற்கள் கரைந்து போனால் அதன் மதிப்பு முழுவதும் இவர்களின் அற்பக் கூலியில் பிடிக்கப்பட்டுவிடும். அதோடு குடிக்கும் தேநீரிலிருந்து சாப்பாட்டுக்குத் தேவையான பொருட்கள் வரை சப்ளை செய்வது காண்டிராக்டர்கள்தான். தரமற்ற பொருட்கள்; ஆகக் கூடுதல் விலை' என்ற இந்தச் சுரண்டல் இவர்களின் அற்ப சொற்பக் கூலியைக்கூட முழுவதும் இவர்களிடமிருந்து தட்டிப் பறித்துவிடுகிறது. கொடுமையான அவலநிலை இது; ஆனால் ஒரு இடத்தில் நிரந்தரமாக இவர்கள் இருப்பதில்லையாதலால், இவர்களை அமைப்பாக்கிப் போராட முடியாமல் போய்விடுகிறது என்கிறார் உள்ளூர் தொழிற்சங்கவாதி. இதற்கு இவர்களோ 'காய்ஞ்சுபோன பூமியைப் பட்டினியுடன் பார்த்துக் கொண்டே இருப்பதைவிட இது எவ்வளவோ மேல்' என விரக்தியுடன் பதில் அளிக்கின்றார்.

### தண்ணீருக்கும் தரவேண்டும் காசு

இந்த இரண்டு மாவட்டங்களிலும் பெரிய நிலப்பிரபுக்கள் இல்லையென்றாலும், அடகு வைத்து மீட்க முடியாமல் போகும் நிலங்களைப் பறித்துக் கொள்வதும் குறிப்பாகத் தாழ்த்தப்பட்டவர்களைக் கொத்தடிமைகளாக வைத்து வேலை வாங்குவதும் மேல் சாதியைச் சேர்ந்த பணக்கார விவசாயிகளிடம் ஒரு போக்காகப் பரவலாகக் காணப்படுகிறது. இது மட்டுமின்றி இவர்கள் மத்தியில் இருந்து 'தண்ணீர் அதிபதிகள்' என்ற சுரண்டும் கூட்டமும் தோன்றியுள்ளது. பணத்தை வாரியிறைத்து மிகவும் ஆழமாக ஆழ்குழாய் கிணறுகளைத் தோண்டுவது. இதன்மூலம் பக்கத்திலுள்ள சிறிய, நடுத்தர விவசாயிகளின் கிணறுகளை வற்றச் செய்வது; பின் அவர்களுக்குத் தண்ணீரை விற்பது; முக்கிய நேரத்தில் தண்ணீர் விடாது அவர்களை மிரட்டுவது; இன்ன பயிர்போட வேண்டும்; விளைச்சலில் இவ்வளவு பங்கு வேண்டும் எனக் கட்டளையிடுவது; அதோடு அவர்களின் நிலங்களை வறண்டு போகச் செய்து பின் பறித்துக் கொள்வது என்றவாறு தனது சாம்ராஜ்யத்தை நடத்தி வருகிறது இக்கூட்டம்.

இராமநாதபுரம் மாவட்டம் காயங்குடியில் பொதுக் கண்மாயிலேயே தனியாருக்கு கிணறு வெட்டிக் கொள்வதற்கு அனு



மரமேறும் மேளமடிக்கும் பாரம்பரிய தொழில் செய்து பிழைக்க முடியவில்லை; பண்ணையார் வீட்டிலும் மாடாய் உழைத்தே காலம் தள்ளுகிறார்கள்.

மதி கொடுத்து அவர்களின் சுரண்டலுக்கு அரசு துணை போயுள்ளது. அக்கிணறுகளின் மூலம் அவர்கள் பெறும் மாத வருமானம் ரூ.60,000/- இது போல் மின்சார மற்றும் டீசல் மோட்டார்களை சிறு விவசாயிகளுக்கு வாடகைக்கு விடுவதன் மூலம் மட்டுமே ஒரு நிலப்பிரபு அக்குறிப்பான காலத்தில் 70,000/- ரூபாய் வரை வருமானம் ஈட்ட முடியும். ஆனால் தண்ணீர் இறைப்பதற்காக ஒரு ஏக்கருக்கு 2,000 ரூபாய் வரை செலவு செய்யும் சிறிய / நடுத்தர விவசாயிக்கு நன்றாக விளைந்தால்கூட இச்செலவு ஈடுகட்ட முடியாத ஒன்றாகும்.

### விளைச்சலின் பலன் வியாபாரிக்கு; மேலும் கடன் விவசாயிக்கு

வர்த்தகச் சூதாடிகளும் தங்கள் பங்குக்கு விவசாயிகளைச் சுரண்டுவதில் தயங்குவதேயில்லை. இராமநாதபுர மாவட்டத்தில் இந்த ஒட்டுண்ணிக் கூட்டத்தின் ஆதிக்கம் அதிகம். கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள இம்மாவட்ட மிளகாய் சந்தையை எழுபது வியாபாரிகளைக் கொண்ட சங்கம் முழுமையாகத் தனது

> விவசாயிகளோ தங்களுக்கு நிலமும் நீரும் வேண்டும் என்கிறார்கள்; அரசோ கடுமையான பஞ்சத்திலும் தனது வரியைத் தள்ளுபடி செய்ய மறுக்கிறது.

கைப்பிடிக்குள் வைத்திருக்கிறது. விவசாயிகள் விதை பாவுவதற்கு முன்பே இவர்களின் சுரண்டல் துவங்கிவிடும். ''தொடக்கத்திலேயே வட்டியின்றி ரூ.2000/- வரை முன்பணமாகக் கொடுத்துவிடுவது; சந்தைக்கு வந்தவுடனேயே 1 கிலோ அளவுள்ள மிளகாயை 'சாமி வத்தல்' என எடுத்துக் கொள்ளுவது; சாக்கின் எடையை 1 கிலோ எனக் கூட்டிச் சொல்வது; எடை அளவுகளில் தில்லுமுல்லுகள் செய்வது; இறுதியாக சந்தைவிலை குறைந்துவிட்டது எனக் கூறி 1 கிலோ மிளகாயை ரூ. 10-க்கு அடிமாட்டு விலையாக எடுத்துக்கொள்வது'' என இந்த வியாபாரிகளின் சுரண்டலையும் ஆதிக்கத்தையும் சொல்லிமாள முடியாது. இதனை இவர்கள் 1 கிலோ ரூ.40/- வரை விற்று இருபதாயிரம் ரூபாய் வரை அதாவது 13 மடங்கு கொள்ளை இலாபமடைகின்றனர். சந்தை நிலவரத்திற்கேற்ப பதுக்கி விற்கும் பொழுது இதைவிடக் கூடுதலாக இலாபமடைய வாய்ப்புண்டு. ஆனால் மூவாயிரம் வரை செலவழித்த விவசாயிக்குக் கிடைப்பதோ ரூ.1,600/- மட்டுமே. இதனால் ஏற்கனவே வாங்கிய முன்பணத்தைத் திருப்ப இயலாததுடன் மீண்டும் விவசாயம் செய்ய கடன்பெற இத்தரகர்களையே நாட வேண்டியுள்ளது. மறுபுறம் அரசோ இச்சுரண்டலை ஒழிக்க மாற்று நடவடிக்கைகள் எடுப்பதாகத் தெரியவில்லை. தன் பங்குக்கு நவீனரக விதைகளை விவசாயிகள் தலையில் கட்டி மேலும் கூடுதலாக அவர்களை உரத்துக்கும் பூச்சிமருந்துக்கும் செலவு செய்யும் இக்கட்டில் தள்ளுகிறது.

### கந்து வட்டிக் கடன் வலை: கொத்தடிமைகளாக தாழ்த்தப்பட்டோர்

தொடர்ச்சியான வறட்சி - பஞ்சம் காரணமாக சிறிய, நடுத்தர விவசாயிகள்

www.padippakam.com

நிலத்தை அடகு வைத்து இழப்ப தும் விவசாயத்தையே நம்பிவா ழும் கூலி விவசாயிகள் வேறு வழி யின்றி கொத்தடிமைகளாகப் போவதும் வெளிப்படையாகவே அதிகரித்தவண்ணம் நடந்து வருகி றது. குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த மீசல் கிரா மப்புற பகுதிகளில் வாழும் சக்கி லிய தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த குடும்பம் ஒவ்வொன்றி லும் குறைந்தது இரண்டு பேர் கொத்தடிமைகளாக உள்ளனர். விவசாய வேலை ஏதும் இல்லா தது, தங்களது பாரம்பரியத் தொழி லான 'சாவுக்கு மேளம் அடிப்பது' மூலம் வாழ இயலாதது - இவை காரணமாகத் தங்களது அன்றாட வாழ்க்கைக்கு வாங்கும் கடனே இவர்களை முழு அடிமைகளாக மாற்றியுள்ளது.



விலை நிர்ணயம் செய்யும் முறையைச் செய்து காட்டும் வர்த்தகச் சூதாடிகள்; கொடிய நிலபிரபுத்துவச் சுரண்டல்.

வெறும் 1000, 500 ரூபாய் எனக் கடனாகக் கொடுத்தே இச்சா திப் பிரவினரைக் கொத்தடிமைக ளாக மாற்றிவிடுகின்றனர் உள்ளூர் நில முதலைகள். இந்தப் பணத் திற்கு பத்துவட்டி வேறு. மாடாய் வேலை பார்க்கும் இவர்களுக்குக் கிடைப்பது மிஞ்சிப் போன பழங் கஞ்சியும் வருடக் கடைசியில் சம்ப ளமாக 1000 ரூபாய் மட்டுமே. இத னைக் கொண்டுதான் இவர்கள் தங் களை மீட்டுக் கொள்ள வேண்டும். அதற் குள் வட்டி குட்டியெல்லாம் போட்டு கடன் தொகை இரண்டாயிரத்தைத் தாண்டிவி டும். பின் வாழ்நாள் முழுவதும் கொத்தடி மைதான். உதாரணமாக பூச்சி என்பவர் அறுபது வயதைக் கடந்த பின்னும் ஒரே பண்ணையாரிடம் கொத்தடிமையாக உள் ளார். இவர்களில் பெண்களும் உண்டு. அவர்களுக்கு மூன்றுவேளை சாப்பாடு மட் டும்தான்; சம்பளமெல்லாம் கிடையாது. அதனுடன் இச்சாதிப் பிரிவினர் அனைவ ருக்கும் சாப்பாடோ பண்ணை வீடுகளில் மிஞ்சிப் போய் அள்ளிக் கொடுக்கப்படும் உணவுதான்.

### பனையேறிகளின் அவலநிலை

கிராமப் புறங்களில் வாழும் விவசா யம் சாராத வேறு தொழில்களில் ஈடுபட் டுள்ளோரும் விவசாயிகளைப் போன்றே வறுமையிலும், கந்துவட்டி கடன் தொல்லை யிலும், அற்பக் கூலியிலும் அரைப் பட்டினி நிலையிலும்தான் வாழ்க்கையைக் கழித்து வருகின்றனர். இராமநாதபுர மாவட்டப் பகுதியில் பனை வெல்லம் காய்ச்சும் தொழி லில் ஈடுபட்டுள்ள பனையேறி நாடார் சமூ கத்தைச் சேர்ந்தவர்களின் ஒரு நாள் வருமா னமே 5 ரூபாய் முதல் 8 வரைதான். இதுவும் கூட வருடத்தில் இரு மாதங்கள் மட்டும் தான் இதற்காக இவர்கள் தினமும் 16 மணி நேரம் உழைக்க வேண்டும். 50 பனை மரங் களில் தினமும் 3 முறை ஏறி இறங்க வேண் டும். இதிலும் இடைத்தரகர்களின் சுரண்ட லுண்டு. இத்தொழிலில் ஈடுபட்டுள்ள எல் லாக் குடும்பங்களுமே கடன் பட்டிருப்ப தோடு பனை ஏறும் பெரும்பாலானோர் ஆஸ்த்மா, பல்வேறு வகையான தோல் நோய்கள், தசைப் பிடிப்பு என அவதியுறு கின்றனர். வேலை செய்வதற்கு ஏற்ற சத் தான உணவு வகைகளைக்கூட கடனாக வாங்கி சாப்பிடும் அவலத்தில்தான் இவர்க ளின் அன்றாட வாழ்க்கை நிலையுள்ளது.

### விவசாயப் புரட்சியே ஒரே தீர்வு

ஒரிஸ்ஸாவின் காளகந்தி மாவட்டத் தைப் போன்று தமிழ்நாட்டின் இந்த இரு மாவட்டங்களையும் பிடித்தாட்டும் பஞ்ச மும் வறட்சியும் பட்டினிச் சாவுகள் என்றள வுக்குப் பகிரங்கமாக வெடிக்கவில்லை தான். ஆனால் இந்த அவலத்தின் தீவிரத்தை வெளியுலகின் கண்களி லிருந்து மறைப்பதில் அரசே முதன் மையாக உள்ளது. உதாரணமாக புதுக்கோட்டை மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளும் வறட்சி யால் பாதிக்கப்பட்டுள்ளதாக 'அறி விக்கப்படவில்லை. காரணம் அர சின் வரிவசூல் பாதிக்கப்படும் என் பதுதான். இதனுடன் வெளியேறிச் செல்பவர்களை பெரிய ஆலைக ளில் வேலை செய்யும் நிர்வாக அதிகாரிகள் கூடுதல் சம்பளம் கருதி வேறொரு நிறுவனத்திற்குச் செல்லுவதுடன் ஒப்பிட்டு அறிக்கை வெளியிடுகிறது.

**இயற்கையின் சதியும் அரசின் - கிராமப்புற ஆதிக்க சக்திகளின் சுரண்டலும் ஒடுக்குமுறையும் இணைந்து இன்று பெரும்பாலான விவசாயிகளின் வாழ்க்கையை மத்தியகால பண்ணையடிமைகளின் நிலைக்குத் தள்ளியுள்ளன.**

சமுதாயக் கிணறுகளை அமைப்பது கண்மாய்களையும் அவற்றின் நீர்வரத்துப் பகுதிகளை யும் புனரமைப்பது என இந்நடவ டிக்கைகளின் மூலமே குறைந்த பட்ச பாசன வசதியை இப்பகுதி விவசாயிகளுக்கு ஏற்படுத்தித் தர முடியும். ஆனால் அரசோ இதில் அக்கறை கொண்டதாகத் தெரிய வில்லை. இராமநாதபுர மாவட்ட கண்மாய்களைப் பராமரிக்கத் தேவைப்படும் நிதியில் 40 சதவீ தம்தான் ஒதுக்கியுள்ளது. 'நிலச்சீர் திருத்தம்', தொழில்களை முன் னேற்ற 'பின் தங்கிய பகுதி' என அறிவிப்பது என்று பீற்றிக் கொண் டது. 'பின்தங்கிய பகுதி' சலுகைகளை முழு மையாக அறுவடை செய்து கொண்டபின் தனியார் முதலாளிகள் ஆலைகளை இழுத்து மூடுவதுதான் நடந்து வருகிறது. சொல்லிக் கொள்ளப்படும் நிலச் சீர்திருத் தமோ விவசாயிகளை மேலும் பஞ்சைக ளாக்கி கந்துவட்டி வலைக்குள்தான் சிக்க வைத்துள்ளது.

வெறும் நிலங்களை பிரித்துக் கொடுப் பதால் மட்டும் இந்த அவலத்தைத் தீர்த்து விட முடியாது. 'மூன்று ஏக்கர் நிலமும் சிறி தளவு பாசன வசதியையும் ஏற்படுத்தித் தாருங்கள்; நாங்கள் புதுக்கோட்டை மாவட் டத்தைச் சொர்க்க பூமியாக மாற்றிக் காட்டு கிறோம்' என்கிறார் ஒரு விவசாயி. இதனு டன் கூட கிராமப்புறங்கள் அனைத்திலும் நிலப்பிரபுக்களின் - கந்து வட்டிக்காரர்க ளின் சமூக, பொருளாதார ஆதிக்கம் ஒழிக் கப்பட வேண்டும்; இடைத் தரகர்களின் சுரண்டல் முறை நிர்மூலமாக்கப்பட வேண் டும்; பாசன வசதியுடன்கூட பிற அடிப் படை வசதிகளும் மான்ய உதவியுடன் சிறிய / நடுத்தர விவசாயிகளுக்கு வழங்கப் பட வேண்டும். உழைப்பவர்கள் தங்களின் தலைவிதியை தாங்களே நிர்ணயித்துக் கொள்ளும் அதிகாரத்தைப் பெற வேண் டும். அப்பொழுதுதான் இங்கு மட்டுமல்ல இந்தியாவெங்கும் துயருறும் மக்களின் வாழ்வை மாற்றியமைக்க முடியும். இதைத் தான் நாம் புரட்சியின்மூலம் நமது விவசா யிகளுக்கு ஏற்படுத்தித்தர வேண்டியிருக்கி றது.

● ரஹீம்

படிப்பகம்

www.padippakam.com




★ ''ஒரு பெண்ணை மானபங்க படுத்துவதோ அல்லது கழ்ப்பழிப்பதோ அல்லது இம்சிப்பதோ இந்திய அரசியலமைப்பு சட்டத்தை அவமதிப்பதாகாது; பெண்ணுரிமைகளைப் பறிப்பதும் ஆகாது. அதனுடன் இப்படிச் செய்தவர்களை தண்டிக்க மட்டுமே சட்டத்தில் இடம் உள்ளது.'' இவ்வாறு நீதிமன்றத்திலேயே திருவாய் மலர்ந்துள்ளவர் ஒரிஸ்ஸா மாநில பஞ்சாயத்து துறை அமைச்சர் தாமோதார் ரௌத். இவர் பஸந்திபரா எனும் பஞ்சாயத்து சபை தலைவியை மானபங்கபப் படுத்தியுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளவர். மாநில முதல்வர் பிஜு பட்நாயக்கோ குற்றச்சாட்டு வெளிவந்த பொழுதே 'அவர் ஒரு ஆண்மகன்' எனக்கூறி பச்சையாகவே தனது வக்கிர ஆணாதிக்க புத்தியை வெளிகாட்டிக் கொண்டார்.

★ ஒரு அமெரிக்க டாலர் கட்டணமாகச் செலுத்தினால் ஒரு நிமிடம் வரை தொலைபேசியில் பாலுணர்வு வக்கிரங்களை எதிர்முனையில் உள்ள பெண் கூறக் கேட்கலாம். பல தனியார் கம்பெனிகள் கடுமையான போட்டியினூடே வருடம் ஒன்றுக்கு 12000 கோடி ரூபாய் வருமானம் பெற்றுத்தரும் தொழிலாக இந்த வக்கிர வியாபாரம் தற்பொழுது அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. குடியேறிய இந்தியர்களும் இத்தொழிலில் உண்டு. ஜப்பானிலோ பயன்படுத்தப்பட்ட பெண்களின் உள்ளாடைகளையும் பாலுணர்வு - ஆபாச புகைப்படங்களையும் விற்கும் நிறுவனங்கள் புற்றீசல் போல் பெருத்து வருகின்றன. குறிப்பாக பள்ளிகளின் அருகிலேயே இதற்கான கடைகள் திறக்கப்பட்டு வருவதுடன், 15-லிருந்து 20 வயதுக்குள்ள மாணவ - மாணவிகள்தான் இச்சீரழிவிற்கு முதல் பலியாகின்றனர்.

★ ''வயதுக்கு வந்த ஆண் - பெண் இரு பாலரில் 9 கோடி பேர் சுமார் 50 சதவீதத்தினர் தாய் மொழியான ஆங்கிலத்தைத் தெளிவாக உச்சரிப்பு பிழையின்றி தொடர்ச்சியாகப் படிக்க இயலாது; இவர்களில் 40 சதவீதத்தினருக்கு சாதாரண கூட்டல் கழித்தல் கணக்குகளைப் போட முடியாது; ஆரம்பநிலை தொழில்நுட்ப அறிவுகூட இவர்களில் பெரும்பான்மை யோர்க்குக் கிடையாது. ஆனால் இவர்களின் கல்வித் தகுதியோ பள்ளி இறுதி யாண்டு முதல் பட்டப்படிப்பு வரை. இந்த 9 கோடி பேரில் 40 சதவீதத்தினர் வம்சா வழியாக வெள்ளை இனத்தைச் சேர்ந்தவர்கள்; பிறர் அமெரிக்காவிலேயே பிறந்து வளர்பவர்கள்''. இவை யாவும் தனது நாட்டு மக்களின் கல்வி மற்றும் அறிவுத்தரம் பற்றி அமெரிக்க அரசின் ஆய்வு முடிவுகள். அமெரிக்காவின் வெளிப்பகட்டில் மயங்கிப்போயுள்ளவர்களுக்கு நிச்சயமாக அதிர்ச்சியளிக்கக் கூடிய ஒன்றிது.

★ நாலாயிரம் தொழிலாளர்கள் வரை வேலை பார்த்து வந்த, பம்பாயைச் சேர்ந்த மிகவும் பெரிய நிறுவனம் சீனிவாச துணி ஆலை. இலாபத்தில் இயங்கி வந்த போதும் இந்த ஆலை 1984-ல் இருந்து மூடப்பட்டது. ஆனால் இதுநாள்வரை வேலை பார்த்துவந்த தொழிலாளர்கள் ஒருவருக்கேனும் தாங்கள் வழங்க வேண்டிய ஒய்வூதிய நலன்களை Gratuity இந்நிறுவனம் வழங்கவில்லை. இத் தொழிலாளர்களில் 500 பேர் இறந்த போய்விட்டனர். பெரும்பாலோர் நுரையீரல் பாதிக்கப்பட்டே இறந்து போயுள்ளதுடன், ஆறு தொழிலாளர்கள் இரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இருந்தாலும் அரசு இதுவரை கண்டு கொண்டதாகவே தெரியவில்லை.

நரவேட்டையில் தப்பிப் பிழைத்த அப்பாவி இளம்பெண் லட்சுமி



★ சென்ற ஆகஸ்டில் மே.வங்களாத்திலுள்ள சுகந்திஹி எனும் கிராமத்தைச் சேர்ந்த ஐந்து மலை வாழ் ஜாதியினர் சூனியக்காரர்கள் என முத்திரை குத்தப்பட்டு அடித்துக் கொல்லப்பட்டுள்ளனர். கிராமத் தலைவரின் தம்பிக்கு வந்த நோய் குணமாகாததற்குக் இவர்கள்தான் காரணம் எனக் கூறப்பட்டு இக்காட்டுமிராண்டித்தனம் அரங்கேறியுள்ளது. இக் கிராமம் மால்டா மாவட்டத் தலை நகரான மால்டா நகரத்திலிருந்து பத்தே கிலோ மீட்டர் தூரத்தில் தான் உள்ளது. இந்த வருடந்தான் கடந்த எட்டு மாதங்களில் மட்டும் இம்மாநிலத்தில் 14 பேர் இக் கொடுமைக்குப் பலியாகியுள்ளனர். இந்த ஏழு வருடங்களில் சூனியக்காரர்கள் என அடித்துக் கொல்லப்பட்ட 58 பேரில் பெண்கள் 51 பேர். 'சிறிய கிராமங்களில் கூட எங்கள் அமைப்பு உள்ளது; பஞ்சாயத்து தேர்தலை முறையாக நடத்திவரும் மாநிலம் நாங்கள் மட்டும்தான்' எனப் பீற்றிக் கொள்ளும் 'மார்க்சிஸ்டு'கள் இதற்கு என்ன பதில் கூறப் போகிறார்கள்?

★ சமீபத்தில் நடந்த வர்த்தக மற்றும் வரி விதிப்பு பொது ஒப்பந்த ஸ்தாபனத்தின் (GATT) பேச்சுவார்த்தையின் பொழுது அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் பெண்கள் அணியும் உள்ளாடைகளையும் 'ஸ்காட்ச்' என்ற உயர்ரக மது பானத்தையும் இறக்குமதி செய்து கொள்ள இந்தியாவை நிர்ப்பந்தித்துள்ளன. இந்தியா 'ஸ்காட்ச்' மதுபானத்தை இறக்குமதி செய்து கொள்ளாவிடில், இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களை நாங்கள் மறுத்துவிடுவோம் என ஐரோப்பிய நாடுகள் மிரட்டியுள்ளன. ஒப்பந்தப்படி இந்நாடுகள் இந்தியாவுக்கு இரசாயன மற்றும் மருந்துப் பொருட்களைத்தான் ஏற்றுமதி செய்ய வேண்டும். அதை விடுத்து 'இப்படி மிரட்டுவது நமது தன்மானத்திற்கு விடப்பட்டுள்ள சவால்; நமது அந்நியச் செலாவணியைச் சூறையாடும் மிகப் பெரிய ஊழல்' என சில பத்திரிகையாளர்கள் ஏகாதிபத்தியங்களின் இந்த ஆதிக்க - சுரண்டல் நடவடிக்கையை அம்பலப்படுத்தியுள்ளனர்.


★ ஹைதராபாத் போலீஸ் பால்குடி கூட மறவாத குழந்தையை லத்தியால் அடித்தே கொன்றுபோட்டுள்ளது. சோபியா பேகம் என்ற பெண்ணை அவரது மூன்று குழந்தைகளுடன் விசாரணைக்காக காவல் வைத்து சித்திரவதை செய்துள்ளது. அவர் தனது குழந்தைக்குப் பால் கொடுத்துக் கொண்டிருக்கும் பொழுதே தாக்கத் தொடங்க, அடிகள் குழந்தையின் மீது பட்டவுடனேயே இறந்து போய்விட்டது. உண்மையை அறிந்த போலீஸ் அப்பெண்ணை நைச்சியமாகப்பேசி வீட்டுக்கும் அனுப்பிவிட்டது. குழந்தை இறந்து போனதை அதன் பின்னரே அறிந்த அந்தப் பெண்ணும் பகுதி வாழ் மக்களும் காவல் நிலையத்தை முற்றுகையிட்டுள்ளனர். அவர்களையும் லத்தியாலும் துப்பாக்கி மட்டைகளாலும் அடித்துத் துரத்திவிட்டு சட்டம் - ஒழுங்கைக் காப்பாற்றிவிட்டதாக அறிக்கைவிட்டு பீற்றிக் கொண்டுள்ளது ஆந்திர போலீசு.

★ சென்னைப் பெருநகர குடிநீர் வாரியம் கடனைத் திருப்பி அடைக்கும் அளவிற்கு நிதி நிலைமையைச் சீர்செய்ய நடவடிக்கை எடுத்தால்தான் அடுத்த தவணை கடன் வழங்கப்படும் என அறிவித்துள்ளது, உலக வங்கி. அவ்வங்கி எள் என்றால் எண்ணெய்யாக நிற்கும் ஆட்சியாளர்கள் தண்ணீர் வரியை உயர்த்த உடனே திட்டம் தீட்டிவிட்டனர். இதன்படி தண்ணீர்க் கட்டணம் ரூ.12/-லிருந்து குறைந்தபட்சம் 50 ஆகவும் தண்ணீர் வரி 8%-லிருந்து 12% ஆகவும் உயர்த்தப்படும். தண்ணீரே வராத பொழுது எதற்குத் தண்ணீர்க் கட்டணம்? ●

படிப்பகம்

www.padippakam.com





# இதுதான் இன்றைய இந்தியா

சென்னை மயிலாப்பூர் குளத்தில் தெப்பத் திருவிழாவிற்காகக் குடிநீரைக் கொட்டி வீணாக்கிய கூட்டம் இப்பொழுது மழைக்காக 'வருணஜெபம்' செய்யும் காட்சியிது. 150 வேத விற்பன்னர்கள், 25 நாதஸ்வர வித்வான்கள், திருவிளக்கு பூஜை. குன்னக்குடியின் இசை நிகழ்ச்சி, அன்னதானம் என தடபுடலாக சங்கராச்சாரியின் அருளாசியோடு வருண பகவானின் கருணைக்காக வேண்டி நிற்கிறது. ஒரு முறையல்ல; இருமுறையல்ல. மழைக்காக கோவில்களில் விசேஷ பூஜை என்ற பெயரில் பாலையும் தயிரையும் கொட்டுவது; கடலிலும் குளத்திலும் இறங்கி மழைக்காக ராக ஆலாபனைகளை இசைப்பது என அரசின் அறநிலையத்துறையே முன்னின்று பலமுறை இந்த அஞ்ஞான அபத்தங்களை நடத்தி வருகிறது. வறட்சி தாக்கும் ஒவ்வொரு வருடமும் இந்தப் பார்ப்பன மூடக் கூத்து அரங்கேறி அம்பலமாகி வருகிறது. இருந்தாலும் பார்ப்பனக் கும்பலும் அதற்கு வால் பிடிக்கும் ஆட்சியாளர்களும் இதனைத் தாங்கி பிடிப்பதைக் கைவிட்டதாகத் தெரியவில்லை.

இது விஞ்ஞான முறையில் செயற்கை மழையை சென்னையில் பெய்விக்க வந்துள்ள விமானம். அஞ்ஞான நடவடிக்கைகளால் பருப்பு வேகாது எனத் தெரிந்து வைத்திருக்கும் ஆட்சியாளர்களின் கொள்ளைக்கானத் திட்டமாக இது மாறிப் போயுள்ளது. செயற்கை மழை பெய்ய வேண்டுமானால் குறிப்பிட்ட அளவு மேகப் பரப்பு குறிப்பிட்ட உயரத்தில் இருக்க வேண்டும். பருவகால மாறுபாடுகள் காரணமாக மேகக் கூட்டம் இல்லாததால் இத்திட்டம் எதிர்பார்த்த பலனைத் தரவில்லை. ஆனால் ஜெயா அரசோ இத்திட்டத்திற்கு 1 கோடி ரூபாய் செலவழித்துள்ளதாகவும் இனி நான்கு மாதம் ஏரிப்பகுதிகளில் மழை பெய்யும் என்றும் புளுகி வருகிறது. எம்.ஜி.ஆர். ஆட்சியின் போது இதற்காக ஒரு விமானம் வாங்கப்பட்டிருந்தும் தற்பொழுது இதற்காக அமெரிக்காவிலிருந்து விமானத்தைத் தருவித்துள்ளது. ஏற்கனவே நெய்வேலியில் இருந்து லாரி மூலம் தண்ணீர் கொண்டு வருவதில் கமிஷன் பெற்றுக் கொள்ளையடித்து வரும் ஜெயா கும்பல், லஞ்சம் பெற்று உரிமமே இல்லாத நபர்களை தண்ணீர் வண்டிகளுக்கு ஓட்டுநர்களாக நியமித்துள்ளது. இதனால் சென்னையில் தண்ணீர் வண்டியில் அடிபட்டு இறப்போரின் எண்ணிக்கை நாளொன்று ஒருவர் என்ற விகிதத்தில் பெருகிவருகிறது.

ஒரு புறம் பகுத்தறிவுக்கு ஒவ்வாதவற்றையும் பார்ப்பன மூடக் கருத்துக்களையும் தூக்கிப் பிடிக்கும் இந்தப் பிற்போக்கு கும்பல் மறுபுறம், மக்களின் வரிப்பணத்தைக் கொள்ளையடிப்பதற்காகவே விஞ்ஞான சாதனங்களைக் கேடாகப் பயன்படுத்துகிறது. ஏய்த்துப் பிழைப்பதையே வாடிக்கையாகக் கொண்டுவிட்ட இந்த மக்கள் விரோத கூட்டத்திற்கு நாம் பாடம் புகட்டப் போவது எப்போது?




படிப்பகம்